




# தமிழரசு

1-1-1991 ரூ.1



கீழை மேலை நாடுகளுடன் இந்திய வாணிகம் மற்றும் பண்பாட்டு உறவு பற்றிய அருங்காட்சியை - **சென்னையில்** மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார் (*19.12.90*).



# இந்த இதழில்...


காவிரிப்பூம்பட்டினத்தில் அகழ்வாராய்ச்சி தமிழக அரசு மேற்கொள்ளும் —மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 2

சென்னையில் சிறுதொழில் முனைவோருக்கும், பெரிய தொழிலகங்களுக்கும் பரிசுகள், விருதுகள் வழங்கும் விழா ... 5

கல்வித்துறையில் அரசு ஆற்றிவரும் அரும்பணிகள் —மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் ... 9

அரும்பாக்கத்தில் ஓர் அரும்பணி ... 14

பாவேந்தர் குடும்பத்தாருக்குப் பரிவுத்தொகை வழங்கு விழா ... 17

அடுக்கிக் கொண்டே போகலாம் இந்த ஆட்சியில் ஆண்டிரண்டின் சாதனையை (கருத்துப் படங்கள்) ... 24

தருமபுரி மாவட்டத்தில் பட்டு வளர்ச்சி ... 26

திருச்சி மாவட்டத்தில் ரூ.9 கோடியில் 564 குடியிருப்புகளுக்குக் குடிநீர்த் திட்டம் ... 29

சேலம் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் ... 31

வளரும் வேளாண்மை ... 32

ஊரக வளர்ச்சி-ஒரு கண்ணோட்டம் ... 33

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பால்வளம் ... 38

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் சிறுசேமிப்பில் சாதனை ... 40

உலகத்திரைப்பட விழா ... 42

உலகச் சுற்றுலா ஆண்டு - 1991 ... 44

வேடந்தாங்கல் ... 48


## அரசு அலுவலருக்குப் போனஸ்

அரசு அலுவலருக்கு 15 நாள் போனஸ் வழங்கப்படும். 15 நாள் ஈட்டிய விடுப்பைப் பணமாக்கும் முறையும் தொடரும். மத்திய அரசு ஊழியருக்கு 27 நாள் போனஸ் இருக்கிறது. ஆனால், அவர்களுக்கு ஈட்டிய விடுப்பைப் பணமாக்கும் முறை கிடையாது. இந்த 15 நாள் போனஸ் மற்றும் 15 நாள் ஈட்டிய விடுப்பைப் பணமாக அளிப்பதால், ஒரு மாத போனஸிற்கு இது ஈடாகிறது. இந்த போனஸினால் குறைந்த பட்சம் 518 ரூபாயும், அதிக பட்சம் 800 ரூபாயும் கிடைக்கும். இந்த ரூபாய் தவிர 15 நாள் ஈட்டிய விடுப்பை ஒப்படைப்பு செய்வதால், கிடைக்கிற பணமும் சேருகிறது.

போனஸ் முறைப்படியும், விதிகளின்படியும் சில்லறைப் பணியாளர்கள், அதைப் போலவே 2,500 ரூபாய்க்கு மேல் மாத ஊதியம் பெறுகிறவர்கள்- இந்த இரு சாராரும் இந்த போனஸால் பயன் பெற இயலாததைக் கருத்தில் கொண்டு அவர்களுக்குக் கடந்த ஆண்டு பொங்கல் பரிசாக 400 ரூபாய் தரப்பட்டதை இந்த ஆண்டு 450 ரூபாயாக உயர்த்தித் தரப்படுகிறது.

மத்திய அரசில் சில்லறைப் பணியாளர்களுக்கு போனஸ் கணக்குப்படி அவர்களுக்கு 262 ரூபாய் கிடைக்கிறது. நாம் 450 ரூபாய் கொடுக்கிறோம். 2,500 ரூபாய்க்கு மேல் ஊதியம் பெறும் மத்திய அரசு ஊழியர்களுக்கு போனஸ் கிடையாது. நாம் அவர்களுக்கு 450 ரூபாய் கொடுக்கிறோம். இந்த போனஸ் அறிவிப்பினால் அரசுக்கு சுமார் 70 கோடி ரூபாய் செலவாகும்.

— முதல்வர் கலைஞர்


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

மார்கழித் திங்கள் - 17

மலர்:21 1-1-1991 இதழ்:13

# காவிரிப்பூம்பட்டினத்தில் அகழ்வாராய்ச்சி

சென்னைத் தலைமைச் செயலகத்திலுள்ள கோட்டை அருங்காட்சியகத்தில், மத்திய அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை சார்பில், கீழை மேலை நாடுகளுடன் இந்திய வாணிக மற்றும் பண்பாட்டு உறவு (கடல் வழி) குறித்த சிறப்புக் கண்காட்சியின் தொடக்கவிழா 19.12.90 அன்று நடைபெற்றது.

விழாவில் மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை இணைச் செயலர் திரு ஆர்.சி.திரிபாதி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். யுனைஸ்கோ பிரதிநிதி மெடிட்டியா செர்வின் இவ்விழாவில் கலந்து கொண்டு பேசினார். விழா முடிவில், இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறைத் தலைமை இயக்குநர் திரு. எம்.சி.ஜோஷி நன்றி நவின்றார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கண்காட்சியைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''இனிமையும், எழிலும் சரித்திர முக்கியத்துவமும் வாய்ந்த தமிழகத்திற்கு வருகை புரிந்திருக்கிற உங்களை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். பல்வேறு நாடுகளிலிருந்து, பட்டு வணிகப் பண்பாட்டு நெறி முறைகளையும், தொல் பழங்காலச் சாலைகளையும், கடல்வழிகளையும் ஆராயவேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு, கப்பல் பயணம் மேற்கொண்டு வருகை புரிந்துள்ள தொல்லியல் அறிஞர்களாகிய உங்களைப் பாராட்டுகிறேன். அன்றாட அரசியல் அலைகள் வாழ்க்கையை அலைக்கழித்துக் கொண்டிருந்தாலும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த சீன வாணிகம், ரோமாபுரி வாணிகம் முதலிய வாணிக வளங்களை அறிவதற்குத் துணை நிற்கும் தொல் பழங்காலச் சுவடுகளை ஆராய்ந்து அறிய வேண்டுமென்ற உங்கள் ஆர்வம் நினைக்க நினைக்கப் பெருமிதத்தைத் தருவதாகும். எனக்கும் அத்தகைய ஆர்வமுண்டு.

### எகிப்து நாட்டில் தமிழ்

''எழுத்தையே பணியாகக் கொண்டுள்ள நான் பல்வேறு நெடுங்கதைகளை எழுதியிருந்தாலும், ரோமாபுரிப் பாண்டியனை நான் எழுதியபோது பழந்தமிழர்களின் கடல் வாணிகம் பற்றிய கருத்துக்களைத் திரட்டியதை இப்போது எண்ணிப் பார்க்கிறேன். ரோமாபுரிப் பாண்டியன் என்னும் என்னுடைய நெடுங்கதையில் சர்.மார்டிமர் வீலர் என்ற அகழ்வாராய்ச்சியாளர் புதுச்சேரியின் அருகே அரிக்கமேட்டில், 'கண்டெடுத்த ரோமானியப் பொன் நாணயங்களைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறேன். அகஸ்டஸ் குடும்பத்தைச் சேர்ந்த ஜுனோ என்ற ஒரு யவனப் பெண்மணி எகிப்து நாட்டில் தமிழ் கற்றுக் கொண்டாள் என்று கற்பனையாக அப்போது குறிப்பிட்டிருந்தேன். அது ஒருவேளை கற்பனையோ என்று நான் எண்ணி வந்தாலும், ஒரு கிரேக்க நாடகத்தில் ஓரிரு பகுதிகளில் அமைந்திருந்த தொடர்கள் கிரேக்கர்களால் கண்டறியப்படாத ஒரு மொழியில் இருந்ததாகவும், அந்த மொழி கன்னட மொழியென்று சில அறிஞர்களும், தமிழ் தான் என்று சில அறிஞர்களும் இப்போது எழுதியிருப்பதைப் பார்த்து என்னுடைய கற்பனை சரியே என்று எண்ணி மகிழ்ந்தேன். என்னுடைய கற்பனையை மேலும் உறுதி செய்யும் வகையில் எகிப்து நாட்டுக் கடற்கரையில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓடுகளில் கண்ணன், சாதன் என்ற தமிழ்ப் பெயர்கள் எழுதப்பட்டிருப்பதைத் தொல்லியல் அறிஞர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

## இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:

### ரோம் நாட்டில் தமிழக முத்து

''சீனப்பட்டு, சீனக் கற்கண்டு, சீனவெடி என்ற தொடர்கள் இன்றும் தமிழ்நாட்டில் வழக்கத்தில் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தில் தமிழர்கள் தினமும் மற்றும் குடும்ப விழாக்களிலும் பட்டாடை அணியும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தார்கள். எளிய வீடானாலும் சரி, செல்வந்தர் வீடானாலும் சரி, திருமணப் பெண் பட்டாடையில் தான் தோற்றமளிப்பது என்ற வழக்கம் இன்றும் தமிழகத்தில் இருந்து வருகிறது. தமிழகத்தில் பட்டு நெசவு முறை, இயற்கையான பட்டுப்பூச்சிகள் இழையிலிருந்து எடுக்கப்பட்டதா? செயற்கை நூலிழையால் அந்நாளிலேயே செய்யப்பட்டதா என்ற கருத்துக்கூட இன்னும் ஆராய்ச்சி நிலையிலேயே இருக்கிறது. கற்றாழை, வாழை, எலிமயிர் முதலிய பொருட்களிலிருந்து எடுத்த நெசவைப் பழங்காலத்தில் தமிழ் நாட்டு மக்கள் அறிந்திருந்தார்கள் என்ற குறிப்பும் சொல்லப்படுகிறது. ரோமாபுரி நாட்டுப் பேரரசிகள் தமிழகத்தினுடைய நறுமணப் பொருட்களுக்காக ஏங்கியிருந்தது பற்றியும், தமிழகத்தினுடைய முத்துக்களை வாங்குவதனாலேயே ரோம் நாட்டு நிதி நிலைமை சுருங்குவதாகக் குறிப்புகளையும் அறிஞர்கள் எழுதியிருப்பதை நாம் அறிவோம்.

### கப்பல் வாணிபம்

''கடல் கடந்து வாணிகம் செய்வதிலும், கடற்போர் புரிவதிலும் தமிழ்

# தமிழக அரசு மேற்கொள்ளும்

## முதல்வர் கலைஞர்

மக்கள் நிகரற்றவர்களாக விளங்கினார்கள். தமிழ்நாட்டிலிருந்து பரிமளப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டும், அயல்நாடுகளிலிருந்து அரிய பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டும், கப்பல் வாணிபம் உயர்ந்த நிலையில் திகழ்ந்தது. தமிழகத்திலிருந்து மிளகு போன்ற நறுமணப் பொருட்கள், உயர்ந்த ரகக் கல்மணிகள் போன்ற பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. கப்பற் போரில் மாண்ட இளம்வழுதி என்ற பாண்டிய மன்னர் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்றே குறிக்கப் பட்டார். கடற்கொள்ளையர்களைப் புறமுதுகிட்டு ஓடச்செய்து, கப்பல் வாணிகத்தை நிலைநிறுத்திய சேர வேந்தன் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் என்று கூறப்படுகிறான்.

''நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி வளி தொழில் ஆண்ட உரவோன் மருக'' (புறம் 66) என்று முக்கடலிலும் மரக்கலன்களைச் செலுத்திப் புகழ்பெற்ற சோழவேந்தன் கரிகாற் பெருவளத்தானைப் புலவர் புகழ்ந்து பாடியுள்ளார். கடற்காற்றின் திறனறிந்து கட்டுப்படுத்தும் கலை தெரிந்தனர் என்ற குறிப்பைப் புறநானூற்றுப் பாடல் தெரிவிக்கின்றது. அந்நாளில் எகிப்து நாட்டை ஆட்சி செய்த தாலமிகள் செங்கடல் வழியாகத் தமிழ்நாட்டுக்கு வழியொன்று கண்டிருந்தனர். யவனர்கள் அதன் பின்னர்தான் தமிழ்நாட்டோடு வாணிகம் செய்யத் தலைப்பட்டனர்.

''இப்பாலசு என்னும் கிரேக்கன் நம்நாட்டில் வீசும் தென்மேற்குப் பருவக்காற்று நிலையையும், வடகிழக்குப் பருவக்காற்று நிலையையும் கண்டு உரைத்தான் என்றும், அதன் பின்னரே யவனக்கடல் வாணிகம் நம் நாட்டோடு பெரிதும் வளம்பெற முடிந்தது என்றும், அதனால் பருவக் காற்றுகளையும், இப்பாலசு என்றே வழங்கினர் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.

''யவனர்கட்குப் பல்லாண்டுகளுக்கு முன்பிருந்தே அரபிக்கடலில் அரபியரும், இந்தியரும் கலம் செலுத்தி வாணிகம் செய்து வந்தனராதலால், இப்பருவக்காற்றை நம் நாட்டு மக்கள் அறியாதிருந்தனரென நினைத்தற்குச் சிறிதும் இடமில்லை. இக்கடற்காற்றின் இயல்பறிந்து, பண்டைத் தமிழ் மக்கள் கடலில் கலஞ்செலுத்தி மேம்பட்ட செயலைத் தான் வளிதொழிலாண்ட என்ற வெண்ணிக் குயத்தியார் பாடல் சுட்டிக் காட்டுவதாக அறியலாம்.

''கடலகப் பெரும்படைத் தலைவன் என்று கூறப்படும் கப்பற்படைத் தளபதி கி.பி. 3-ஆம் நூற்றாண்டளவில் பாண்டிய நாட்டில் பணி புரிந்துள்ளான் என்பது கல்வெட்டுச் சான்றுகளால் புலனாகிறது. தமிழகத்திற்கும், உரோமாபுரிக்கும் கி.மு. முதல் நூற்றாண்டு முதல் வாணிகம் சிறந்து விளங்கியதை அகழ்வாய்வுகள் புலப்படுத்துகின்றன.

''ரோமானிய நாட்டினர் தமிழகத்தின் கடற்கரையோரங்களில் வாணிகம் பொருட்டு இல்லங்கள் அமைத்துத் தங்கியிருந்ததும் தெரியவருகிறது. ரோமானியர் கொண்டுவந்த நாணயங்களில் சில, தமிழகத்தின் பல பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தென்பாண்டி நாட்டில் மருங்கூர்ப் பட்டினம் ஒரு சிறந்த துறைமுகமாக விளங்கியது. தற்காலத்தில் அது அழகன்குளம் என்ற பெயர் பெற்று விளங்குகிறது. அழகன்குள அகழ்வாய்வின் மூலம் தமிழகத்திற்கும், ரோமானிய நாட்டிற்கும் 2100 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கடல் வாணிகம் சிறப்புறத் திகழ்ந்



திருப்பதைத் தொல் பொருட்கள் மெய்ப்பிக்கின்றன.

**பண்பாட்டு உறவு**

''கூடாரத்து வேந்தன் வேண்டு கோளுக்கிணங்க, சோழ மன்னன் முதலாம் இராசராசன் நாகப்பட்டினத்தில் சூளாமணி விகாரம் ஒன்றினை அமைத்து, ஆனைமங்கலம் என்ற ஊரையும் கொடையாக அளித்துள்ளான். கங்கை கொண்ட சோழபுரம் அகழாய்வில் பழங்கால சீனநாட்டுப் பீங்கான் ஓடுகள் குறிப்பிடத் தகுந்த அளவில் கிடைத்துள்ளன. சீனர்களுக்கும், சோழப் பெருவேந்தர்களுக்கும் ஏற்பட்டிருந்த வணிக உறவு இதன்மூலம் புலனாகிறது. மேலும் கிழக்காசிய நாடுகளான பர்மா, ஜாவா, சுமத்ரா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட பல அரிய பொருட்கள் தற்போது ஆங்காங்கே கிடைத்து வருகின்றன. சீனநாட்டுக் காசுகள் தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையோரங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனவே, வாணிகம், பண்பாட்டு உறவு தமிழகத்திற்கும், மேலை நாட்டிற்கும், தென்கிழக்காசிய நாடுகளுக்கும் சிறந்த முறையில் நடைபெற்றுள்ளது என்பதை நாம் தக்க ஆதாரங்களுடன் நிறுவ முடிகிறது.

''இன்னும்கூட கன்னத்தில் கைவைத்துக் கொண்டு கவலைப்படுகிறவர்களைப் பார்த்தால், 'கப்பல் கவிழ்ந்தாற்போல் கன்னத்தில் கை வைத்துக் கொண்டிருக்கிறாயே' என்று கேட்கிற பழக்கம் மக்களிடையே இருந்து வருகிறது.

''கப்பலுக்குத் தமிழில் பதினேழு பெயர்கள் உள்ளன. அவை அம்பி, ஓடம், கட்டுமரம், கப்பல், கலம், சலகை, திமில், தெப்பம், தோணி, நாவாய், படகு, பரிசில், பாசணம், புணை, மரக்கலம், மிதவை, வங்கம் என்பனவாகும்.

''தமிழ்நாட்டில் கப்பலூர், கடலாடி என்னும் ஊர்கள் இன்னும் உள்ளன. கடல் வாணிகர்களுக்கு மாநா நாவாய் தன் (நாவாயகன்) என்ற குடும்பப் பெயர் இருந்தது. மிகப் பழைய காலத்தில் பட்டு வாணிகம் நடந்த சாலைகளையும், கடல் வழிகளையும் ஆராய்வதற்காகப் பல்வேறு நாடுகளிலிருந்து வருகை புரிந்திருக்கிற தொல்லியல் அறிஞர்களாகிய உங்களை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

''கடல் கொண்டதாகக் கருதப்படும் சோழர் தலைநகராகிய காவிரிப் பூம்பட்டினத்தை அகழ்ந்து காணும் முயற்சியைத் தமிழக அரசின் தொல் பொருள் ஆய்வுத்துறை மேற்கொள்ளவுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

''தமிழ்நாட்டு வாணிகத்தையும், இந்திய வாணிகத்தையும் சுட்டிக் காட்டுகின்ற அரும்பொருட்களையும், தகவல்களையும் இந்த அருங்காட்சியில் அமைந்திருக்கிறார்கள்.

''இந்தக் காட்சியில் உள்ள பொருட்கள் உங்களைக் கவரும் என்பதோடு உங்கள் ஆய்வுக்குத் துணைபுரியும் என்று வாழ்த்தி அருங்காட்சியகத்தைத் தொடங்கி வைக்கிறேன்.''

# வணிக உறவு, பண்பாட்டு உறவுக் கருத்தரங்கு

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சீனநாட்டுப் பட்டு வணிகர்கள், பட்டு மற்றும் வணிகப் பண்டங்களைப் பிற நாடுகளுக்கு வணிகம் செய்யும் எண்ணத்துடன் கடல் வழியாகவும், காடு, மலை, பாலைவனம், புல்வெளி முதலியவற்றைக் கடந்தும், அமைத்துக் கொண்ட நெடும்பாதை வரலாற்று அறிஞர்களால் 'பட்டுப் பெருவழி' என்று அழைக்கப்படுகிறது. அக்காலத்திய பாதையின் தன்மைகளை, சிறப்புக்களை உணரும் பொருட்டு, அப்பாதைகளின் வழியே மீண்டும் ஒரு கடல் பயணம் மேற்கொண்டு, வரலாற்று அறிஞர்களும், தொல்லியல் வல்லுநர்களும், மானிடவியற் பேராசிரியர்களும், பல்வேறு நாடுகளைச் சார்ந்த நண்பர்களும், தங்கள் பயணத்தினிடையே சென்னைக்கு 19.12.'90 அன்று வந்திருந்தனர்.

இப்பயணத்திற்காக ஓமன் நாட்டு அரசர் 'சுல்தான் காபூல்' ஒரு கப்பலை இக்குழுவினரின் பயனுக்காக ஒதுக்கிக் கொடுத்துள்ளார். அக்கப்பலின் பெயர், இந்தப் பயணத்தின் நோக்கத்தை விளக்கும் வகையில் 'அமைதிக் கப்பல்' என்றே அமைந்துள்ளது.

மார்க்கோபோலோவின் மாநகர் என்று அழைக்கப்படும் இத்தாலி நாட்டிலுள்ள வெனிசு நகரத்திலிருந்து பயணம் தொடங்கப்பட்டு, ஒசாகா, இத்தாலி, கிரீஸ், கோவா, கொழும்பு வழியாக சென்னைக்குப் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

உலக நாடுகளுக்கும் தமிழகத்துக்கும் இடையே பண்டு நிகழ்ந்த வணிக உறவு, பண்பாட்டு உறவு பற்றிய கருத்தரங்கு ஒன்றை மத்திய தொல் பொருள் ஆய்வுத்துறையும், இந்திய தேசிய கலைப் பண்பாட்டு நிறுவனமும் இணைந்து டிசம்பர் 20,21 ஆகிய நாட்களில் சென்னையில் நடத்தின. இந்தக் கருத்தரங்கில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 83 பிரதிநிதிகளும், இந்தியாவிலிருந்து 32 பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.



# சென்னையில் சிறுதொழில் முனைவோருக்கு விருதுகள் வழங்கும் விழா

சிறந்த சிறு தொழில் அதிபர்களுக்கும், ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் பெரிய தொழிலகங்களுக்கும் தமிழக அரசின் விருது வழங்கும் விழா 21.12.90 அன்று சென்னையில் தலைமைச் செயலகத்தில், நாமக்கல் கவிஞர் மாளிகையில் அமைந்திருக்கும் எழிலரங்கில் நடைபெற்றது. மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு, விருதுகளை வழங்கினார்.

மாநிலத்தில முதலிடம் பெற்ற தொழில் நிறுவனங்களுக்கு ரூ.10,000 ரொக்கப் பரிசும், பூமியைப் போன்ற உருண்டை வடிவம் கொண்ட கேடயங்களும் வழங்கினார். மாவட்ட அளவிலான பரிசு பெற்ற நிறுவனங்களுக்குத் தலா ரூ.3,000 வீதம் வழங்கினார்.

1987-ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி விருதுகள் 8 நிறுவனங்களுக்கும், 1988-ஆம் ஆண்டிற்கான விருதுகள் 9 நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன.

1989-ஆம் ஆண்டுக்கான மாநில விருது ஒரு நிறுவனத்திற்கும், மாவட்ட விருதுகள் 20 நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன.

தொழில்துறைச் செயலர் திரு. பூரணலிங்கம், இ.ஆ.ப., தமிழ்நாடு சிறுதொழில் கழகத் தலைவர் திரு.டி.எஸ். தனபாலன், பொறியியல் தொழில் கூட்டமைப்பின் தலைவர் திரு. என். குமார், ஏற்றுமதி அமைப்புகள் பெடரேஷன் தலைவர் திரு. வெள்ளையன் ஆகியோரும் பேசினர். தொடக்கத்தில் தொழில் மற்றும் வர்த்தகத்துறை இயக்குநர் திரு. ஜே.எஸ். சியம், இ.ஆ.ப. வரவேற்றார்.

சிறு தொழில் முனைவோருக்கும் தமிழக அரசின் பரிசுகள் மற்றும் ஏற்றுமதியில் முதன்மை வகிக்கும் சிறிய நடுத்தர மற்றும் பெரிய தொழிலகங்களுக்கும் விருதுகளை வழங்கி முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றும்போது குறிப்பிட்டதாவது:

இன்று நடைபெறுகின்ற இந்த விருது வழங்கும் விழா இந்த ஓராண்டு காலத்தில் இரண்டாவது முறையாக நடைபெறுகின்ற நிகழ்ச்சி என்று எனக்கு முன்னால் இங்கே பேசியவர்களெல்லாம் குறிப்பிட்டு இருக்கின்றார்கள். 17.3.90 அன்று நடைபெற்ற விழாவில் சிறுதொழில்களுக்கு 1987-ஆம் ஆண்டுக்குரிய மாநில அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலும் தரப்படவேண்டிய பரிசுகளும், பெரிய நடுத்தர மற்றும் சிறு தொழில்களுக்கு அவற்றின் ஏற்றுமதி சிறப்புக்காக 1986-ஆம் ஆண்டுக்குரிய மாநில அளவிலான பரிசுகளும் அந்த நிகழ்ச்சியிலே தான் வழங்கப்பட்டன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

எனவே, கிடப்பிலே போடப்பட்ட அல்லது செயல்படாமலிருந்த பலவற்றைச் செயல்பட வைக்க வேண்டும்; அதன் காரணமாக இந்த மாநிலம் எல்லா வகையிலும் வளம்

பெற்றுச் செழித்திட வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு இந்த அரசு காரியங்களை ஆற்றிவருகிறது என்பதை இங்கே குழுமியுள்ள யாரும் மறுக்க மாட்டீர்கள் என்று நான் திடமாக நம்புகின்றேன். சில வற்றை, இனிமேல் பயன்படாது என்று ஒதுக்கப்பட்டவைகளைக் கூட, பயன்படுத்திப் பார்ப்போம் என்று சோதனை செய்கின்ற ஒரு அரசாக இந்த அரசு இன்றைக்கு விளங்கிக்கொண்டிருக்கிறது.

குறிப்பாக வீராணம் திட்டம்- அந்தத் திட்டம் நேர்த்தியான திட்டம் அதை நிறைவேற்றலாமென்று 76-க்குப் பிறகு வந்து கவர்னர் ஆட்சியிலே கூட, கவர்னர் ஆட்சி யிலே அமைக்கப்பட்ட அந்தக் குழு சிபாரிசு செய்து இருந்தாலும், அது கிடப்பிலே போடப்பட்டது. பிறகு தெலுங்கு கங்கைத் திட்டம் தொடங் கப்பட்டு அதற்கும் பெரும் ஒய்வு தரப்பட்டு இந்த ஆட்சி மீண்டும் வந்தபிறகு அந்தத் திட்டம் மிக வேகமாகச் செயல்படத் தொடங்கி யிருக்கிறது என்பதை அறிவீர்கள். வீராணம் திட்டத்தை மீண்டும் செயல் படுத்தவேண்டிய அவசியம் இல்லை என்று இந்த அரசு உணர்ந்து, அதற்கென செய்யப்பட்ட குழாய்கள் சாலை ஓரங்களில் ஏழை எளிய மக் களுக்கு இப்பொழுது தங்குவதற்கு வசதியான இல்லங்களாக மாறிக் கொண்டிருக்கின்றன என்பதை அறிந்து, அவர்களுக்குப் புதிய வீடுகள் கட்டித் தரலாம், இந்தக் குழாய்களை நல்ல முறையிலே பயன் படுத்தலாம் என்று ஆராய்ந்து எண்ணூர் பகுதியிலே கடல் அரிப் பைத் தடுப்பதற்காக அந்தக் குழாய் களை இப்பொழுது பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதற்காகப் பரிட்சார்த்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏடுகளிலே அந்தப் படங்களைக் கூடக் கண்டி ருப்பீர்கள்.

### எழில்மிகு கடற்கரை

இன்னொன்றையும் சொல்ல விரும்புகின்றேன். நண்பர் வாசு போன்றவர்களுக்கெல்லாம் பிடிக்கும் என்ற காரணத்தால்; சென்னைக் கடற்கரை உலகத்திலேயே போற்றப் படுகிற-புகழப்படுகிற கடற்கரைகளில் இரண்டாவது கடற்கரையாகும். அந்தக் கடல் பெருவெளி அசுத்த முற்ற கடற்காற்றை வாங்கச் செல்லு கின்றவர்கள் சிரமங்களை அனுப விக்கின்ற வகையிலே இருந்ததை- இன்றல்ல 1975-ஆம் ஆண்டே உணர்ந்து, பல்லாயிரக்கணக்கான இலட்சக்கணக்கான மக்கள் பல் லாண்டுக் காலமாக அந்த வெண் மணலில் நடமாடியும், உட்கார்ந்தும், இருந்த காரணத்தினால், அந்த மணல் களெல்லாம் பொடி மணல்களாகிப் போய், அமர்ந்தால் நம்முடைய ஆடையிலே ஒட்டிக் கொள்கின்ற அழுக்குத் துகள்களாக மாறிவிட்டதை எண்ணி, அன்றைக்கு நானும் நம் முடைய நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் ஒரு யோசனையைச் செய்து கீழேயிருக்கின்ற பெரு மணலையெல்லாம் மேலே கொண்டு வர புல்டோசரைப் பயன்படுத்த லாம் என்று எண்ணினோம். ஆனால் 76-இல் டெல்லியிலிருந்து பயன் படுத்தப்பட்ட புல்டோசர், ஆட்சி யையே அகற்றி விட்ட காரணத் தினால், அந்த புல்டோசரை நாங்கள் பயன்படுத்த முடியவில்லை சென்னைக் கடற்கரையில்.

இப்போது நீங்கள் பார்க்கின் றீர்கள், பத்திரிகைகளிலே இன்றைக் குப் படங்கள் - எத்தனை புல்டோ சர்களைப் பயன்படுத்த முடியுமோ அத்தனைப் புல்டோசர்களையும் பயன்படுத்தி வெகு விரைவில் சென்னைக் கடற்கரையிலே இருக் கின்ற புழுதி மணல்களெல்லாம் கீழே போகவும், கீழே இருக்கின்ற பெரு மணல்களெல்லாம் மேலே வரவுமான ஒரு புரட்சியை, சென்னைக் கடற்கரை மணலிலே செய்வதற்கு ஆணையிடப்பட்டு அந்தக் காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

புரட்சி என்பது இது தான். புரட்சி என்பது தலைகீழாக ஒரு மாற்றத்தைக் கொண்டுவருவதுதான் புரட்சி. அது தொழிற் துறையிலும் தேவை என்று இந்த அரசு கருதுகிற காரணத்தால் தான் நீங்கள் எல்லாம் இந்த மன்றத்திற்கு நான்காவது அல்லது ஐந்தாவது தடவையாக வந்து எங்களைச் சந்திக்கின்றீர்கள்.

இந்த மண்டபம் பழைய மண்ட மாக இருந்தபோதும் வந்தீர்கள், இந்திய ஒருமைப்பாடு மாநாட்டிற் காக இந்த மண்டபம் அழகுபடுத்தப் பட்டு டெல்லியிலே இருக்கின்ற இது போன்ற மாநாட்டு மண்டபங் களுக்கு ஈடான ஒரு மண்டபம் இந்தியாவிலே நம்முடைய மாநிலத் திலே தான் இருக்கின்றது என்று சொல்லத்தக்க அளவிற்கு மாற்றப் பட்டிருக்கின்ற இந்த மண்டபத்திலே நாம் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்றோம்.

### அரசு கொண்டிருக்கிற அக்கறை

இதிலிருந்தே நீங்கள் புரிந்து கொள்ளலாம், தொழில் முனைவர் களிடத்திலே அரசு கொண்டிருக் கின்ற அக்கறை ஒவ்வொரு தொழில் முனைவர்களுடைய தன்னலத்திற்கா கவோ அல்லது சொந்த வாழ்க்கை யினுடைய முன்னேற்றத்திற்காகவோ அல்ல. ஆனால் ஒவ்வொருவருடைய சொந்த வாழ்க்கை முன்னேற்றத் திலும் ஒவ்வொருவருடைய தன் னலத்திலும் கூட பொது நலமும் கலந்திருக்கிறது. நீங்கள் ஒரு தொழில் தொடங்குகின்றீர்கள் - உங்களுடைய வாழ்வுப் பிரச்சினைக்காக - உங் களுடைய ஆதாயத்திற்காக என்றா லும் கூட, அதிலே பணிபுரிகின்ற நூறுபேர் இருநூறு பேர் வேலை வாய்ப்பைப் பெருகின்றார்கள் என் கின்ற பொதுநலம் அதிலே இணைந் திருக்கின்ற காரணத்தினாலேதான்,

**வாழ்க்கை அவனவன் வாழ்வதற்கு என்று மட்டும் கருதக்கூடாது. மற்றவர்கள் நலனுக்கும் என்று கருத வேண்டும்.**

**நல்ல குடும்பம் என்பது வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்யாமல் இருப்பதாகும். தனது வாழ்க்கைச் செலவை வரவுக்கு உட்பட்டே அமைத்துக் கொள்ள வேண்டும். இப் படிப்பட்ட குடும்பம்தான் கண்ணியமான குடும்பம்.**

**. யார் எந்தக் கருத்தைச் சொன்னாலும், அதனை அப்படியே ஏற்றுக்கொள்வது என்றால், மனிதன் வளர்ச்சி அடைய மாட்டான்.**

-தந்தை பெரியார்

ஒரு அரசு தொழில்களை ஊக்கப்படுத்த தொழில் முனைவர்கள், அதிபர்கள் இவர்களுடைய கோரிக்கைகளையும் ஏற்க வேண்டிய உள்ளத்தைப் பெற வேண்டிய அரசாக இருக்க வேண்டியிருக்கிறது.

அந்த வகையில் ஊக்கப்படுத்துகின்ற நிலையில் இந்த ஆண்டு இந்த விழாவிலே விருதுகளை நான் வழங்க இருக்கின்றேன். விருதுகளைப் பெறுகின்றவர்களுக்கெல்லாம் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். தமிழகத்தினுடைய பொருளாதார முன்னேற்றத்தில் தொழில் வளர்ச்சியினுடைய முக்கியமான பங்கைக் கருத்தில் கொண்டு மகாராஷ்டிரம், குஜராத் போன்ற மாநிலங்களோடு ஒப்பிடக் கூடிய அளவிற்கு நம்முடைய ஊக்குவிப்புத் திட்டங்கள் அமைந்திடவில்லை என்று இருந்த குறைபாடு இப்போது நீக்கப்பட்டிருப்பதை நீங்கள் எல்லாம் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நான் நம்புகின்றேன்.

தொழில் அதிபர்கள் அவ்வப்போது எங்களைச் சந்தித்துப் பிரச்சினைகளை இதுபோன்ற கூட்டங்களில் மாத்திரமல்ல, தனியாகக் கூடச் சந்தித்துப் பிரச்சினைகளை எடுத்துச் சொல்லவும் அவைகளை உடனடியாக நீக்கவுமான முயற்சிகள் அரசின் சார்பிலும் அரசினுடைய செயலகங்களின் சார்பிலும் இன்றைக்கு மேற்கொள்ளப்படுகின்றன. அதனையும் நீங்கள் மிகத் தெளிவாக அறிவீர்கள்.

**தொழில் மையங்கள்**

வளர்ச்சி மையங்களுடைய திட்டம் என்று ஏற்கெனவே மத்திய அரசு சற்று தாராளமாக அவைகளை அனுமதித்துக் கொண்டிருந்தது. அதற்குப் பிறகு மத்தியிலே இடையிலே இரண்டொரு அரசுகள் மாறியுள்ள சூழ்நிலையில் கூட மத்திய அரசின் மூலமாக மாநில அரசிற்குத் தரப்பட்ட திட்டங்கள் - தொழில் மையங்கள் இவைகள் புறக்கணிக்கப்பட்ட சூழ்நிலையில் நம்முடைய வலியுறுத்தலின் மீது, நமக்குப் பெருந்துறையிலும், மயிலாடுதுறைக்கு அருகில் பூம்புகாரிலும், நெல்லை மாவட்டத்திலே கங்கைகொண்டான் மானூர் பகுதியிலும், தொழில் மையங்களை ஏற்படுத்த நாம் அனுமதிகளைப் பெற்றிருக்கிறோம். அந்தத் திட்டங்கள் வெகு விரைவிலே தொடர இருக்கின்றன.

**வளரும் தொழில்கள்**

ஒசூர் மின் அணு தொழில்களுக்குரிய மையம் 450 ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்பட்டு வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். உணவுப் பொருள் பக்குவப்படுத்தும் தொழில்களுக்குரிய மையம் ஒன்றை நிலக்கோட்டையிலே அமைத்திட நான் சட்டமன்றப் பேரவையிலேயே அறிவித்திருக்கின்றேன். அந்த அறிவிப்பின் அடிப்படையில் நிலக்கோட்டையில் அந்த மையம் அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தோல் தொழில்களுக்கான மையம் ஒன்று சென்னைக்கு அருகே அமைக்கப்படவுள்ளது. மணலிப் பகுதி பெட்ரோலியத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில் கேந்திரமாக வடிவெடுத்து வருகிறது. உயர் முதலீடு கொண்ட ஆர்.பி.ஜி. பெட்ரோ கெமிக்கல்ஸ், ஆரோமேட்டிக் போன்ற முக்கியமான திட்டங்கள் இங்கு அமைந்திட உள்ளன. இதில் ஆரோமேட்டிக் சற்று இடைஞ்சலுக்குரிய நிலையிலே இருந்தாலும் கூட அதனை நிச்சயமாகப் பெற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. மத்திய அரசும் பல கட்டங்களைத் தாண்டி இறுதியாக நம்முடைய கைக்குச்சேர வேண்டிய கட்டத்தில் உள்ள ஆரோமேட்டிக் திட்டத்திற்கான அனுமதியை விரைவிலே வழங்கும் என்று நான் நம்புகிறேன்.

காவேரிப்படுகையிலே பெட்ரோலிய எண்ணெயும் இயற்கை வாயுவும் கிடைப்பதை நாமெல்லாம் அறிவோம். பெட்ரோலிய எண்ணெயை மூலப் பொருளாகக் கொண்டு ஐந்து இலட்சம் டன் திறன் கொண்ட சுத்திகரிப்பு ஆலை ஒன்று 120 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படவுள்ளது. இதைத் தவிர இந்தப் பகுதியிலே வாயுவிலே இருந்து மின்சக்தி உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்றையும் மின் வாரியம் செயல்படுத்த இருக்கின்றது.

**செயல் திறன் மேம்பட**

வளர்ச்சிப் பணிகளிலே ஈடுபட்டுள்ள அரசு நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டுள்ளன. சான்றாக, மாநில முதலீட்டு மானியம், சிறப்புத் தொழிலுக்குரிய மானியம் போன்றவற்றை ஒப்பளிப்பு செய்திட ''சிப்காட்'' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநருக்கு இப்பொழுது அதிகாரம் தரப்பட்டுள்ளது. கொள்கை அளவில் மேற்கொள்ள வேண்டிய முடிவுகளை மட்டுமே இயக்குநர்கள் குழு ஆய்வு செய்யும். ஒப்பளிப்பு செய்யப்பட்டவற்றிற்குரிய தொகையை வழங்கிடும் அதிகாரம் பொது மேலாளருக்குத் தரப்பட்டுள்ளது. நிதி வழங்கிடும் முறையை விரைவுபடுத்துவதற்கெனத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திலும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டுள்ளன. அதாவது, கிளை அலுவலகங்களின் ஒப்பளிப்பு அதிகார வரம்பு ரூபாய் மூன்று இலட்சத்திலிருந்து ஐந்து இலட்சமாகவும், வட்டார அலுவலகங்களுக்கு ரூபாய் ஐந்து இலட்சத்திலிருந்து 12.50 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மைய அலுவலகத்திலே உள்ள கடன் ஒப்பளிப்புக் குழு ரூ.21.50 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சம் வரையிலும், செயற்குழு ரூ.50 இலட்சம் வரை ஒப்பளிப்பு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ரூ.50 இலட்சத்திற்கு மேற்பட்டவற்றை மட்டுமே இயக்குநர்களுடைய குழு பரிசீலிக்கும். அரசின் அணுகு முறையிலும் வளர்ச்சித் திட்டங்கள் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன என்பதற்கு ஒரு சில புள்ளி விவரங்களை உங்கள் முன்னால் வைக்க விரும்புகின்றேன்.



**பாவேந்தர் நூற்றாண்டு**

**சொத்தெலாம் விற்றும் கற்ற கல்வியாம்**
**வித்தால் விளைவன மேன்மை இன்பம்!**
**செல்வம் கடல்போல் சேரினும் என்பயன்-**
**கல்வி இல்லான் கண்இலான் என்க!**

1989-90-இல் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான காலத்தில் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு மானியத் தொகையாக 2.18 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இது 89-90 இறுதியில் ரூ.4.24 கோடியாக உயர்ந்திருந்தது. ஆனால் 90-91-இல் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான காலத்திலே இது 7.33 கோடி ரூபாய் அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். 89-90-இல் விற்பனை வரி ஒத்திவைப்பு மற்றும் கடன் மற்றும் ஒத்திவைப்புத் திட்டங்களுக்கு 12.26 கோடி ரூபாய் அளவிற்கு அத்தியாவசியச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கின்றது. இதற்கு மாறாக 90-91-இல் நவம்பர் மாதம் வரை இந்தத் திட்டங்களுக்கான அதிகார அத்தியாவசியச் சான்றிதழ்கள் 104.95 கோடி ரூபாய் அளவிற்குத் தரப்பட்டுள்ளன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

### ஒத்துழைப்பை வழங்குவீர்

இதே போன்று சிறு தொழில் துறையிலும் முன்னேற்றம் குறிப்பிடத் தக்க வகையில் அமைந்துள்ளது. 22.5.89 முதல் 30.11.90 வரையிலான காலத்தில் மட்டும் 107 ஆக உயர்ந்துள்ள பிற்பட்ட வட்டங்களில் 5,719 சிறு தொழில்கள் பதிவுச் சான்றிதழ் பெற்றுள்ளன. இவற்றுள் 31 வட்டங்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றில் அமைந்துள்ள புதிய தொழில்களும் விரிவாக்கத்தை மேற்கொள்ள இருக்கின்றன. நிலை முதலீடு அளவிற்கு முதல் ஐந்தாண்டுகளுக்கு விற்பனை வரி விலக்கு பெறும். இவையெல்லாம் நல்ல துவக்கத்திற்கு ஒரு அறிகுறியாகத்தான் அரசு எடுத்துக் கொண்டுள்ளது. மேலும் தொழில்கள் நசியாமல் பார்த்துக்கொள்ளவும் புதிய தொழில்கள் புதிய யுக்திகள் இவைகள் தான் மிக முக்கியமான அடிப்படை என்பதை உணர்ந்து நம்முடைய விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்கள் தொழில் முறையைப் பயன்படுத்தக்கூடிய பல திட்டங்களையும் வடிவமைத்திருக்கின்றோம். புதிய துறைகளிலும் நாம் கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றோம். சான்றாக, பிளாஸ்டிக் தொழில் கம்ப்யூட்டர்கள், மின் அணுவியல், உயிரியல், தொழில் நுட்பத்துறை போன்ற சிறந்த வாய்ப்புள்ள தொழில்களை மேற்கொள்ள நம்முடைய தொழில் அதிபர்கள் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அவர்கள் அத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளும்போது இருக்கின்ற குறைபாடுகளை நீக்குவதற்கும் பிரச்சினைகளைக்கலந்து பேசித் தீர்வு காண்பதற்கும் இந்த அரசு என்றென்றும் தயாராக இருக்கிறது என்பதையும் எடுத்துக் கூறி விருதுகள் பெறுகின்ற அனைவரையும் மீண்டும் ஒரு முறை வாழ்த்தி, பாராட்டி இன்று போல் என்றென்றும் தொழில் வளர்ச்சிக்கு இந்த அரசுக்கு உங்களுடைய அன்பான ஒத்துழைப்பை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

# சிறுதொழில்களுக்கு அரசின் புதிய சலுகைகள்

**கி**ராமப் பகுதிகளிலும், பின்தங்கிய பகுதிகளிலும் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த, சிறு தொழில்களுக்கு வரியில்லா விற்பனை வரிக்கடன் திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. அண்மையில் இத்திட்டம் விற்பனை வரித் தொகையை முழுவதுமாக ஒத்தி வைக்கும் அல்லது தள்ளுபடி செய்யும் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. அதன்படி, மிகவும் பின்தங்கிய 31 வட்டங்களிலும், புதுக்கோட்டை, கடலூர், மானாமதுரை ஆகிய இடங்களிலுள்ள 3 தொழில் வளாகங்களிலும் உள்ள புதிய தொழிற் பிரிவுகளும், விரிவாக்கப் பணியை அல்லது பலதிறப்படுத்தும் பணியை மேற்கொண்டுவரும் தொழிற் பிரிவுகளும் ஐந்து ஆண்டுகளுக்கு விற்பனை வரி முழுவதையும் தள்ளுபடி செய்யப்படுவதற்குத் தகுதி பெறுகின்றன.

மேலும் 76 பின்தங்கிய வட்டங்களிலும், அரசு சார்பிலான அமைப்புகள் அமைத்துள்ள தொழிற்பேட்டைகளிலும் உள்ள புதிய தொழிற் பிரிவுகளும், விரிவாக்கப் பணியை அல்லது பல திறப்படுத்தும் பணியை மேற்கொண்டு வரும் தொழிற் பிரிவுகளும் ஒன்பது ஆண்டுகளுக்கு விற்பனை வரியை ஒத்தி வைக்கத் தகுதி பெறுகின்றன.

மேற்கூறிய திட்டத்தில் அடங்காத எஞ்சிய பகுதிகளில் புதிதாகத் துவக்கப்பட உள்ள தொழிற் பிரிவுகளும், விரிவாக்கப் பணியை மேற்கொண்டுவரும் தொழிற் பிரிவுகளும் ஐந்து ஆண்டுகளுக்கு விற்பனை வரியை ஒத்தி வைக்கத் தகுதி பெறுகின்றன.

மேற்படி திட்டத்தின்கீழ் கடன் பெற விண்ணப்பிக்கும் சிறுதொழில் அதிபர்கள் விண்ணப்ப மனுவுடன், கடன் மதிப்பில் 1 சதவிகித ஆய்வுக் கட்டணத்தைத் தற்போதுள்ள நடைமுறைப்படி செலுத்த வேண்டும். மேற்கூறிய ஆய்வுக் கட்டணத்தைச் செலுத்துவதில் தொழில் அதிபர்களுக்கு உள்ள சிரமத்தைச் சிறு தொழில்கள் சங்கங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. அவர்களுடைய வேண்டுகோளைக் கருத்திற்கொண்டு, அரசு இத்திட்டத்தின்கீழ் செலுத்தப்பட்டுவந்த 1 சதவிகித ஆய்வுக் கட்டணத்தை முழுவதுமாகத் தள்ளுபடி செய்து ஆணை வெளியிட்டுள்ளது.



# கல்வித் துறையில் அரசு ஆற்றிவரும் அரும் பணிகள்

மாண்புமிகு கல்வி அமைச்சர்
பேராசிரியர் க. அன்பழகன்

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு''

— என்றார் வள்ளுவர்.

எண்ணும் எழுத்தும் கருவியாக நின்று, எண்ணங்களுக்கு வடிவம் கொடுக்கின்றன. கல்லாமை - இல்லாமையினும் கொடிது; மனிதவள ஆற்றல் பெருக, உழைப்புத் திறன் வளர, மனித முயற்சியின் பலன் சிறக்க, எழுத்தறிவு வழிப்பட்ட கல்வி நாட்டினர் எல்லோருக்கும் இன்றியமையாததாகும்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் கழக அரசு கல்வித்துறையில் பலமுனைகளிலும், பலநிலைகளிலும், ஆற்றிவரும் பணிகள் சிறப்பு வாய்ந்தவை. கல்விக்காக 1988-89-இல் செலவிடப்பட்ட தொகை ரூ.795 கோடி. இவ்வாண்டு (1990-91) கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.1,042 கோடியாகும். இது இவ்வாண்டு இம்மாநிலத்தின் வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்த செலவான ரூ.4,814 கோடியில் சுமார் 22 விழுக்காடு ஆகும்.

தொடக்கக் கல்வியின் முக்கியத்துவம் கருதி ரூ.429 கோடி தொடக்கக் கல்விக்கே ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்விக்கு ரூ.319 கோடியும், கல்லூரிக் கல்விக்கு ரூ.87 கோடியும், தொழில் நுட்பக் கல்விக்கு ரூ.32 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

### தொடக்கக் கல்வி

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதிக்குள் (1989-90) 6-11 வயதுக் குழந்தைகளுள் 100 விழுக்காட்டினரும், 11-14 வயதுக் குழந்தைகளுள் 75 விழுக்காட்டினரும் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும் என்பது இந்திய அரசு கருதிய இலக்காகும். தமிழ்நாட்டில் 6-11 வயதுத் தொகுதியினர் 100 விழுக்காட்டினரும், 11-14 வயதுத் தொகுதியினர் 88 விழுக்காட்டுக்கு மேலும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு விட்டனர். இவ்விரு வயதுத் தொகுதிகளைச் சார்ந்த குழந்தைகளுள் 1989-90-இல்,

> **“இவ்வாண்டு (1990-91) கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.1,042 கோடியாகும். இது இவ்வாண்டு இம்மாநிலத்தின் வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்த செலவான ரூ.4,814 கோடியில் சுமார் 22 விழுக்காடு ஆகும். தொடக்கக் கல்வியின் முக்கியத்துவம் கருதி, ரூ.429 கோடி தொடக்கக் கல்விக்கே ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்விக்கு ரூ.319 கோடியும், கல்லூரிக் கல்விக்கு ரூ.87 கோடியும், தொழில் நுட்பக் கல்விக்கு ரூ.32 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன.”**






2.32 இலட்சம் பேர்களும், 1990-91-இல், 2.10 இலட்சம் பேர்களும் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க தாகும். இவ்விரண்டு ஆண்டுகளில் 518 தொடக்கப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன.

அனைத்துப் பள்ளிகளிலும் 1-8 வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவியருள் 62 இலட்சம் பேர் தமிழக அரசு சத்துணவுத் திட்டத்தின் கீழ் நண் பகல் உணவு பெற்றுவருகின்றனர். அவர்கள் அனைவருக்கும் இலவசப் பாடப்புத்தகங்களும், இலவசச் சீருடையும் வழங்கப்பட்டு வருகின்றன. சத்துணவுத் திட்டத்தின் கீழ், இரு வாரங்களுக்கு ஒருமுறை முட்டை வழங்கப்படுவதுடன் முட்டை உட்கொள்ளாத குழந்தைகளுக்கு இரு வாரங் களுக்கு ஒரு முறை சத்து உருண்டையும் வழங்கிட அரசு அண்மையில் ஆணையிட்டுள்ளது.

தொடக்கப் பள்ளி வகுப்புகளில் பெண்களே ஆசிரியைகளாக இருக்க வேண்டும் என்னும் கொள்கை அடிப்படையில், 1-3 வகுப்புகளில் புதிதாக நியமனம் செய்யப்படுபவர்கள் பெண் களாகவே இருக்க வேண்டும் என ஆணையிடப் பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் இது 4-5 வகுப்புகளிலும் செயல்படுத்தப்படும். பெற்றோர்கள் தம் பெண் குழந்தைகளைக் கல்வி பயிலச் செய்வதை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டத்தின் கீழ் ஏழைக் குடும்பங்களில் 8-வது வரை (பழங்குடி மகளிர் ஆயின் 5-ஆம் வகுப்பு) படித்துள்ள பெண்களுக்கு ரூ.5,000 திருமண உதவி நிதியாக அளிக்கப்படுகிறது.

கரும்பலகைத் திட்டத்தின் கீழ் கடந்த சில ஆண்டுகளில் 1,229 தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் கட்ட தேர்வு செய்யப்பட்டு, 349 பள்ளிக் கட்டடங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மீதி 880 பள்ளிகளில் கட்டுமான வேலை நடைபெற்று வருகிறது. மேலும், ரூ.23 கோடிக்கு பயிற்றுவிப்பு உபகரணங்களும் கரும்பலகைகள் முதலியவையும் வாங்கி அளிக்கப்பட்டுள்ளன. இதனால் 29,135 தொடக்கப் பள்ளிகள் பயன் பெறுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1,829 ஓராசிரியர் பள்ளிகள் ஈராசிரியர் பள்ளிகளாக மாற்றப்பட்டன. ரூ.33 இலட்சம் செலவில் 2,813 நடுநிலைப் பள்ளி களுக்கு அறிவியல் பெட்டகங்கள் வழங்கப் பட்டுள்ளன. மொத்தம் 8,888 தொடக்க/நடுநிலைப் பள்ளிகளுக்கு "வானொலி-ஒலிப்பதிவுப் பெட்டிகள்" வழங்கத் திட்டமிடப்பட்டு, இதுவரை 3,765 பள்ளிகளுக்கு அவை வழங்கப்பட்டுள்ளன.

இதற்குமுன் எப்போதும் பெறாத அளவிற்கு ஆசிரியர்களுடைய ஊதிய விகிதங்கள் அதிகரிக்கப் பட்டுள்ளன. குறிப்பாகத் தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான ஊதிய விகிதம் ரூ.1400-2600 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்குத் தேர்வுநிலையும் சிறப்பு நிலையும் வழங்கும்பொழுது, அவரவர் மொத்த இடைநிலை ஆசிரியர் பணிக்காலத்தையும் சேர்த்துக் கணக் கிட்டு வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. 1.6.81 முதல் அரசுப்பணியாளர்களாக ஏற்கப்பட்ட "ஊராட்சி ஒன்றியப் பள்ளி" ஆசிரியர்களுக்கான பணி விதிகள் சென்ற ஆண்டு வெளியிடப் பட்டன. 1.6.86 முதல் அரசுப் பணியாளர்களாக ஏற்கப்பட்ட நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களின் ஊதியம் 1.4.90 முதல் நேரடியாக அரசு நிதி யிலிருந்து அளித்திட ஆணையிடப்பட்டுள்ளது.

**பள்ளிக் கல்வி**

கடந்த ஆண்டு புதிதாக 108 உயர்நிலைப் பள்ளிகளும் 74 மேல்நிலைப் பள்ளிகளும் திறக்கப் பட்டன. இவ்வாண்டு 100 உயர்நிலைப் பள்ளி களும் 70 மேல்நிலைப் பள்ளிகளும் திறக்கப் பட்டுள்ளன. இவ்வாண்டு அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள்

கட்ட ரூ.1.50 கோடியும், பழைய கட்டடங்களைப் பழுது பார்க்க ரூ.1.50 கோடியும் ஒதுக்கப் பட்டுள்ளன. கடந்த சில ஆண்டுகளில் மொத்தம் 1,761 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி களுக்குத் தலா ரூ.35,000/- செலவில் அறிவியல் உபகரணங்களும் நூலகப் புத்தகங்களும் வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது.

கல்வி வல்லுநர்களைக் கொண்டு சீர்திருத்தி அமைக்கப்பட்ட புதிய பாடத்திட்டமும், அத் திட்டத்தின்படி எழுதப்பட்ட புதிய பாடப் புத்தகங் களும் பள்ளியில் அனைத்து வகுப்புகளிலும் நடை முறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

அரசுப் பள்ளிகளுக்கான ஆசிரியர்களைத் தெரிவு செய்து நியமனம் செய்வதற்கான வழி முறைகளைச் சீர்திருத்தி அமைத்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாண்டு புதிதாக 4,000-க்கு மேற்பட்ட இடைநிலை ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற் பாடங்களைப் பயிற்றுவிப்பதில் தமிழ்நாடு தொடர்ந்து அனைத்திந்திய அளவில் முதன்மை வகித்து வருகிறது. 1989-90-இல் மேல்நிலைப்பள்ளி வகுப்புகளில் பயின்று வந்த 4.42 இலட்சம் மாணவர்களில் 93,141 பேர் தொழிற்பாடங் களைப் பயின்றனர். பகுதிநேரத் தொழிற்பாட ஆசிரியர் இருவருக்குரிய பணியை (ஒரே பள்ளி யிலோ இரு பள்ளிகளிலோ) ஒருவரே செய்து வரும் நேர்வுகளில் அத்தகையோருடைய பணியினை இரு கட்டங்களாக (1990-91-இல் 800 பேர் களும், 1991-92-இல் சுமார் 1,000 பேர்களும்) வரன்முறை செய்ய அரசு முடிவு செய்து, இவ் வாண்டு அதற்கென ரூ.1400-2600 சம்பள விகிதத்தில் 800 பணியிடங்கள் புதிதாக ஏற் படுத்தப்பட்டுள்ளன.

மேல்நிலை வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்ற வர்களும், (பொறியியல், மருத்துவக் கல்லூரி நுழைவுத் தேர்வு எழுதும் நோக்கத்துடன்) மதிப்பெண்களை உயர்த்திக் கொள்வதற்காக கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல் பாடங்களில் மீண்டும் தேர்வு எழுத அனுமதிக்கும் சலுகை தரப்பட்டுள்ளது.

### வயது வந்தோர் கல்வி

கல்விக்காகக் கடந்த பல ஆண்டுகளாகவே பலவேறு முனைகளிலும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்தபோதிலும், அவரவர் சூழ்நிலையால், பழக்கத் தால், கல்வியின் அருமையை உணராமையால், தத் தம் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட சமுதாயச் சூழலின் தாக்கத்தால், எழுத்தறியாதார் விழுக்காடு இன்றும் ஏறத்தாழ 46% ஆக நிலவுகிறது. அப்படிப்பட்ட மக்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் வாழ்பகுதிகள், பிற்படுத்தப்பட்ட மக்கள் உறையும் ஊர்கள் ஆகியவற்றினைத் தேர்ந்தெடுத்து வயது வந்தோர் எழுத்தறிவுத் திட்டப்பணி மேற்கொள்ளப்படுகிறது. கடந்த ஆண்டு 15-35 வயதுத் தொகுதியினர் சுமார் 9 இலட்சம் பேர் எழுத்தறிவு பெற்றனர். இவ்வாண்டு இலக்கு 10 இலட்சம் ஆகும். ''மக்கள் நலப் பணியாளர்கள்'' தொண்டைப் பயன்படுத்தி எழுத்தறிவு புகட்டுவதற்கான சீரமைக்கப்பட்ட திட்டம் ஒன்று ஐந்து மாவட்டங் களில் செயல்படுத்தப்படவிருக்கிறது.

### ஆசிரியர் கல்வி - ஆராய்ச்சி - பயிற்சி இயக்ககம்

ஆசிரியர்களின் பயிற்றுவிக்கும் திறனை மேம் படுத்துவதற்காகத் தனி இயக்ககம் ஒன்று அமைக் கப்பட்டுள்ளது. 14 மாவட்டங்களில் ''மாவட்டக் கல்வி- பயிற்சி நிறுவனங்கள்'' நிறுவப்பட்டுள்ளன. மீதி 7 மாவட்டங்களிலும் அத்தகைய நிறுவனங்கள் நிறுவப்படவிருக்கின்றன.

கல்லூரிக் கல்வி நிலையிலும் ஆசிரியர் பயிற்று விப்புத் திறனையும், கல்வியாராய்ச்சியையும் மேம்படுத்துவதற்காக இப்புதிய துறையின் கீழ் சென்னையில் சைதாப்பேட்டையில் ஒன்றும், லேடி வெலிங்டன் கல்லூரியில் ஒன்றுமாக, கல்வி உயராய்வு நிறுவனங்கள் இரண்டு செயல்படுகின்றன. மேலும், ஒரத்தநாடு, வேலூர், குமாரபாளையம், புதுக்கோட்டை, கோயம்புத்தூர் ஆகிய இடங் களில் அரசு கல்வியியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.






**கல்லூரிக் கல்வி**

1989-90-இல் பல்கலைக் கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கு 'பல்கலைக்கழக நிதிக்குழு ஊதிய விகிதங்கள் வழங்கிட ஆணையிடப்பட்டது. ரூ.57.38 கோடி செலவில் கல்லூரி ஆசிரியர்கள் 16,000 பேர் பயன்பெற்றனர். மேலும், ரூ.19.45 கோடி செலவில் பொறியியல் கல்லூரி மற்றும் பல்தொழிற்பயிலக ஆசிரியர்கள் 4,000 பேர் 'தொழிற்கல்விக்கான அனைத்திந்தியக் குழு' ஊதிய விகிதங்களின் பலனைப் பெற்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள அரசுக் கல்லூரிகளில் 4 கல்லூரிகளுக்கும், அரசு மானியம் பெறும் தனியார் கல்லூரிகளில் 31 கல்லூரிகளுக்கும் தன்னாட்சி உரிமை Autonomous Status வழங்கப்பட்டுள்ளது. அனைத்திந்தியாவிலும் பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் தான் மிக அதிக அளவில் தன்னாட்சி உரிமை பெற்றுள்ள கல்லூரிகள் உள்ளன. சென்னைப் பல்கலைக்கழகம் சென்னையிலுள்ள ஒய்.எம்.சி.எ. உடற்பயிற்சிக் கல்லூரிக்கும் தன்னாட்சி உரிமை அளித்துள்ளது.

மிகப் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சீர் மரபைச் சார்ந்த மாணவ மாணவியர்களின் கல்வி நலம் காக்கும் நோக்குடன் படிப்புக் கட்டணம், தனிக் கட்டணம், தேர்வுக் கட்டணம் ஆகிய வற்றைச் செலுத்துவதிலிருந்து, வருமான வரம்பின்றி, விலக்கு அளிக்கும் இலவசக் கல்வித் திட்டம் 1989-90-ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இளங்கலைப் பட்டப்படிப்பு முடிய இலவசக் கல்வி**

ஏழை மற்றும் நடுத்தர வகுப்பைச் சார்ந்தவர்களான சமுதாயத்தின் அனைத்துப்பிரிவு மாணவிகளும் கல்லூரிகளில் சேர்ந்து பயிலுவதை ஊக்குவிக்கும் வகையில் 1989-90 முதல் 'ஈ.வெ.ரா. பெரியார் நாகம்மையார் பெண்களுக்கான இலவசக் கல்வித்திட்டம்' செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு மேல் இல்லாத பெற்றோரின் பெண் குழந்தைகளுக்கு இளங்கலைப் பட்டப் படிப்பு முடிய இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு 5,444 மாணவிகள் பயன் பெற்றனர்.

கல்லூரிகளில் சேர விழையும் மாணவர் எண்ணிக்கை அதிகரிப்புக்கு இடமளித்திட 1989-90-ஆம் கல்வியாண்டில் அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் 7 இளநிலைப் பட்ட வகுப்புகளும், 12 முதுநிலைப் பட்ட வகுப்புகளும் தொடங்கப்பட்டன. அவை பெரும்பாலும் வேலை வாய்ப்பு அதிகமுள்ள பாடத்துறைகளாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டு கோயம்புத்தூர் அரசு கலைக் கல்லூரியிலும், கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரியிலும் 'கணிப்பொறியியலில்' இளங்கலைப் பட்ட வகுப்புகள் தொடங்க ஏற்பு அளிக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் மேலும் சில கல்லூரிகளில் இத்தகைய புதிய பாடமுறைகள் தொடங்கப்படவிருக்கின்றன.

'நீராருங் கடலுடுத்த' எனத் தொடங்கும் தமிழ்த் தாய் வாழ்த்தினை இயற்றிய மாமேதையின் நினைவு போற்றும் முறையில் இவ்வாண்டு திருநெல்வேலியில் 'மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்' நிறுவப்பட்டுள்ளது. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் கொடைக்கானல் மலைமேல் அமைந்திருப்பதால் ஏற்படும் இடர்ப்பாடுகளை நீக்கவும், அதன் பயனையும் வளர்ச்சியையும் மேம்படுத்திடவும், அப்பல்கலைக்கழகத்தைச் சென்னைக்கு அருகில் மாற்றிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனினும், அப்பல்கலைக் கழகத்தின் ஒரு பிரிவு தொடர்ந்து கொடைக்கானலில் செயல்பட்டுவரும்.

**தொழில் நுட்பக் கல்வி**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பது தொழில் நுட்பக் கல்வியே ஆகும். பொருளாதார வளர்ச்சியை உருவாக்கிக் கொடுக்கும் பலவித தொழிற்சாலைகளையும் நிர்வகிக்கத் திறமை வாய்ந்தவர்கள் தொழிற்கல்வி பயின்றவர்களும் பொறியாளர்களுமே ஆவர். தமிழகத்தில் தற்சமயம் 28 சுயநிதிப் பொறியியற் கல்லூரிகள் உட்பட மொத்தம் 42 பொறியியற் கல்லூரிகள் உள்ளன. மற்றும் 74 சுயநிதிப் பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகங்கள் உட்பட 132 பல்துறை தொழில் நுட்பப் பயிலகங்கள் செயல்பட்டு வருகின்றன. 1990-91-ஆம் ஆண்டில் பட்டப்படிப்புத் துறையில் முழுநேர மாணவர்களாக 6,827 பேரும், பகுதிநேரப் படிப்பிற்காக 1,160 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளார்கள். அதேபோன்று பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகங்களில் முழுநேரப் படிப்பில் 22,332 பேரும், பகுதிநேரப் படிப்பில் 1,675 பேர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பட்டமேற்படிப்புத் துறைகளில் கீழ்க்கண்டவாறு மாணவர்கள் பயில வசதிகள் உள்ளன:

முதுகலைப் பட்டம் - முழுநேரம் 276,
பகுதி நேரம் 56.
பட்டய மேற்படிப்பு - முழுநேரம் - 263,
பகுதிநேரம் 90

தொழில் நுட்பக் கல்வித்துறையின்

நிருவாகத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் பல் தொழிற் பயிலகங்களைக் கவனிக்க கூடுதல் இயக்குநர் ஒருவரும், தேர்வுப் பணிகளைக் கவனிக்க கூடுதல் இயக்குநர் ஒருவரும் முழுப் பொறுப்புடன் நிய மிக்கப்பட்டுள்ளனர். இதனால் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் தன் முழுக் கவனத்தையும் பொறி யியற் கல்லூரிகளின் நிருவாகத்தை மேம்படுத்து வதில் செலுத்த இயல்கிறது.

கல்வியில் பின்தங்கிய குடும்பங்களைச் சார்ந்த மாணவ மாணவியர் பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் ஆகிய தொழிற் கல்லூரிகளில் சேர முன்னுரிமை தர வேண்டும் என்ற நோக்கத்துடன், இவ்வாண்டு அக்கல்லூரிகளில் சேருவதற்கான நுழைவுத் தேர்வு எழுதியவர்களுள் யார்யார் குடும்பத்தில் ஒரு பட்டதாரி கூட இல்லையோ அவர்களுக்குக் கூடுதலாக 5 மதிப்பெண்கள் வழங்கிட அரசு ஆணையிட்டது. இந்தப் புதிய நடைமுறையின் காரணமாக இவ்வாண்டு பட்டதாரிகள் இல்லாத குடும்பங்களைச் சார்ந்த 422 மாணவ மாணவியர் பொறியியற் கல்லூரிகளில் சேர்ந்திட இயன் றுள்ளது. அவர்களுள் ஆதிதிராவிடர், பழங் குடியினர் 27 பேர், பிற்படுத்தப்பட்டவர்களும், மிகப் பிற்படுத்தப்பட்டவர்களும் 297 பேர் ஆவர்.

**பிற பணிகள்**

இளைஞர் தம் உடல் வலிவும் பொலிவும் பெற உரிய விளையாட்டுக்களும், உடற்பயிற்சிகளும், ஆட்டப் போட்டிகளும் பெருகிடப் பலமுனைச் செயல்திட்டங்கள் நடைபெறுகின்றன. இளைய தலைமுறை கடமை உணர்வும் கட்டுப்பாடும் கொண்டு, கண்ணியமாக நடந்திடப் பயிற்சி வழங்கும் இயக்கமாக, சாரண, சாரணீய இயக்கம் மாநிலம் எங்கும் பரவலாகச் செயல்படுகிறது.

பொது நூலக இயக்ககம் வளர்ந்திடப் பொது மக்கள் ஒத்துழைப்போடு மாவட்ட நூலக இயக்க மாநாடுகள் பல நடத்தப்பட்டு, நூலகங்கள் கட்டு வதற்கான மனைகளும், நூலகத்தின் தேவைக்கான தளவாடங்களும் பெறப்பட்டு தேவைகள் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன.

அறிவியல் தெளிவும் நோக்கும் மக்களிடம் பரவிட 'தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்கள்' என்னும் தன்னாட்சி நிறுவனத்தின் கீழ், சென்னையில் பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மையம் செயல்படுகிறது, அண்மையில் காட்சிப் பொருள் அரங்கங்கள் மூன்று புதிதாக மாண்புமிகு முதல்வரால் திறக்கப்பட்டன.

'தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மன்றம்' சமுதாயத்தின் சமுக, பொருளா தார வளர்ச்சியை உயர்த்தும் நோக்குடன், கல்வி, உடல்நலம், வேளாண்மை போன்ற துறைகளில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் பயன் பாடுடைய தக்க திட்டங்களைத் தெரிந்தெடுத்துச் செயல்படுத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

'கல்வி' எல்லையற்றது. 'கலை' வரம்பற்றது. 'பண்பாடு' ஆழமானது. அவற்றின் தேவை நாளும் வளர்வது. எனவே அவற்றை உள்ளீடாகக் கொண்ட கல்வித்துறையின் திட்டமும்-கடமையும்-பணியும் எந்நாளும் தொடர்வனவாகும்.

## இயற்பியல் துறைப் பேராசிரியருக்கு விருது

இந்தியாவின் தலைசிறந்த – மிகவும் பெருமை வாய்ந்த ''சாந்தி ஸ்வரூப் பத்நகர் பரிசு'' என்னும் உயர்ந்த விருதினை மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் மிகவும் சிறந்து விளங்குகின்ற விஞ்ஞானிகளுக்கு வழங்கி வருகின்றது.

1989-ஆம் ஆண்டிற்கான இந்தச் சிறந்த விருது, திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் இயற்பியல் துறை யில் பணியாற்றி வரும் பேராசிரியர் மு.இலட்சுமணன் அவர்களுக்குக் கிடைத் துள்ளது.

விஞ்ஞானம், மருத்துவம், தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் முற்பட்ட ஐந்தாண்டுக் காலங்களில் ஆராய்ச்சியில் அரும் சாதனை நிகழ்த்திய 45 வயதுக்கு உள்ளடங்கிய அறிஞர்களுக்கு, ஆண்டு தோறும் இந்தியாவின் தலைசிறந்த மற்றும் மிகவும் பெருமை வாய்ந்த எஸ்.எஸ். பத்நகர் பரிசு தேசிய விஞ்



ஞான, தொழில் நுட்ப ஆராய்ச்சிக் கழகத் தால் வழங்கப் பெறுகின்றது. ரூபாய் ஐம்பதினாயிரம் ரொக்கம், பட்டயம் மற்றும் சான்றிதழ் அடங்கிய இவ்விருது இந்தியப் பிரதமர் அவர்களால் வழங்கப் படுகின்றது.

பெரும்பாலும் புகழ்பெற்ற ஆராய்ச்சிக் கூடங்களில் பணிபுரியும் அறிஞர் பெரு மக்கள் பெறும் பரிசு, நம் தமிழகத்தில் 1958 முதல் 1988 வரையாகிய கால கட்டத்தில் 8 விஞ்ஞானிகளுக்கு மட்டுமே வழங்கப்பெற்றுள்ளது. குறிப்பாக, இயற்பியலில் 1961-ஆம் ஆண்டு புகழ் பெற்ற விஞ்ஞானியான பேராசிரியர் ஜி.என். இராமச்சந்திரனுக்கு வழங்கப் பெற்ற பின்னர், இத்துறையில் தமிழ கத்தில் வேறுயாருக்கும் வழங்கப்பட வில்லை. அவருக்குப்பிறகு, இயற்பியல் துறைப் பேராசிரியர் மு.இலட்சுமணன் (44 வயது) அவர்கட்கு, சமச்சீரற்ற இயக் கங்களின் தன்மை குறித்து அவர் ஆற்றிய ஆராய்ச்சிகளுக்காக இந்த விருது வழங் கப்பெறுகிறது.

தமிழக அரசின் 1984-ஆம் ஆண்டிற் கான பல்கலைக்கழகங்களுக்கான 'நல்லா சிரியர்' விருது பெற்றுள்ள இவர், 85-க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி யுள்ளார்; மூன்று நூல்களும் வெளி யிட்டுள்ளார்.

# அரும்பாக்கத்தில் ஓர் அரும்பணி



தலைமுடியை வளர்க்கவும், அது உதிராமல் தடுக்கவும், பலவித எண்ணெய்களை உபயோகப்படுத்தி வருகிறோம். இதில் ஆண்களும் பெண்களும் அதிகக் கவனம் செலுத்தி வருவதையும் பார்க்கிறோம்.

பண்டைக் காலத்தில் பெண்களின் கூந்தலை வர்ணிக்கும்போது, அதை மேகத்துக்கு ஒப்பிட்டார்கள் புலவர்கள். 'கார் குழலாள்' என்று புகழ்ந்தார்கள். கூந்தல், ஒரு பெண்ணின் அழகை மேம்படுத்துகிறது.

நாகரிக உலகில் இன்று பல்வேறு கூந்தல் தைலங்கள் பவனி வந்து கொண்டிருக்கின்றன. கவர்ச்சிகரமான விளம்பரங்களும் கருத்தைக் கவர்கின்றன.

**கூந்தல் மூலிகைத் தைலம்**

இந்தச் சூழ்நிலையில் மக்களிடம் அமோக ஆதரவைப் பெற்று வருவது தான், 'டாம்ப்கால்' எனப்படும் கூந்தல் மூலிகைத் தைலம். தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம், இதைத் தயாரித்துத் தமிழகமெங்கும் பெருமளவில் விற்பனை செய்து வருகிறது. இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனமாகும்.

'டாம்ப்கால்' என்றால் என்ன?

'Tamilnadu Medicinal Plant Farms and Herbal Medicine Corporation Limited'. என்பதன் சுருக்கம்தான் அது.

தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக்கழகம், 1983-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இக்கழகம், அரிய மூலிகைகளை வளர்த்துப் பாதுகாத்து வருகிறது. அத்துடன் அரசு மருந்தகங்களுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் தேவையான மூலப் பொருள்களை வழங்கி வருகிறது. மேலும், பல்வேறு மூலிகை மருந்துப் பொருட்கள், மரபு மருந்துகள் ஆகியவற்றையும் இது உற்பத்தி செய்கிறது. இந்திய மருந்துகளையும், மூலிகைப் பொருட்களையும் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதும், இறக்குமதி செய்வதும் இதன் பணிகளாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, சித்த மருத்துவ முறையில், கூந்தல் மூலிகைத் தைலம் தயாரிப்பதைத் தலையாய பணியாகக் கொண்டிருக்கிறது.

**அறிஞர் அண்ணா மூலிகைப் பண்ணை**

இக்கழகம், அரிய மூலிகைகளின் பிறப்பிடமாகவும் விளங்குகிறது. இக்கழகத்திற்குச் சொந்தமான அறிஞர் அண்ணா மூலிகைப் பண்ணை ஒன்று, அறிஞர் அண்ணா நகர் - அண்ணா பவள விழா வளைவு அருகில் இருக்கிறது. இது சுமார் 10 ஏக்கர் நிலப் பரப்பு கொண்டது. கூந்தல் மூலிகைத் தைலம் தயாரிக்கத் தேவையான பல்வேறு மூலிகைகள் இங்கு வளர்க்கப்படுகின்றன. இவையின்றி, அரசு மருந்துசெய் நிலையங்களுக்குத் தேவையான மூலிகைச் செடிகளும் இங்கே வளர்க்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்திய மருத்துவ மற்றும் தாவரவியல் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், மருத்துவர்கள் முதலானோர் நேரில் கண்டு பயன்பெறும் வகையில், சுமார் 250 வகையான அரிய மூலிகைச் செடிகள் வளர்க்கப்படுகின்றன. இந்தப் பண்ணையில் உள்ள குளம் ஒன்றில், நீர்வாழ் மூலிகைகள் வளர்க்கப்படவிருக்கின்றன.

தமிழ்நாட்டிலேயே, அதிகப்படியான மூலிகைச் செடிகளைக் கொண்ட 'மூலிகைப் பண்ணை' இதுவே ஆகும்.

தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலும் இக்கழகத்தின் மூலிகைப் பண்ணைகள் உள்ளன. காமராஜர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தில், செண்பகத் தோப்பு என்னும் இடத்தில் சுமார் 33 ஏக்கர் பரப்பளவில் மூலிகைத் தோட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்து அறநிலைய ஆட்சித் துறையினரிடமிருந்து குத்தகைக்குப் பெறப்பட்டு அமைக்கப்பட்ட இத்தோட்டத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட சில மூலிகைகள் வளர்க்கப்படுகின்றன.

இங்கு கிடைக்கும் மூலிகைப் பொருட்கள், இந்திய மருத்துவ இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள மருந்துசெய் நிலையங்களுக்கு வழங்கப்படுகின்றன. மூலிகைச் செடிகளைப் பெருமளவில் முறையாகச் சாகுபடி செய்யவும், இதன் மூலம் செண்பகத்






தோப்பில் உள்ள பகவதிபுரத்தில் வாழும் 'பளியர்' என்னும் பழங்குடி மக்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம், கொல்லி மலையில் மூலிகைப் பண்ணை அமைப்பதற்காகச் சுமார் 105 ஏக்கர் நிலப்பரப்பை இக்கழகத்தின் வசம் ஒப்படைக்க அரசு முன்வந்துள்ளது. முதற்கட்டமாக, சுமார் 13.5 ஏக்கர் நிலம் இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமான 92 ஏக்கர் நிலத்தை இக்கழகத்திடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இங்கு, மலைவாழ் மூலிகைச் செடிகள் ஆராய்ச்சி அடிப்படையில் வளர்க்கப்படுகின்றன.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ராமய்யபட்டியில் சுமார் 147 ஏக்கரிலும், நீலகிரி மாவட்டத்தில் 37.5 ஏக்கரிலும் மூலிகைப் பண்ணைகள் அமைக்கப்படவிருக்கின்றன.

**டாம்ப்கால்:**

தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழக நிர்வாக இயக்குநர் மற்றும் இந்திய மருத்துவம் ஓமியோபதித்துறை இயக்குநர் **திரு. பிருதிவிராஜ் லங்த்தாசா இ.ஆ.ப.** அவர்களைச் சந்தித்தபோது அவர் கூறினார்--

''டாம்ப்கால்'' என்னும் இந்த கூந்தல் மூலிகைத் தைலத்திற்குப் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பு உள்ளது. 23 மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட தரமான தைலம் இது. இதை உபயோகிப்பதால், குளுமை ஏற்படுகிறது. முடியும் உதிர்வதில்லை. ஆடவர், மகளிர் எல்லோரும் இதை உபயோகிக்கலாம். தற்போது இது, கர்நாடக மாநிலத்திலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.''

''ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் இந்தக் கூந்தல் தைலத்தை விற்பனை-விநியோகம் செய்வதற்கான பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. ஆந்திரம், மகாராஷ்டிர மாநிலத்திற்கும் 'சப்ளை' செய்யத் திட்டமுள்ளது. புதுடெல்லி, பம்பாய், ஐதராபாத் ஆகிய இடங்களிலிருந்தும் மூலிகைகள் தருவிக்கப்படுகின்றன. பொதுவாக மூலிகைகளை வாங்கி, அரும்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவமனைக்கும், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், பாளையங்கோட்டையிலுள்ள சித்த மருத்துவமனைக்கும் வழங்கி வருகிறோம்.''

''இக்கழகம், சித்த மருத்துவ முறையில் 55 புதிய மருந்துகளும், ஆயுர்வேத முறையில் 7 புதிய மருந்துகளும் தயாரிப்பதற்கான உரிமம் பெற்றுள்ளது. செங்கை-அண்ணா மாவட்டத்தில், திருப்போரூருக்கு அருகிலுள்ள ஆலத்தூரில் - சிட்கோ தொழிற்பேட்டையில், மருந்துசெய் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.''

''புதிய மருந்துகள் சிலவற்றை முதலில் 453 அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குத் தரப்படும். பிறகு அவை விற்பனைக்கும் வழங்கப்படும்.''

**மூலிகை அழகுக் கிரீம்**

''கூடிய சீக்கிரத்தில் அதாவது அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில், மூலிகை அழகுக் கிரீம்-Herbal Beauty Cream - அறிமுகப்படுத்த இருக்கிறோம். இந்தக் கிரீமை முகத்தில் பூசிக் கொள்வதால், பருக்கள் மறையும், புத்துணர்வும், மிருதுவான தன்மையும் ஏற்படும். முகம் பொலிவாகவும் விளங்கும். இதற்கு மக்களிடையே நல்ல வரவேற்பு இருக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. 'மூலிகை வலி நிவாரணி' ஒன்றும் சோதனை அளவில் தயாரிக்கப்பட்டுள்ளது.''

**புதிய டானிக்குகள்**

''உடலுக்குச் சக்தியைத் தரும் இரண்டு டானிக்குகளையும் விரை



அதிமதுரம்

வில் அறிமுகப்படுத்த இருக்கிறோம். அஸ்வகந்தா லேகியம், சவனப்பிராச லேகியம் ஆகியவையே அவை. இக் கழகம், 1989-90-ஆம் நிதியாண்டில் மட்டும் 79,453 லிட்டர் கூந்தல் மூலிகைத் தைலம் உற்பத்தி செய்துள்ளது. இது கடந்த ஆண்டு உற்பத்தியைக் காட்டிலும் 16.39



ஆடாதொடை

விழுக்காடு கூடுதலாகும். இக்கழகம் தொடர்ந்து லாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இக்கழகம் செம்மை யுடன் செயல்பட தமிழ்நாடு அரசு தக்க உதவிகளைச் செய்து வருகிறது''

மூலிகைப் பண்ணைக்குள் நுழைகிறோம்.



பரந்து விரிந்துள்ள பச்சைப் புசேலென செடி, கொடி மரங்கள் நம்மைக் கவர்கின்றன. நோய் தீர்க்கும் அந்த மூலிகைச் செடிகளின் திருநாமங் களைப் பார்ப்போமா?

கஸ்தூரி வெண்டை, கூவை, சிவப்புக் கொடிவேலி, அருவதா, பூச்சாந்திரப்பட்டை, சின்னி, நாகதந்தி, சோமக்கொடி, கருஞ்சி வதை, திப்பிலி, ஆனைப்புளி, கல்யாண முருங்கை-இப்படி இதன் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

இந்த மூலிகைப் பண்ணை மூலமாக, மாதம் ரூ.30,000 வருமானம் கிடைக்கிறது.

இந்தக் கழகத்தில் அலுவலகப் பணியில் 28 பேரும், மூலிகைப் பண்ணை மற்றும் மருந்துசெய் நிலையத்தில் 46 பேரும் ஈடு பட்டுள்ளனர். நல்ல நிர்வாகமும், தொழிலாளர் நல்லுறவும் இக் கழகத்தை மேம்பாடடையச்செய்து வருகின்றன.

மக்கள் புத்துணர்வும், புதுவாழ் வும் பெறத்தக்க வகையில், புதிய புதிய கண்டுபிடிப்புகளை—புதிய புதிய தரமான மருந்துகளை இக்கழகம் தயாரித்து வருகிறது. அதே சமயத்தில், நியாயமான விலையிலும் இது மக்க ளுக்கு வழங்கி வருகிறது.

அருகிலேயே மூலிகைப் பண்ணை, பக்கத்திலேயே மருந்துசெய் நிலையம், கூப்பிடு தூரத்திலேயே மருத்துவ மனை-இவை எல்லாம் ஒருங்கே இணைந்த இடத்தைப் பார்ப்பது அரிதுதான். அந்த அரிய காட்சி யைப் பார்க்கின்ற - பயன்பெறு கின்ற வாய்ப்பினை நல்குவதுதான், இந்த மூலிகைக் கழகம். இந்த மூலிகைப் பண்ணையை யாவரும் சென்று காணல் மிகுந்த பயன்தரும்.

சென்னை அரும்பாக்கத்தில் அமைதியாக அரும் பணியாற்றி வரும் இக்கழகத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

**— பி.வி. கிரி**



துளசி



# பாவேந்தர் குடும்பத்தாருக்குப் பரிவுத்தொகை வழங்கும் விழா

**பா**வேந்தர் பாரதிதாசன் நூல்களைத் தமிழக அரசு நாட்டுடைமை ஆக்கியதன் தொடர்பாக, அவரது குடும்பத்தாருக்குப் பரிவுத் தொகை வழங்கும் விழா, 15.12.1990 அன்று சென்னையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தலைமைச் செயலக நாமக்கல் கவிஞர் மாளிகையில் பத்தாம் தளத்தில் உள்ள எழிலரங்கில் நடைபெற்ற அந்த விழாவில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு, பாவேந்தர் குடும்பத்தாருக்கு நிதி வழங்கிப் பாராட்டினார்கள். மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க் குடிமகன் அவர்களும், மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்களும், எழுத்தாளர்கள், கவிஞர்கள்-புலவர்கள்-பதிப்பாளர்கள்-அரசு உயர் அதிகாரிகளும் விழாவிற்கு வருகை தந்திருந்தார்கள்.

தமிழ்வளர்ச்சி-பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் அவ்வை நடராசன் வரவேற்றுப் பேசினார். தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் திரு கு.சிவஞானம் அவர்கள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

டாக்டர் சிவசிதம்பரம் அவர்கள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் இயற்றிய

'இனிமைத் தமிழ்மொழி எமது'
'தமிழ் என்னும் மணிவிளக்கு ஏற்றடா நாட்டில்'

-ஆகிய கவிதைகளை இசை நயத்தோடு பாடினார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் தம் தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

'இந்த மகிழ்ச்சியான விழாவில் தலைமையேற்கின்ற பேறு பெற்றமைக்காக மிகவும் பெருமையடைகிறேன்.

இருபதாம் நூற்றாண்டை எழுச்சிமிக்க நூற்றாண்டாக மாற்றியவர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள். அவரது எழுத்துச் செல்வம், கவிதைச் செல்வம் இதுநாள்வரை, தனி உடைமையாக இருந்து வந்ததைப் பொதுவுடைமையாக, நாட்டு உடைமையாக, மக்கள் உடைமையாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் பல ஆண்டுகளாகக்

**தமிழ்நாட்டிலே உள்ள விற்பனை நிலையங்கள், கடைகள், தொழிற்சாலைகள் இவைகளில் தமிழ்ப் பெயர் இடம் பெற வேண்டும் என்பது பாவேந்தருடைய தணியாத ஆசை. அதை நிறைவேற்றுகிற வகையில் அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்**

முதல் அட்டை சொல்லும் செய்தி

கலைஞருக்கும், எனக்கும், அதுபோன்ற ஆர்வம் உள்ளவர்களுக்கும் இருந்தாலும், கலைஞருடைய ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னர் பாவேந்தருடைய நூற்றாண்டைக் கொண்டாடுகின்ற அந்தப் பெரிய வாய்ப்பும் நமக்குக் கிடைத்த இந்தக் காலகட்டத்தில் அவரது நூல்களையும் நாட்டுடைமை ஆக்குகின்ற அந்தக் கடமையை மேற்கொள்வது என்று கலைஞரே தீர்மானித்தார்.

கலைஞருடைய ஒரு தனித்திறமை, எதைச் செய்வது, எப்படிச் செய்வது, எப்போது செய்வது என்ற இந்த மூன்றையும், அவரை மிஞ்சுகிறவர்கள் இந்த நாட்டில் இல்லையென்றால், எல்லோரும் ஏற்றுக் கொள்வீர்கள். அவர்தான் இந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டும் என்ற சூழ்நிலையுடைய வாய்ப்பும் அமைந்தது. அந்தக் கடமையை நிறைவேற்ற எண்ணிப் பார்த்து, அவர்களை எல்லாம் அழைத்துப்பேசி, ஒரு பெரும்தொகையை வழங்க கலைஞர் அவர்கள் முன்வந்திருக்கிறார்கள்.

தமிழக அரசின் பெயராக-தமிழக மக்களுக்கெல்லாம் மகிழ்ச்சியளிக்கிற ஒரு கடமையாக-



இந்தக் கடமை நிறைவேற்றப்படுகிறது. பாவேந்தர் நூலுக்கு விலை இல்லை. அவர் ஊட்டிய தமிழ் உணர்வுக்கும் அளவில்லை. இது விலையாகவோ, அளவிட்டுத் தருகிற நிதியாகவோ கருதுவது பொருத்தமும் அல்ல. தமிழக அரசுக்கு எத்தனையோ வறுமை இருக்கிறபோது இதைவிட ஒரு பெரும் செயலை எளிதில் வேறு எவரும் நிறைவேற்ற முடியாது. எனவே அப்படிப்பட்ட ஒரு கடமை இங்கு நிறைவேறுவதை எண்ணி மகிழ்ந்து பாவேந்தர் குடும்பத்தாருக்கு இந்த நேரத்தில் எனது வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.'

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்களுக்கும், தமிழ்வளர்ச்சித் துறையின் சார்பிலும், அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கம் சார்பிலும், பாவேந்தரின் நூல்களை வெளியிட்ட பதிப்பகங்களின் சார்பிலும் பொன்னாடைகள்-சால்வைகள்-மாலைகள் அளிக்கப்பட்டன.

அதன்பின்- மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், புரட்சிக்கவிஞர் அவர்களின் மகள் திருமதி சரசுவதி கண்ணப்பன், புதல்வர் திரு. மன்னர் மன்னன், இரண்டாவது மகள் திருமதி வசந்தா தண்டபாணி ஆகியோர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் இரண்டு இலட்சமும், பாவேந்தரின் மூன்றாவது மகள்-மறைந்த ரமணியின் பிள்ளைகள்-மணிமேகலை, வீரமணி, முல்லைக்கொடி, சிவசுப்பிரமணியம், செல்வி சுப்புரத்தினம் ஆகியோர் ஒவ்வொருவருக்கும் ரூபாய்நாற்பதாயிரமும் நிதி வழங்கினார். அதேபோல முதன்முதலாகப் பாவேந்தரின் நூல்களை உரிமைபெற்றுப் பதிப்பத்து வந்த புதுக்கோட்டை - இராமச்சந்திரபுரம் செந்தமிழ் நிலையம் உரிமையாளர் திரு. சுப்பையாவுக்கு ஒரு இலட்சம் ரூபாயும், சென்னை பாரி நிலையம் உரிமையாளர் திரு. செல்லப்பனுக்கு ஒரு இலட்சம் ரூபாயும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வழங்கினார். சென்னை பூம்புகார் பதிப்பக உரிமையாளர் திரு. பிரசாத் சிங்குக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

பாவேந்தர் அவர்களின் குடும்பத்தார் சார்பில், புரட்சிக் கவிஞர் அவர்களின் மகன் மன்னர் மன்னன் அவர்கள் நன்றி தெரிவித்து உரையாற்றினார். 'இந்த இனிய நன்னாளைத் தமிழகம் என்றென்றும் பாரராட்டும். 'இது, எனது' என்பதை வெறுப்பவர் என் தந்தையார். நாங்களும் அதையொட்டிய எங்கள் எண்ணத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களிடம் தெரிவித்தோம். எங்கள் தந்தையாரின் எழுத்தோவியங்களை மக்கள் சொத்தாக்க யார் யாரோ முயன்றார்கள். அவைகளை நாட்டுடைமையாக்குவது கலைஞர் - பேராசிரியர் காலத்தில்தான் நடக்கும் என்பது இந்நிகழ்ச்சிமூலம் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது' என்று அப்போது அவர் நன்றியுணர்வோடும் பெருமிதத்தோடும் தெரிவித்தார்.

மாண்புமிகு முதல்வர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையில் குறிப்பிட்டதாவது:

'நம் இதயத்தைக் குளிர வைக்கும் நிகழ்ச்சி இது. இன்று இந்த நிகழ்ச்சியில் என்ன பேசுவது என்றே எனக்குத் தெரியவில்லை. காரணம் எந்தக் குடும்பத்திற்கு அரசின் சார்பாக எம்மால் இயன்ற உதவியினைச் செய்கிறோமோ, அந்தக் குடும்பத்திற்கு மாத்திரமல்ல, இந்தப் பெரும் தமிழ்க் குடும்பத்திற்குக் கவித் தலைமை ஏற்று, கவிதைகளை, வாளாக, வேலாக ஆக்கித் தந்து, எங்களோடு எல்லாம் நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பை நாங்கள் பெறவும், அதனால் அந்தப் பெருமை எங்களுக்குச் சேரவும் காரணமாக இருந்த புரட்சிக்



கவிஞர் பாவேந்தர் அவர்கள் இன்று நம்மிடையே இல்லை என்கின்ற அந்த உணர்வு உள்ளத்தை ஒருபுறத்திலே உலுக்கிக் கொண்டேயிருக்கிறது.

'பாவேந்தர் மாத்திரமல்ல, இன்றைய தமிழ் நாட்டிற்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகிற தந்தை பெரியார் இல்லை, பேரறிஞர் அண்ணா இல்லை, தமிழ்நாட்டை வழிநடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பும் கடமையும் - அந்தத் தலைவர்களின் திறமையை ஆயிரம் பங்குகளாகப் பிரித்து, அதிலே ஒரு பங்கு அளவுக்குக்கூட நிகரில்லை என்றாலும், எங்கள் தோளிலே சுமத்தப் ப்ட்டிருக்கிறது. அந்தப் பொறுப்பை உணர்ந்து புரட்சிக் கவிஞருக்கு நாங்கள் செலுத்த வேண்டிய மரியாதையை இன்றைக்குச் செலுத்துகின்றோம். தம்பி மன்னர் மன்னன் குறிப்பிட்டதைப் போல நானும், நம்முடைய கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களும் கலந்துபேசி, அவர்களோடு-குடும்பத் தாரோடு தொடர்பு கொள்ளவும், பாவேந்தரு டைய நூல்களை வெளியிட்ட பதிப்பகத்தாரோடு தொடர்பு கொள்ளவும் நம்முடைய நண்பர் ஔவை நடராசன் அவர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டு அனைவரையும் ஒன்றுகூட்டி ஒருநாள் அவர்களோடு நானே முன்நின்று பேசி சில நொடிகளில் ஒரு நல்ல முடிவிற்கு வந்ததன் காரண மாக இத்தனை விரைவில் இந்த நிகழ்ச்சி இங்கே நடைபெற்று நிறைவுற்றிருக்கிறது.

''தம்பி மன்னர் மன்னன் குறிப்பிட்டதைப் போல, தொகையல்ல-இதன் பின்னால் இருப்பது. பாவேந்தருக்குத் தமிழ்நாட்டு மக்கள் அளிக்கின்ற காணிக்கை - அதுதான் இந்த நிகழ்ச்சியே தவிர, தொகை வழங்குகிற நிகழ்ச்சி பெரிதல்ல. பாவேந் தரோடு நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பைப் பெற்றவர்கள் நாங்கள். பாவேந்தருக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் முன்னின்று பல ஆண்டு களுக்கு முன்பு இருபத்தையாயிரம் ரூபாய் பொற் கிழியை அளித்தார்கள். அன்றைக்கு இருபத்தை யாயிரம் ரூபாய் தருவது என்பது அந்தக் கால கட்டத்திலே எவ்வளவு பெரும் தொகை என் பதைப் பணத்தின் மதிப்பைக் கணக்கிடக்கூடிய வர்கள் புரிந்து கொள்ள முடியும்.

'பாவேந்தர் மறைந்தவுடன் புதுவைக்குச் சென்று அவருடைய இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவன் என்கின்ற முறையில், அன்று புதுவை நகரம் மாத்திரமல்ல, தமிழர்கள் எங்கெங்கு வாழ்கிறார் களோ, அந்த நிலமெல்லாம் கண்ணீரால் நனைந் தது. புதுவை அரசு பாவேந்தருக்குச் சிலை எழுப் பியது. பாவேந்தர் வாழ்ந்த வீட்டை நினைவுக் கூடமாக ஆக்கியது. உலகத் தமிழ் மாநாடு நம் முடைய தலைநகரம் சென்னையில் நடைபெற்ற போது பாவேந்தருக்குச் சிலை அமைக்கப்பட்டது. இராஜாஜி மண்டபத்திலுள்ள ஆங்கிலேயப் பிர முகர்கள் படங்களெல்லாம் அகற்றப்பட்டு, தமிழ் உணர்வும் நாட்டு உணர்வும் நிலைபெறக்கூடிய வகையில் படங்கள் அமைக்கப்பட்டபோது - கழக ஆட்சி கடந்த காலத்திலே பொறுப்பிலே இருந்த போது - இராஜாஜி மண்டபத்திலே அமைக்கப் பட்ட ஓவியங்களில் ஒன்றாக - பெரும் ஓவிய மாக - பாவேந்தருடைய படம் அமைக்கப்பட்டது.

'நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சி யில் பாவேந்தருக்கு அவருடைய பெயரால் பல் கலைக்கழகம் காணப்பட்டது. பாவேந்தருடைய நூல்களைப் பொதுவுடைமை ஆக்கவேண்டும், அரசுடைமையாக ஆக்கவேண்டும் என்கின்ற முயற்சி பல காலமாக எடுக்கப்பட்டாலும்கூட,

அது நடைபெறுவதற்குப் பல இடையூறுகள் அமைந்து இன்றைக்கு அது ஓரளவு முற்றுப் பெற்றிருக்கிறது. இதற்கு இணக்கம் தெரிவித்த பதிப்பகத்தாருக்குத்தான் நான் பெரிதும் நன்றி கூறவேண்டும். இங்கேகூட நீங்கள் கண்டீர்கள், எங்களால் அளிக்கப்பட்ட சிறு தொகையைப் பெற்றுக் கொண்ட பாவேந்தருடைய குடும்பத்தின் சார்பாக தம்பி மன்னர் மன்னன் நன்றி சொன்னார். நாங்கள் நன்றி சொல்லவேண்டியது செந்தமிழ் நிலையத்தார், பாரி நிலையத்தார், பூம்புகார் பதிப்பகத்தார்-அவர்களுக்கு நாங்கள் நன்றி சொல்கிறோம். ஏனென்றால் பாவேந்தர் நூல்களை வெளியிடுகின்ற உரிமையை அவர்கள் பெற்றவர்கள்.

**எங்கள் தந்தையாரின் எழுத்தோவியங்களை மக்கள் சொத்தாக்க யார்யாரோ முயன்றார்கள். அவைகளை நாட்டுடைமையாக்குவது கலைஞர்-பேராசிரியர் காலத்தில்தான் நடக்கும் என்பது இந் நிகழ்ச்சி மூலம் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது.**

**-பாவேந்தரின் மகன்**
**கவிஞர் மன்னர் மன்னன்**

அவர்கள் பெற்ற உரிமையை அரசுடைமையாக ஆக்குவதற்கு அவர்கள் சிறிதும் தயக்கம் காட்டாமல் உடனடியாக ஒப்புதல் அளித்தார்கள். அவர்கள் கேட்ட தொகை பெரிதென்றாலும் நான் பேரம் பேசி அவர்களை ஒப்புக்கொள்ள வைக்கப்பட்ட தொகைக்கும் அதற்கும் பார்த்தால் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு உண்டு. அந்த பேரத்தில் நான்தான் வெற்றி பெற்றேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

'இந்த நாளில் தம்பி மன்னர் மன்னன் ஒன்றைக் குறிப்பிட்டார். பாவேந்தர் எழுதிய ஒரு பாடலுக்குத் தலைப்பு 'உன்னை விற்காதே' என்பதாகும். 'தென்னிலங்கை வேந்தன் ராவணனை'... என்று தொடங்குகின்ற பாடல் அது. அந்த 'உன்னை விற்காதே' என்கின்ற தலைப்பை ஒரு திரைப் படத்திற்குத் தலைப்பாக வைக்கவேண்டும் என்று எண்ணியபோது, நான் அனுமதி கேட்டு - மன்னர் மன்னனுக்கு ஒரு கடிதம் எழுதினேன். 'அனுமதி இல்லாமலே எடுத்துக் கொள்ளலாம்' என்று மன்னர் மன்னன் பதில் எழுதியிருந்தார். நான் உன்னை விற்காதே என்ற தலைப்பை வைக்காததற்குக் காரணம் அதற்குள்ளாகச் சிலர் விலை போய்விட்ட காரணத்தால்! இனி யாருக்குப் போய் சொல்வது என்பதற்காக இந்தத் தலைப்பை வைக்காமலேயே விட்டுவிட்டேன்.

'இன்று இந்த நாளில் அரசின் சார்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். புரட்சிக் கவிஞருடைய கவிதைகளிலேயே ஒரு செய்தியைச் சொல்கின்ற - ஒரு அறிவுரையை வழங்குகின்ற - தமிழ் மக்களுக்கு ஒரு ஆணையிடுகின்ற கவிதை நூலாக நான் கருதுவது 'தமிழியக்கம்' என்பதாகும். அவர் 'அழகின் சிரிப்பு' எழுதியிருக்கிறார். 'குடும்ப விளக்கு' எழுதியிருக்கிறார். 'இருண்ட வீடு' தந்திருக்கிறார். 'பாண்டியன் பரிசு' தந்திருக்கிறார். 'எதிர்பாராத முத்தம்' தந்திருக்கிறார். அவருடைய கவிதைகள் முதல் தொகுப்பாக, இரண்டாம் தொகுப்பாக வெளிவந்திருக்கின்றன.

'இவைகள் அனைத்திலும் அவர் நமக்கு ஆணையிடுவதுபோல் தந்துள்ள நூல் 'தமிழியக்கம்' என்பதாகும். அந்த தமிழியக்கத்தில் 'தமிழ்நாட்டுத் தெருக்களிலே தமிழ்தான் இல்லை' என்று தன்னுடைய ஏக்கத்தைத் தெரிவித்திருக்கிறார். அந்த ஏக்கத்தைப்போக்க அரசு இப்போது நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

'அண்மையில் 'பாவேந்தர் கனவு' என்ற ஒரு நூல் நம்முடைய பேரவைத் தலைவரால் எழுதப்பட்டு அணிந்துரைக்காக என்னிடத்திலே வழங்கப் பட்டபோது அதையும் படித்துப் பார்த்தேன். அதைப் படிக்கும்போது மீண்டும் தமிழியக்கத்தை• பாவேந்தருடைய நூலைப் படிக்க வேண்டும் என்கின்ற தூண்டுதல் ஏற்பட்டது.

இதைப் படித்த காரணத்தால் மீண்டும் தமிழியக்கத்தைப் படித்தேன். அந்தத் தமிழியக்கத்திலே பாவேந்தர் விடுத்திருக்கிற ஆணையை நிறைவேற்ற இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே ஆத்மா என்று ஒன்று இருந்து—(எங்களுக்கு நம்பிக்கை இல்லை) அப்படி இருந்து வானுலகிலே பாவேந்தர் உலவிக் கொண்டிருப் பாரேயானால் அவருடைய குடும்பத்தாருக்கு இந்தப் பொற்கிழி வழங்கியதைப் பற்றிக்கூட அவர் மகிழ்ச்சியடையமாட்டார். நான் இன்று தெரிவிக்கின்ற இந்த அறிவிப்பைக் கேட்டுத்தான் மகிழ்ச்சியடைவார்.

'தமிழ்நாட்டிலே உள்ள விற்பனை நிலையங்கள், கடைகள், தொழிற்சாலைகள் இவைகளில் தமிழ்ப் பெயர் இடம்பெற வேண்டும் என்பது அவருடைய தணியாத ஆசை. அதை நிறைவேற்றுகின்ற வகையில் அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'எடுத்துக்காட்டாக இப்போது 'ஜெயம் சில்க் ஸ்டோர்ஸ்' என்று இருப்பது தமிழில் எழுதப்பட வேண்டும் என்று சொன்னால், ஜெயம் சில்க் ஸ்டோர்ஸ் என்று போடுவது தமிழ் அல்ல. அதற்காக ஜெயம் என்கின்ற பெயரை மாற்றத் தேவையில்லை. ஏனென்றால் ஒருவருடைய பெயரால் விளங்கக்கூடிய நிலையமாக அது இருக்கக்கூடும். எனவே ஜெயம் என்கின்ற அந்த வார்த்தையை அவர்கள் இஷ்டப்பட்டு, எப்படி ராமையா அன்பழகன் ஆனாரோ அதைப்போல வெற்றி



## கரும்புக்குக் கொள்முதல் விலை அறிவிப்பு

**1990-91**-ஆம் ஆண்டிற்கான சர்க்கரைப் பருவத்திற்குக் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.290 கொள்முதல் விலையாக விவசாயிகளுக்குத் தரப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

விவசாயிகளுடைய கோரிக்கைகளின் அடிப்படையில் இந்த ஆண்டு மத்திய அரசு 8.5 சதவிகிதம் கரும்புச் சத்துக் கொண்ட கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.230 விலை நிர்ணயித்துள்ளது. அந்த விலையுடன், மாநில அரசு பரிந்துரை விலையாக ரூ.50 கூடுதலாகச் சேர்த்து, டன் ஒன்றுக்கு 8.5 சதவிகிதம் கரும்புச் சத்துக் கொண்ட கரும்புக்கு ரூ.280 கொடுப்பது என்றும், விவசாயிகளுடைய உற்பத்திச் செலவைக் கருத்திற்கொண்டு மாநில அரசு கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ.10 மானியமாக அளிப்பது என்றும், முடிவு செய்யப்பட்டுள்ளது என்று மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

எனவே, இந்த ஆண்டு கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்குக் குறைந்த பட்சம் ரூ.290 மாநில அரசின் பரிந்துரை விலையாகக் கிடைக்கும்.

மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிட மாநில அரசு பரிந்துரை விலையாக ரூ.280 நிர்ணயம் செய்ததற்கு மேல், மானியமாக டன் ஒன்றுக்கு ரூ.10 கொடுப்பதன் மூலம், தமிழக அரசுக்கு ரூ.10 கோடி இந்த ஆண்டு கூடுதலாகச் செலவு ஏற்படும் என்றும் முதல்வர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு ஆலைக்கும் சென்ற ஆண்டு (1989-90) கிடைத்த சர்க்கரைச் சத்தின் அடிப்படையில், அவர்கள் 1990-91-ஆம் ஆண்டிற்குக் கொடுக்க வேண்டிய கரும்பு விலை நிர்ணயம் செய்யப்பட்டு அறிவிக்கப்படும். இவ்வாறு அறிவிக்கப்படும் கரும்பின் விலை 1989-90-இல் கொடுக்கப்பட்ட கரும்பு விலைக்குக் குறைவாக இருந்தால், 1989-90-இல் கொடுத்த விலையையே ஆலை அதிபர்கள் 1990-91-ஆம் ஆண்டிற்குக் கரும்பு விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும் என்றும் அறிவித்துள்ளார்.

சர்க்கரை ஆலையிலிருந்து 40 கிலோமீட்டர் தூரம் வரை கரும்பை ஏற்றிவரும் வாகனச் செலவைத் தற்போது விவசாயிகளே ஏற்றுக்கொள்கிறார்கள். இதற்கு மேல் உள்ள தூரத்திற்கான செலவை கரும்பு ஆலையே ஏற்றுக் கொள்கிறது. டீசல் விலை உயர்வினால் வாகன வாடகை அதிகம் ஆகிவிட்டதால், இந்த தூரத்தை 40 கிலோமீட்டரிலிருந்து குறைக்க வேண்டும் என்று விவசாயிகள் கேட்டுக் கொண்டனர். இதனைப் பரிசீலித்த அரசு, விவசாயிகள் 30 கிலோ மீட்டர் தூரத்திற்கான வாடகையை ஒப்புக்கொண்டால் போதும். அதற்கு மேல் ஆகும் வாடகைச் செலவை ஆலைகள் ஏற்றுக் கொள்ளும்' என்றும் முதல்வர் அறிவித்துள்ளார்.

---

என்று ஆகலாம். கருணாநிதி கருணாநிதியாகவே இருப்பதைப்போல் - அது நடைமுறைச் சொல், அது பழகிவிட்ட காரணத்தால், எல்லோராலும் சொல்லப்பட்டுவிட்ட காரணத்தால் அந்தப் பெயர் அப்படியே நிலைத்து விடலாம். எனவே பெயர்ச் சொற்களை மாற்றத் தேவையில்லை. ஜெயம் சில்க் ஸ்டோர்ஸ் என்று இருந்தால் - 'ஜெயம் பட்டு நிலையம்' அல்லது 'ஜெயம் பட்டு மாளிகை' என்று பெயரிடப்பட வேண்டும்.

'மற்ற மாநிலத்தார் - மற்ற மொழிக்காரர் புரிந்து கொள்ள ஆங்கிலத்திலே பெயர் இருக்கலாம். அல்லது அந்தக் கடையை வைத்திருப்பவர் ஒரு தாய்மொழிக்குச் சொந்தக்காரராக இருப்பாரேயானால், அதை மூன்றாவது இடத்திலோ அல்லது இரண்டாவது இடத்திலோ அந்தப் பெயரை எழுதிக் கொள்ளலாம். ஆனால் முதல் இடம் பெறவேண்டியது தமிழ்ப் பெயராக இருக்க வேண்டும் என்பதாகும். 'சுபா ஜுவல்லரி' என்றால் 'சுபா நகை மாளிகை' என்று பெயரிடப்பட வேண்டும். சிங்கப்பூரில் 'அணிமணி பொற்சாலை' என்று பெயரிடுகிறார்கள். ஆனால் இங்கு சிங்கத்தமிழர்கள் வாழ்கிறோம். இங்கே அவைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அதை ஏற்றுக்கொண்டே தீர வேண்டும் என்பதற்கான அரசு ஆணை மிக விரைவில் பிறப்பிக்கப்படும் என்பதை, இந்த இனிய விழாவில் எடுத்துச் சொல்லி, அரசின் சார்பில் தரப்பட்ட தொகை சிறிதாகவோ, பெரிதாகவோ, எதுவாக இருந்தாலும், அந்தத் தொகையைப் பெற புரட்சிக்கவிஞர் என்ற புலி வாழ்ந்த குகையைவிட்டு இங்கு வந்த இந்தக் குடும்பத்தார் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த நிகழ்ச்சியை மேலும் சிறப்பாக்குவதற்காக வருகை தந்த தமிழ்ச்சான்றோர்கள், புலவர்கள், கவிஞர்கள், அமைச்சர் பெருமக்கள், அரசு அலுவலர்கள், பதிப்பகத்தார் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தையும், இதயமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

# சிறு சேமிப்புத் துறை

ஒய்வு பெற்ற பின் நிரந்தர பென்ஷன் பெறுங்கள்.

நாள் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் 5 ஆண்டுகளுக்கு மட்டும் சேமியுங்கள்




ரூ. 120 முதல் ரூ. 7,680 வரை வெவ்வேறு வயதுப் பிரிவுகளுக்கு பென்ஷன் எவ்வாறு வேறுபடுகிறது என்பதைப் பாருங்கள்.

இன்றே சேமிக்கத் தொடங்குங்கள்.

| வயது வரம்பு | 5 வருடங்களுக்கு தினசரி சேமிக்க வேண்டிய தொகை | 5 ஆண்டுகளில் முதிர்வுத்தொகை தினசரி ரூ. 5/- வீதம் சேமித்து ஒவ்வொரு மாதமும் மொத்தமாக R.D.-ல் செலுத்தியது) | ஐ.வி.பி.யில் முதலீடு செய்து 58-வது வயதில் முதிர்வுத் தொகை | மாதாந்திர ஒய்வூதியம் |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 18-23 | 5 | 12,004.50 | 7,68,000 | 7,680 |
| 23-28 | 5 | 12,004.50 | 3,84,000 | 3,840 |
| 28-33 | 5 | 12,004.50 | 1,92,000 | 1,920 |
| 33-38 | 5 | 12,004.50 | 96,000 | 960 |
| 38-43 | 5 | 12,004.50 | 48,000 | 480 |
| 43-48 | 5 | 12,004.50 | 24,000 | 240 |
| 48-53 | 5 | 12,004.50 | 12,000 | 120 |

- ★ நாள் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் 5 ஆண்டுகளுக்கு மட்டும் சேமியுங்கள்.
- ★ மாதாந்திர சேமிப்பை R.D-யில் 2 கணக்குகளில் முதலீடு செய்யுங்கள் — ரூ. 50 ரூ. 100.
- ★ மறுபடியும் R.D. முதிர்வடைந்த தொகையை ஐ.வி.பி-யில் முதலீடு செய்யுங்கள்; பிறகு மீண்டும் மீண்டும் ஒய்வுபெறும் வயது வரை மறு முதலீடு செய்யுங்கள்.
- ★ 58ஆம் வயதில், ஐ.வி.பி. முதிர்வடைந்த தொகையை மாதாந்திர வருமானத் திட்டம் மற்றும் இதர பொருத்தமான திட்டங்களில் மறு முதலீடு செய்யுங்கள். இதன் மூலம் நீங்கள் ரூ. 120/- முதல் ரூ. 7.680/- வரை பென்ஷன் பெறுவீர்கள்.
- ★ ரூ. 50/- R.D. கணக்குக்கு இலவச இன்ஷூரன்ஸ் வசதி.
- ★ தமிழ்நாட்டில் 1.6.90 முதல் 31.12.90 முடிய R.D. கணக்கில் முதலீடு செய்யப்பட்ட ஒவ்வொரு ரூ. 500/- தொகைக்கும் ஒரு இலவசப் பரிசுக்கூப்பனைப் பெறுங்கள். மாருதி கார் முதல் குவார்ட்ஸ் சுவர்க்கடிகாரம் வரை 262 பரிசுகளைப் பெற வாய்ப்பு உண்டு.

## பரிசுக் கூப்பன்கள் கிடைக்குமிடம்

**சென்னையில்**

- மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம், சென்னை - 5 மற்றும் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள்,
- மாநகராட்சி அலுவலகம், சென்னை - 3 மற்றும் அனைத்து
- மாநகராட்சி வட்ட அலுவலகங்கள்,
- சமூகப் பாதுகாப்பு துணை இயக்குநர் அலுவலகம், குறளகம், சென்னை - 108.

**மாவட்டங்களில்**

- மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள்,
- வட்டாட்சியர் அலுவலகங்கள்,
- வட்டார வளர்ச்சி அலுவலகங்கள்.

மேலும் விபரங்களுக்கு:
இயக்குநர்,
**சிறுசேமிப்புத்துறை,**
143, அண்ணா சாலை,
சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209

DIPR/2844/MS/90/ARIES

# தடய அறிவியல்

—பேராசிரியர்
டாக்டர் ப.சந்திரசேகரன்
இயக்குநர்,
தடய அறிவியல் துறை

**ந**கைகளைக் குறியீடு செய்து, அப்புகைப்படங்களைப் மிகப்பெரிதுபடுத்தி வைப்பதன் மூலம், நகை திருட்டு மற்றும் மோசடி வழக்குகளில் நகைகளைச் சுலபமாகக் கண்டுபிடிக்க இயலும்.

தடய அறிவியல் மூலம் புகைப்படங்களைப் மிகப்பெரிதுபடுத்துதல் என்பது, நகைகளில் உள்ள மிகச் சிறிய குறைபாடுகளைப் பெரிதுபடுத்திக் காட்டுவதாகும். இவை ஆபரணங்களை அல்லது அவற்றின் ஒரு பகுதியைப் புகைப்படமெடுத்து பெரிதுபடுத்துவதாகும். தடயம் கண்டுபிடிப்பதற்கு உண்மையான அளவைவிட, புகைப்படத்தில் மூன்று மடங்கு பெரிதுபடுத்தினால் போதுமானது. இப்புகைப்படங்களை எழுபது மடங்கு வரை பெரிதாக்கிக் காட்ட இயலும்.

இவற்றில் பெரிய அளவில் உள்ள நகைகளுக்கு, புகைப்படங்களை மூன்று மடங்கு பெரிதாக்கினால் போதுமானது. காது வளையம் போன்ற சிறிய நகைகளுக்கு ஆறு மடங்கு பெரிதாக்கினால் போதுமானது.

பொதுவாகக் கோவில் நகைகள், தங்கம் அல்லது உயர் ரகக் கற்கள் தங்கத்தில் பதிக்கப்பட்டவையாக இருக்கும். உலகெங்கிலும் இதைச் செய்வதற்குப் பொற்கொல்லர்கள் ஒரே மாதிரியான முறையைத்தான் பின்பற்றுகிறார்கள். அதாவது வார்ப்படம் செய்து, சிறு மணிகள் வைத்து அலங்கரித்து, உயர்தரக் கற்கள் பதித்துச் செய்கின்றனர். பட்டை தீட்டி, கற்களைப் பதித்து நகை செய்தல், தென் இந்தியா மற்றும் இலங்கையில் பொதுவாகக் காணப்படுகிறது.

எந்தவிதமான முறையில் நகைகளைச் செய்தாலும், நகைகளை முழுமைப்படுத்தி அணி செய்தல், பொற்கொல்லர்களின் கைகளிலேயே இருக்கிறது.

பொதுவாக எல்லா நகைகளும் பொற்கொல்லர்களின் கைகளினாலேயே முடிக்கப்பெறுவதால், அவற்றில் கற்களைப் பதித்திருப்பதிலோ, பட்டை தீட்டப்பட்டிருப்பதிலோ மிகச் சிறிய தனித்துவ வேலைப்பாடுகள் இருக்கக்கூடும். ஒரே பொற்கொல்லர் செய்யும் ஒரே மாதிரியான நகையில் கூட வேற்றுமை இருக்கும். இரண்டு நகைகளுமே மாதிரியிலோ அல்லது அளவிலோ வேறுபடும். இதுவே இயல்பான அடையாளம் அல்லது ''பொற்கொல்லர்களின் விரல் பதிவுகளாகும்''.

இவ்வாறு கோவில் மற்றும் புராதன நகைகளைப் புகைப்படம் எடுத்து மிகப்பெரிதுபடுத்தி வைத்துக் கொண்டால், பிற்காலத்தில் அவை களவு போனால் கண்டுபிடிப்பதற்கு மிகவும் ஏதுவாக இருக்கும்.




1 2

# அடுக்கிக் கொண்டே போகலாம்
# இந்த ஆட்சியில்
# ஆண்டிரண்டின் சாதனையை!

## -முதல்வர் கலைஞர்

'இம்' என்றவுடன் மிகவும் பிற்பட்ட மக்களுக்கு இருபது சதவிகிதம் ஒதுக்கியது கழக ஆட்சி!







இல்லையோ மணவாழ்வு என ஏங்கிய மங்கையர்க்கு இல்வாழ்வு விளக்கேற்ற ஐயாயிரம் ஈவதும் இந்த ஆட்சி!



இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு எனும் கோரிக்கை இனிதாக நிறைவேற்றியது எந்த ஆட்சி?

மத்திய அரசு அலுவலர் ஊதியத்திற்கீடாக மாநில அரசு ஊழியர்க்கும் ஊதியம் வகுத்தது கழக ஆட்சி!







கண்களுக்கு ஒளியூட்ட சிகிச்சை முகாம்-நமது பெண்களுக்கும் சொத்துரிமை வழங்கியது இந்த ஆட்சி!




மண்டல் கமிஷன் பரிந்துரை நிறைவேற்ற மத்திய அரசுடன் கைகோத்து நின்றது இந்த ஆட்சி!




பத்தாயிர ரூபாய் வரை கடன்பட்டிருந்தோர் கஷ்டத்தைப் பட்டென்று தீர்த்து வைத்ததும் கழக ஆட்சி!




ஆதிதிராவிடர்க்கு இலவச காங்க்ரீட் வீடுகள் அம்பேத்கார் பெயராலே ஒரு மாவட்டம் கண்டது எந்த ஆட்சி?



# தருமபுரி மாவட்டத்தில் பட்டு வளர்ச்சி

பட்டு வளர்ப்பு, வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட அதிக வேலை வாய்ப்பு அளிக்கும் தொழிலாகும். இத்தொழில் தருமபுரி மாவட்டத்தில் 18 ஒன்றியங்களிலும் செயல்பட்டு வருகிறது, தற்சமயம், 23,000 ஏக்கர் பரப்பளவில் மல்பெரி நடவு செய்யப்பட்டு இதன் மூலம் சுமார் 35,000 விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர்.

இம்மாவட்டத்தில் நிலவி வரும் சீதோஷ்ண நிலையாலும் தொன்று தொட்டு பட்டுத் தொழிலில் ஈடுபட்டு வரும் கர்நாடக மாநிலத்தை ஒட்டி இம்மாவட்டம் இருப்பதாலும், கிராமங்கள் நிறைந்த இம்மாவட்டத்தில் அதிக அளவு பணியாட்கள் கிடைப்பதாலும், பட்டு வளர்ப்புத் தொழிலில் தன்னிகரற்ற மாவட்டமாகத்தருமபுரி மாவட்டம் விளங்குகிறது. தமிழகத்தின் மொத்த மல்பெரி பரப்பளவில் சுமார் 50% இம்மாவட்டத்தில் உள்ளது.

இத்தொழிலை மேலும் ஊக்குவிப்பதற்காக, தேசிய பட்டு வளர்ப்புத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், ஐ.எல்.ஓ.ஐஃபாட் சுவிஸ் மேம்பாட்டுத் திட்டம், போர்டு பவுண்டேசன் திட்டம் மற்றும் மத்திய சிறப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் அதிக அளவில் மல்பெரி விரிவாக்கம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் மேலும் 15,000 ஏக்கர் அளவில் புதிதாக மல்பெரி பயிரிடப்பட்டு, இதன் மூலம் சுமார் 40,000 கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## தேசிய பட்டு வளர்ப்புத் திட்டம்

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் தேசிய பட்டு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் திட்ட காலமான ஐந்தாண்டுகளில் (1989-90 முதல் 1993-94 முடிய) மேலும் 15,000 ஏக்கர் அளவில் மல்பெரி பயிரிட உள்ளது. இத்திட்டத்திற்காக தருமபுரி மாவட்டத்திற்கு மட்டும் ரூ.1,750 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.884- இலட்சம் உள்ளமைப்பு வசதிகளைப் பெருக்குவதற்காகப் பயன்படுத்தப்படும்.

பட்டு விவசாயிகளுக்குத் தரமான பட்டு முட்டைகள் கிடைக்க ஏற்பாடு செய்தல் மற்றும் தகுந்த தொழில் நுட்ப உதவிகள் செய்தல் ஆகியவை தேசிய பட்டு வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இதன் மூலம் ஒரு ஏக்கர் நீர்ப்பாசன வசதி உள்ள நிலத்தின் உற்பத்தித் திறன் 180 கிலோவிலிருந்து 240 கிலோ வரை அதிகரிக்கக் கூடுமெனவும், மானாவாரிநிலத்தின் உற்பத்தித் திறன் 50 கிலோவிலிருந்து 60 கிலோவாக அதிகரிக்கக்கூடுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி திட்ட கால இறுதிக்குள் இம்மாவட்டத்தில் 240 டன் கச்சாப் பட்டு அதிகமாக உற்பத்தி செய்யப்படும்.

தேசிய பட்டு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், கீழ்குறிப்பிட்டுள்ள அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப் படவுள்ளன:

1. ஆதார விதைப்பண்ணைகள் அமைத்தல் (ஓசூர், தேன்கனிக் கோட்டை பகுதியில்)
2. பட்டுக்கூடு அங்காடிகளை விரிவாக்குதல் (ஓசூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, பென்னாகரம்)
3. விவசாயப் பயிற்சி மையங்கள் மற்றும் பட்டுநூற்புப் பயிற்சி அமைத்தல் (தருமபுரி, பென்னாகரம்)
4. பட்டு பயிற்சிப் பள்ளி அமைத்தல் (ஓசூர்)
5. பட்டு வித்தகங்கள் அபிவிருத்தி செய்தல் (அரசு மற்றும் தனியார் பகுதி)
6. தனியார் பட்டு நூற்பகங்கள் ஏற்படுத்துதல்.
7. பட்டுத் தொழில் நுட்பச் சேவை மையங்கள் ஏற்படுத்துதல்.

## தனியார் பட்டு நூற்பகங்கள்:

தருமபுரி மாவட்டத்தில் ஆண்டொன்றுக்குச் சுமார் 154 இலட்சம் பட்டு முட்டைகள் தேவைப்படுகின்றன. இதுநாள்வரை இப்பட்டு முட்டைகள் அரசு பட்டு முட்டை வித்தகங்களில் மட்டுமே உற்பத்தி

செய்யப்பட்டு வந்தன. பட்டு விவசாயிகளின் பெருகிவரும் முட்டைத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் ஆறு தனியார்களுக்குப் பட்டு முட்டை உற்பத்தி செய்ய, தேசிய பட்டு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**தனியார் பட்டு நூற்பகங்கள் செயல்படும் விதம்**

தனியார் பட்டு நூற்பகங்கள் செயல்படும் விதத்தை நேரில் கண்ட போது, தருமபுரி மாவட்டத்தில் தனியார் பட்டு முட்டை உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் மகாலக்ஷ்மி பட்டு முட்டை வித்தகமும் ஒன்றாகும். இந்நிறுவனத்தின் உரிமையாளர்கள் திரு நரேந்திரன் மற்றும் திரு.வெங்கடேஷ்பாபு ஆகியோரைச் சந்தித்தபோது அவர்கள் கூறினார்கள்:

'இவ்வித்தகம் 1990 ஏப்ரல் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது, இவ்வித்தகம் மாதமொன்றுக்கு ஒரு இலட்சம் பட்டு முட்டைகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்டுள்ளது. பட்டு முட்டைத் தயாரிப்பு குறித்து தேவையான பயிற்சியைப் பட்டு வளர்ச்சித்துறை அளித்து வருகிறது. இவ்வித்தகத்திற்குப் பாரத மாநில வங்கி ரூ.1.16 இலட்சம் நடைமுறை மூலதனத்திற்காகக் கடன் வழங்கியுள்ளது. தேசிய பட்டு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இவ் வித்தகத்திற்கு ரூ.20,500- மானியமாக அளிக்கப்பட்டுள்ளது. வித்தகத்திற்குத் தேவையான விதைக்கூடுகள் பட்டு வளர்ச்சித் துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தங்களது வித்தகத்தின் மூலம் அயல் இன மற்றும் நாட்டு இனப் பட்டுப் பூச்சிகளின் கலப்பினத்தின் மூலம் தரமான கலப்பினப் பட்டு முட்டைகள் உற்பத்தி செய்து, தரமான பட்டு நூல் எடுக்க உதவி வருகிறோம்' என்று குறிப்பிட்டார்.

**பாலக்கோடு பகுதிகளில் தனியார் பட்டு நூற்பகங்களின் வளர்ச்சி**

பாலக்கோடு வட்டம் பட்டு நூற்புத் தொழிலில் கடந்த 5 ஆண்டுகளாக்த் திறம்பட முன்னேறி வருகிறது. இதுவரை 141 ஏனங்களும், 45 சர்க்கா ஏனங்களும், 43 பட்டு நூற்பாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அலகுகளில் 117 ஆண்களும், 274 பெண்களும் நிரந்தர வேலை வாய்ப்பைப் பெறுகின்றனர்.

பாலக்கோடு வட்டத்தில் 1988-89-ஆம் நிதியாண்டில், 16557.600 கி.கி. பட்டுக்கூடுகள் கொள்முதல் செய்யப்பட்டு, 1670 கச்சாப்பட்டு தனியார் பட்டு நூற்பாளர்களால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1989-90-இல் 93995.700 கிகி பட்டுக் கூடுகள் கொள்முதல் செய்யப்பட்டு 9400.100 கிகி கச்சாப்பட்டும், நடப்பு நிதியாண்டில் அக்டோபர் 1990 முடிய 78393.00 கிகி பட்டுக்கூடுகள் கொள்முதல் செய்யப்பட்டு, 6770.700 கிகி கச்சாப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

பட்டு நூற்புத் திறனை அதிகரிக்க, புதிய நூற்பாளர்களைக் கண்டறிந்து உரிமம் வழங்குவதன் மூலம், பட்டு நூற்பு அலகுகள் கணிசமான அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தேசிய பட்டு வளர்ச்சித் திட்டத்தில் 15 நூற்பு ஏனங்களுக்கு ரூ.58,500 கடன் வழங்க வங்கிகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது பட்டு நூற்பாளர்களுக்கு அதிகப்பட்சமாக ஒரு பேசின் அலகிற்கு ரூ.50,000, மற்றும் ஒரு சர்க்கா அலகிற்கு ரூ.25,000 கடன் அனுமதி வங்கிகள் அளித்தால், கடன் தொகையில் 50% கடன் தொகை சம்பந்தப்பட்ட நூற்பாளர் பெயரில் வைப்புத் தொகையாக 5 ஆண்டுகளுக்கு இருப்புக் கணக்கில் வைக்கப்படுவதன் மூலம், தொழில் முதலீடு வசதிவாய்ப்பற்ற, பட்டு நூற்பாளர்கள் பயன்பெறும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. வங்கியின் வட்டி சதவீதத்தில் 2.5% மானியமாக வழங்கப்படும். இதுவரை 5 நபர்களுக்குரூ.97,000/-50% கடன் தொகை டான்சில்க்கிலிருந்து பெறப்பட உள்ளது. மேலும் ஒரு நூற்பாளருக்கு 72,000 கடன் வழங்க வங்கிக் கடன் அனுமதிக் கடிதம் பெறப்பட்டுள்ளது.

**புகையில்லா அடுப்புகள்:**

பட்டு நூற்பில் ஒரு கிலோ கச்சாப் பட்டு உற்பத்தி, செலவினம், பயன்படுத்திய பட்டுக்கூடுகள், எரிபொருள் மற்றும் தினக்கூலித் தொகையின் அடிப்படையில் கண்டறியப்படுகிறது. எரிபொருள் அதிகமாகச் செலவினம் மேற்கொள்ளும் ஒரு நிலை, கச்சாப்பட்டின் அதிக அளவு உற்பத்தி செலவினத்திற்குக் காரணமாக அமையும். எனவே, பெங்களூர் மத்திய பட்டு நூற்பு ஆராய்ச்சி மற்றும் தொழில் நுட்ப மையம் நவீன ரக அடுப்புகளை விஞ்ஞான ரீதியாக அறிமுகப் படுத்தியுள்ளது.

புதிய நவீன ரக அடுப்புகள், பட்டு நூற்பு மையத்தினைச் சுத்தமாக வைத்துக் கொள்ள உதவுவதுடன், குறைந்த அளவு எரிபொருள் ஒரு கிலோ கச்சாப்பட்டு உற்பத்திக்குப் பயன்படுத்தும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அடுப்புகள் அலகின் உட்புறத்தில் புகை வருவதைத் தவிர்த்துப் பணியாளர்களின் உடல் நலம் பாதுகாக்கப்படுகிறது.



# அரசின் அறிவிப்புகள், ஆக்கப் பணிகள்

★ தமிழ்நாட்டில் அனல் மின்நிலையங்களில் நிலக் கரிக்குப் பதிலாக பம்பாயிலிருந்து குழாய்கள் மூலம் 20 மில்லியன் கன மீட்டர் அளவுக்கு எரிவாயுவைப் பெற்று அதைப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாகத் தலைமைச் செயலர் அறிவித்தார் (8.12.90).

★ நீலகிரி மாவட்டத்தில் ரூ.18 கோடி விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்தார் (6.12.90).

★ இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 8 ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.23 இலட்சத்து 20 ஆயிரம் செலவில் குடிநீர்க் கிணறுகள் தோண்டத் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது (10.12.90).

★ திண்டுக்கல் கோட்டத்தில் ரூ.308 இலட்சம் மதிப் பீட்டில் வளர்ச்சிப் பணிகள் நடைபெற்றுள்ளன என்று தமிழக அரசு அறிவித்துள்ளது (16.12.90).

★ குடிநீர்த் திட்டப் பணிகளுக்கான விளிம்புத் தொகை கட்ட இயலாத நலிவுற்ற நகராட்சிகளுக்கு உதவ, சுழல் நிதி ஒன்றினைத் துவக்க அரசு தீர்மானித்துள்ளது என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி.மணி அவர்கள் தஞ்சையில் தெரிவித்தார் (14.12.90).

★ தஞ்சை மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள் அமைத்தல், ஆயில் இன்ஜின்கள் வாங்குதல் போன்ற சிறு பாசனப் பணிகளுக்காக வங்கிக் கடன் பெறும் விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறையின் மூலம் மானியம் வழங்க ரூ.140 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்தார் (13.12.90).

★ விவசாயக் கடன் தள்ளுபடி திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் 17 இலட்சம் விவசாயிகள் பயனடைந் துள்ளனர் என்று மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் அறிவித்தார் (11.12.90).

★ வட ஆர்க்காடு - அம்பேத்கர் மாவட்டத்தில் ஆதி திராவிடர் 16 ஆயிரம் பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

★ கொடுங்கையூரில் 7 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 154 மின்விளக்குகளை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்கள் இயக்கி வைத்தார் (15.12.90).

★ மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கிராமங் களில் ரூ.9 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள குடி நீர்த் தேக்கத் தொட்டிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. க.சுந்தரம் அவர்கள் திறந்து வைத்தார் (17.12.90).

---

தேசீய பட்டு வளர்ச்சித் திட்டத்தில், மத்திய பட்டு வாரியம் இப்பகுதியில் ஏனங்களுக்கான 2 அடுப்புகளையும், ரூ.3,000 பெறுமான உபகரணங்களையும், மானியமாக வழங்கும். பட்டு நூற்பாளர்கள் ரூ.750 பெறுமான அடுப்பு கட்டும் பொருட்களுக்கான செலவினை ஏற்க வேண்டும்.

**பட்டு முறுக்கேற்றுதல்:**

பாலக்கோடு வட்டத்தில் பட்டு நூற்புடன் பட்டு முறுக்கேற்றும் அலகு ஒன்று திரு அஜுசுல்லா என்பவரால் ஜுலை 1988-இல் 120 ஸிமிண்டுல்கள் கொண்டு முறுப்பகம் நிறுவபட்டுள்ளது. இதில் 100 முனை சுற்றுப்பொறியும், 60 முனை இரட்டைப்பொறியும் 1 பாவு ஆலையும், 1 நூற்பு இயந்திரமும் நிறுவப்பட்டுள்ளது. இந்த முறுக்காலையில் நாள் 1-க்கு, 10 கிலோ ஊடைப்பாவும், 5 கிலோ பாவுகளும் உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வலகு மூலம் காஞ்சிபுரம் பகுதியின் பட்டு நெசவுக்கேற்ற ஜரி மற்றும் ஜோடுபுரி வார்ப்புகள் உற்பத்தி செய்து, காஞ்சீபுரம் பட்டு நெசவாளர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இவ்வலகில் 10 பணியாளர்கள் பயன்பெறுகின்றனர். அவர்களில் 8 பெண்களும், 2 ஆண்களும் பணிபுரிகின்றனர். பிரதி மாதம் அனைத்துச் செலவினமும் போக ரூ.2,500 லாபம் ஈட்டப்படுகிறது.

**பயிற்சி மையம்:**

பட்டு நூற்புப் பயிற்சி பெற விரும்பும் நபர்களுக்கு மாதம் ரூ.250 உதவித் தொகையுடன் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டு, இதற்கான பயிற்சி மையம் பென்னாகரத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பட்டு நூற்பாளர்களால் அனுப்பப்படும் பணியாட்களுக்கு இங்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும், பாலக்கோடு பகுதிகளில் தனியார் பட்டு நூற்பகங்களில் பணிபுரியும் பணியாளர்களின் குறைகளை நேரில் கேட்ட போது, இப்பகுதியில் அதிக அளவில் பெண்கள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் பட்டு நூற்புப் பயிற்சி மையம் பாலக்கோடு பகுதியில் இடம்பெற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். அவர்களது குறைகளை நீக்கும் பொருட்டு, தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கா. அலாவுதீன், இ.ஆ.ப. அவர்கள் பாலக்கோடு பகுதியில் பட்டு நூற்புப்பயிற்சி நிலையம் அமைய துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் உறுதியளித்துள்ளார்.

ஆகவே, தருமபுரி மாவட்டத்தின் வளர்ச்சிப் பாதையில், பட்டு வளர்ப்புத் தொழிலின் பங்கு அதிகமாக உள்ளது என்றே கூறலாம்.

**- சி.சு. சரவணன்,**
*உதவி மக்கள் தொடர்பு அலுவலர்*
*தருமபுரி மாவட்டம்.*

### திருச்சி மாவட்டத்தில்:



# ரூ 9 கோடியில் 564 குடியிருப்புகளுக்குக் குடிநீர்த் திட்டம்

திருச்சி மாவட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில், க. பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 327 குடியிருப்புகளுக்கும், அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 229 குடியிருப்புகளுக்கும், கரூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 8 குடியிருப்புகளுக்கும் ரூ.9 கோடி செலவில் காவிரியிலிருந்து தண்ணீர் தரும் குடிநீர்த் திட்டம் வடிவமைக்கப்பட்டது. இதற்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் 28.11.90 அன்று க. பரமத்தியில் அடிக்கல் நாட்டினார்.

இத்திட்டத்திற்கு ஆகும் முதல் கட்டச் செலவு ரூ.896 இலட்சம். இத்திட்டத்தைப் பராமரிக்க ஆகும் செலவு ஆண்டிற்கு ரூ.21.58 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் மூலம் பயன் பெறும் மக்கட் தொகை 2,63,125 நபர்கள். இத்திட்டத்தினால் நபர் ஒன்றுக்கு ஆகும் செலவு ரூ.472 ஆகும்.

இத்திட்டத்தின்படி முதல் கட்டப் பணியாக மரவாபாளையம் அருகில் காவிரி ஆற்றில் 5.00 மீட்டர் விட்டமுள்ள சேகரிப்புக் கிணறு அமைக்கப்படும். இக்கிணற்றிலிருந்து நாளொன்றுக்கு 1,37,39,100 லிட்டர் குடிநீர் கிடைக்கும்படி வடிவமைக்கப்படவுள்ளது.

இந்தக் கிணற்றிலிருந்து கிடைக்கும் நீர் 205 குதிரைத் திறன் கொண்ட நீரேற்றி மூலம் அரவக்குறிச்சி மற்றும் தேரப்பட்டி தரைமட்டத் தண்ணீர்த் தொட்டிகளை வந்தடையும்.

இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குக் கால்கோள் நாட்டிப் பேருரை ஆற்றிய மாண்புமிகு அமைச்சர் திரு. கோ.சி.மணி அவர்கள் தமது உரையில், ''மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, கடந்த 2 ஆண்டுக் காலத்தில் நிதி ஒதுக்கீட்டுக்கு மேலே ரூ.130கோடி செலவழிக்கப்பட்டு, போடப்படும் திட்டங்கள் இன்று அடையாளம் காட்டக்கூடிய சொத்துகளாக, கட்டடங்களாக உருவாகி உள்ளன'' என்று தெரிவித்தார்.

மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள் பேசுகையில்:-

''இன்றைய தினம் பெண்களுக்குத் திருமண நிதியுதவி, அரசுப் பதவிகளில் 30 சதவிகித இட ஒதுக்கீடு, சொத்தில் சம உரிமை என்று சட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இயற்றி உள்ளார். விவசாயிகளைப் பொறுத்த வரையில் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே மத்திய அரசு அறிவிப்பினைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் விவசாயி

## திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில்:

### கடற்படைத் தகவல் தொடர்பு மையம்

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், விஜயநாராயணபுரத்தில் ரூ.122 கோடி செலவில் குறைந்த அலைவரிசை கடற்படைத் தகவல் தொடர்பு மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தியக் கடற்படைக்கு இப்படியொரு குறைந்த அலைவரிசை தகவல் மையத்தை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் 1971-ஆம் ஆண்டே உருவானது. தகவல் தொடர்பு கொள்வதில் உள்ள இடர்ப்பாடுகளைத் தவிர்த்து நீருக்கு அடியில் இருக்கும் நீர்மூழ்கிக் கப்பலுடன் தொடர்பு கொள்ளவும், அதேபோல் நீருக்கு அடியில் இருந்து கொண்டே கரையில் உள்ள கடற்படைத் தளபதிகளுடன்தொடர்பு கொள்ளவும் வசதியாக இந்த மையம் அமைக்கப்பட்டுள்ளது.

உலகில் உள்ள மிகச்சிறந்த கடற்படைத் தகவல் மையங்களில் இதுவும் ஒன்று. ஆசியாவிலேயே மிக நவீனதகவல்தொடர்பு மையம் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. உலகில் அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் மட்டும்தான் இந்த கடற்படைத் தகவல் வசதி உள்ளது. உலகில் 7-வது பெரிய கடற்படைத் தகவல் மையமாக இது இருக்கிறது. இந்தியாவில் முதலாவது மையமான இதன்மூலம் இந்தியப் பெருங்கடல், அரபிக்கடல், வங்காள விரிகுடா ஆகிய கடல் பகுதி முழுவதும் தொடர்பு கொள்ள முடியும்.

உலக நாடுகளின் நவீன தொழில்நுட்பம்மூலம் இத்திட்டம் கடந்த 1984-ஆம் ஆண்டு ஜனவரி 19-ஆம் தேதி அடிக்கல் நாட்டப்பட்டது. ரூ.144 கோடிக்குத் திட்டமிடப்பட்டு ரூ.122 கோடி இதுவரை செலவிடப்பட்டுள்ளது. இதற்காக 13 உயர்ந்த தகவல் தொடர்புக் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1,004 அடி உயரத்தில் 700 டன் எடையில் மிகப் பெரிய கோபுரம் இந்த மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 3 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த நவீன தகவல் தொடர்பு மையத்தை மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் 20.10.90 அன்று தொடங்கி வைத்தார்.

இந்தியக் கடற்படைக் கப்பல் 'கட்டபொம்மன்' என்ற பெயர்ப் பலகையை இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் துணைவியார் திருமதி ஜானகி வெங்கட்ராமன் அவர்கள், திறந்து வைத்தார்.

**துரை. ராஜ்குமார்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்**

---

களுக்கு ரூ.10,000 கடன் நிவாரணத் திட்டத்தின் கீழ், 500 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது'' என்று கூறினார்.

விழாவில் பேசிய சட்டமன்ற உறுப்பினர் திரு. மொஞ்சனூர் பி. ராமசாமி அவர்கள் தமது உரையில்- ''இப்போது நிறைவேற்றப்படவுள்ள இந்த 9 கோடி ரூபாய் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு முன்பாகவே அரசு இப்பகுதியில் இடைக்கால நிவாரணமாக 266 ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்துள்ளது. மேலும், கரூர் அருகே ஆண்டிச் செட்டிப்பாளையத்தில் மூன்றே முக்கால் கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுவரும் 210 கிலோ வாட் துணை மின்சார நிலையம் வருகிற ஜூலை மாதத்திற்குள் கட்டி முடிக்கப் பட்டுப்பணியைத் துவக்கும்; அதன் மூலம் இப்பகுதியில் விவசாயத்திற்கு அதிக மின்சாரம் கிடைக்கும்'' என்று கூறினார்.

விழாவில் சிறப்புரையாற்றிய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு வே. இலட்சுமிரதன், இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில், ''மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1989-ஆம் ஆண்டு பொறுப்பேற்றவுடன் இவ் வாரிய அதிகாரிகளை அழைத்து இன்னும் ஒரு ஆண்டுக் காலத்திற்குள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும்குடிநீர் வசதி செய்து தரப்படவேண்டிய பணிகளை உடனடியாகச் செய்தாகவேண்டும் என்றார்.

இதன் அடிப்படையில் 1989-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஒரு ஆய்வினைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டது. இதன் மூலம் தமிழ்நாட்டில் 10,320 கிராமங்களில் பாதுகாக்கப் பட்ட குடிநீர் கிடைக்கவில்லை என்பது தெரியவந்தது. உடனடியாக வாரியம் போர்க்கால அடிப்படையில் ரூ.21 கோடி செலவில் 10,223 கிராமங்களுக்குக் குறைந்த பட்சம் ஒரு குடிநீர் ஆதாரம் என்ற அளவில் கைப்பம்புகளை அமைத்துத் திட்டங்களை நிறைவேற்றியது.

ஏற்கெனவே கரூர் நகருக்கு ரூ.5 கோடி செலவில் காவிரி நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டம் செயலாக்கப்படுவதைச் சுட்டிக்காட்டிய அவர், உலக வங்கித் திட்டத்தின் கீழ் 500 கோடி ரூபாய் செலவில் சங்கரன் கோவில், ஆலங்குளம், புதுக்கோட்டை, மணப்பாறை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் ஆகிய நகரங்களுக்குக் குடிநீர்த் திட்டம் தயாரிக்கப்படடுள்ளது'' என்று கூறினார்.

விழாவிற்கு வந்திருந்தவர்களைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பொறியியல் இயக்குநர் திரு, எம். சுப்பிரமணியம் வரவேற்றார். விழாவில் மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு அன்பில் தர்மலிங்கம், திருஎன்.செல்வராஜ்,சட்டமன்றஉறுப்பினர் திரு கே.வி. இராமசாமி, க. பரமத்தி ஊராட்சி மன்றத்தலைவர் திரு. எஸ்.வி. பழனிச்சாமி, அரவக்குறிச்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு கா. சாமியப்பன், க. பரமத்தி ஒன்றியப் பெருந்தலைவர் திரு அ.பொ. கந்தசாமி, கரூர் ஒன்றியப் பெருந்தலைவர் திரு க. நாச்சிமுத்து, மண்ணச்சநல்லூர் ஒன்றியப் பெருந் தலைவர் திரு. நடராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பள்ளப்பட்டிஷாஜியார் மற்றும் பலர் சிறப்புரையாற்றினார்கள். கரூர் கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு என். அமிர்த கணேசன் நன்றி கூறினார்.

**எஸ். சுதாகர்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**திருச்சி மாவட்டம்.**



## சேலம் மாவட்டத்தில்

# வளர்ச்சிப் பணிகள்

**சேலம்** மாவட்டத்தில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் ரூ.532.500 இலட்சம் செலவில் 3,750 கட்டிக் கொடுக்கப்படும். இவ்வாண்டு பேரூராட்சிப் பகுதி களில் உள்ளவர்களுக்கும் இவ் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு அனுமதித்துள்ளது. சேலம் மாவட் டத்தில் பேரூராட்சிப் பகுதிகளில் மாவட்ட ஒதுக்கீடான 3,750 வீடு களில் 563 வீடுகள் ஒதுக்கப் பட்டுள்ளன.

சிற்றூர்களுக்குப் பேருந்து வசதி செய்திடும் பொருட்டு, கப்பிச் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றவும், மண் சாலைகளைக் கப்பிச் சாலைகளாக மாற்றவும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத் தின் கீழ், 204 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 131 கி.மீ. தார்ச் சாலைகளும், 157 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 157 கி.மீ. கப்பிச் சாலைகளும் அமைப்பதற்கான வேலைகள் துவங்கப்பட்டுள்ளன.

பள்ளிக் கட்டடங்கள் இல்லாத அனைத்து ஆரம்பப் பள்ளிகளுக்கும் இந்த நிதியாண்டிற்காகப் பள்ளிக் கட்டடங்கள் கட்டித் தரப்படும். 42.500 இலட்சம் மதிப்பீட்டில் 34 ஆரம்பப் பள்ளிக் கட்டடங்களுக் கான கட்டட வேலைகள் துவக்கப் பட்டுள்ளன.

150 ஊராட்சி மற்றும் பேரூராட் சிக்கட்டடங்கள் பழுதுபார்ப்பதற்காக ரூ.9 இலட்ச ரூபாய் செலவிடப்படு கிறது. சமூகக் காடு வளர்ப்புப் பணி களுக்காக 47.86 இலட்ச ரூபாயும், இதர ஊராட்சிப் பணிகளுக்காக 209.488 இலட்ச ரூபாயும் செல விடப்படவுள்ளது.

ஜவகர் வேலை வாய்ப்புத் திட் டத்தின் கீழ், சேலம் மாவட்டத்தில் 1291.548 இலட்சம் ரூபாய் (12 கோடியே 91.5 இலட்சம் ரூபாய்) செலவில் 5,297 பணிகள் செய்திட நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப் பட்டு வேலைகள் துவக்கப்பட்டுள்ளன

இவ்வாண்டிற்கான புதிய பணி களில் 1093 பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. 30.11.90 வரை அரசிடமிருந்து 1047.339 இலட்சம் ரூபாய் நிதிவரப்பெற்றுள்ளது. அதில் இதுவரை 810.298 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 43.140 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கத் திட்டமிடப் பட்டு, இதுவரை 32.410 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1990-91-ஆம் ஆண்டிற்குச் சேலம் மாவட்டத்திற்கு ரூ.457.460 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 14,541 பய னாளிகளுக்கு உதவியாக அரசால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. சென்ற ஆண்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு 33 சதவிகிதம் என்பதை மாற்றி, 50 சதவிகிதம் மானியம் வழங்க அரசு உத்தர விட்டுள்ளது.

சுய வேலைவாய்ப்புப் பயிற்சி அளிப்புத் திட்டத்தின் கீழ் 1,225 ஊரக இளைஞர்களுக்குப் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்க அரசால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, பல்வேறு தொழிற்பயிற்சி நிலையங் களில் 1,225 இளைஞர்களுக்கும் தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு வரு கிறது. 31 தொழில்களில் இவ் வாறான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை 186 கிராமப் பகுதி இளைஞர்கள் தொழிற் பயிற்சி முடித்துள்ளனர். பயிற்சி முடித்த இளைஞர்களுக்குச் சுய தொழில் துவங்க வங்கிக் கடனும், அரசு மானியமும் அளிக்க தகுந்த ஏற் பாடுகள் செய்யப்படுகின்றன

சேலம் மாவட்டத்திற்கு மானிய உதவியுடன் 1,200 சாண எரி வாயுக் கலன்கள் அமைக்க அரசால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம், கால்நடைகள் அதிகம் உள்ள மாவட்டமாதலால் 3,500 கலன்கள் அமைக்க மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நவம்பர் மாதம் முடிய 3,808 மனுக்கள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டதில் 2,904 மனுக்கள் அனுமதிக்கப் பட்டுள்ளன. நவம்பர் முடிய 1,194 கலன்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்திற்கு நடப்பு ஆண்டில் கிராமக் குடிநீர்த் திட்டத் திற்காக 6 கோடியே 90 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

வறட்சிநிவாரணப் பணிகளின் கீழ், முதல் பகுதிகளாக 172 ஆழ் குழாய்க் கிணறுகள் திட்டமிடப்பட்டு முடிக் கப்பட்டுள்ளன. இரண்டாவது பகுதிகளிலும் 90 ஆழ் குழாய்க் கிணறுகள் திட்டமிடப்பட்டு, 30 ஆழ் குழாய்க் கிணறுகள் முடிவுற் றுள்ளன.

**நா. தில்லை கோவிந்தன்,**
*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்*
**சேலம் மாவட்டம்.**



# வளரும் வேளாண்மை

**கொண்டைக் கடலை விதை கடினப்படுத்துதல்**

வடகிழக்குப் பருவக்காற்று தீவிர மடைந்து தமிழ்நாடு முழுவதும் நல்ல மழை பெய்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், மானாவாரி நிலங்களில் கொண்டைக்கடலை விதைக்கலாம். விதைக்கப்படும் விதைகள் நன்றாக முளைக்கவும், வீரியமுள்ள செடிகளை உண்டாக்கவும், கொண்டைக்கடலை விதைகளைக் கடினப் படுத்த வேண்டும்.

**கடினப்படுத்தும் முறை**

நன்றாகச் சுத்தம் செய்யப்பட்ட 35 கிலோ (ஒரு எக்டருக்கு) விதைகளை 12 லிட்டர் நீரில் 120 கிராம் பொட்டாசியம் டை ஹைடிரஜன் பாஸ்பேட் உப்பைக் கரைத்த கரைசலில் (1 சதம் கரைசல்) சுமார் மூன்று முதல் நான்கு மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின்பு நீரை வடித்து விட்டு, விதைகளை முதலில் நிழலில் பரவலாகப் பரப்பி உலர்த்தி, பின்பு இளம் வெய்யிலில் உலர்த்த வேண்டும்.

இவ்வாறு கடினப்படுத்தப்பட்ட விதைகள் விதைத்தவுடன் நீரை உறிஞ்சி விரைவில் முளைத்து, நல்ல வீரியச் செடிகளைத் தோற்றுவிக்கும். ஈரப்பதம் சற்று குறைவாக உள்ள இடத்தில் விழுந்த விதைகளும் விரைவாக முளைக்கும். கடினப் படுத்தப்பட்ட விதைகள் உடனடியாகவும், ஒரு வாரம் வைத்திருந்தும் விதைக்கலாம். இக்கடினப்படுத்தும் முறையில் மிகக் கவனமாக இருக்க வேண்டியவை நீரின் அளவும், ஊறவைக்கப்பட வேண்டிய நேரமும் ஆகும்.

ஒரு எக்டருக்குத் தேவையான 35 கிலோ விதைகளைக் கடினப் படுத்த சுமார் ரூ.10 செலவாகும்.

**மல்லிகையில் நூற்புழுப் பராமரிப்பு**

மல்லிகைச் செடிகளை ஐந்து வகையான நூற்புழுக்கள் தாக்குகின்றன. அவையாவன: 1) மொச்சை வடிவ நூற்புழு 2) வேர்முடிச்சு நூற்புழு 3) வேரழுகல் நூற்புழு 4) சுருள் வடிவ நூற்புழு 5) கிரீட நூற்புழு. இந்த நூற்புழுக்களின் எண்ணிக்கை புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் அதிகமாகக் காணப்படுவதாக, தமிழ்நாடு ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆய்வால் தெரிய வந்துள்ளது.

இந்நூற்புழுக்களுக்கு இலக்கான செடிகள் மஞ்சள் நிறமடைந்த இலைகளுடன் வளர்ச்சி குன்றிய தோற்றத்துடன், பூ மகசூல் குறைந்தும் காணப் படும். மல்லிகைப் பூக்களின் மகசூல் 60 விழுக்காடு பாதிக்கப்படுகிறது. இப்பாதிப்பிலிருந்து செடிகளைக் காக்க புரட்டாசி மாத இறுதிக்குள் ஒரு முறை 'போரேட்' 10 சதவிகிதம் குருணையைச் செடிக்கு 5 கிராம் வீதம் மணலுடன் கலந்து செடியைச் சுற்றி மண்ணைப் பறித்து, இட்டு மூடி நீர் பாய்ச்சவும்.

மார்கழி மாத முதல் வாரத்தில் கவாத்து செய்த பின்னர் தொழு உரம் செடிக்கு 5 கூடை வீதம் 25 கிலோ இட வேண்டும். பின்னர் சித்திரை மாதத்தில் மறுபடியும் ஒரு முறை கொடிக்கு 5 கிராம் போரேட் 10 சதவிகிதம் குருணை மருந்து இடவேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் 50 விழுக்காடு அதிகப் பூ மகசூல் பெறலாம்.

**ஆப்பிளில் தோன்றும் வெண் கம்பள அசுவிணி**

தமிழகத்தில் உள்ள மலைப் பிரதேசங்களான கொடைக்கானல், ஊட்டி போன்ற இடங்களில் பயிரிடப் பட்டு வரும் ஆப்பிள் மரங்களில் வெண் கம்பள அசுவிணிகள் முக்கிய சேதத்தை உண்டு பண்ணுகின்றன.

இந்த அசுவிணிகள் கிளைகளின் மீதும், இலைகளின் மீதும், இருந்து கொண்டு, சாற்றை உறிஞ்சி வாழ்கின்றன. அதனால் மரத்தின் வளர்ச்சி குன்றி காணப்படும். இளஞ்செடியாக இருப்பின் பட்டுப் போய்விட வாய்ப்புள்ளது. மற்றும் குளிர் நாட்களில் இவ்வசுவிணி வேர்ப் பாகங்களைத் தாக்கி வேர் முடிச்சுகளைத் தோற்றுவிக்கின்றது. ஆப்பிள் ஒட்டுக் கட்டிய பகுதி எளிதில் தாக்கப்படக் கூடிய இடமாகும். தாக்கப் பட்ட மரங்களில் காய்க்கும் ஆப்பிள்களின் சுவை குன்றிவிடும்.

இந்த அசுவிணி மரங்களில் இருப்பதை, அவற்றை மூடியிருக்கும் வெண்ணிறக் கம்பளங்களைக் கொண்டு அறியலாம். மேலும் இந்த அசுவிணி வெண் கம்பளத்தினுள்ளே இருந்து கொண்டு சாற்றை உறிஞ்சி சேதப்படுத்துவதால் இதனை எளிதில் மருந்து தெளித்துக் கட்டுப்படுத்துவது கடினம்.

இந்த அசுவிணிகளைக் கட்டுப் படுத்த 'எபிலினஸ்' என்னும் ஒட்டுண்ணிகள் இயற்கையிலேயே உள்ளன. இவ்வொட்டுண்ணிகளை நாம் அழிக்காமல் இருந்தாலே இந்த வெண் கம்பள அசுவிணிகளை எளிதில் கட்டுப்படுத்தலாம். இளஞ் செடிகளில் வெண் அசுவிணிகள் அதிகம் தென்பட்டால், பஞ்சு கொண்டு அசுவிணிகளை உருவியும், மெட்டாசிஸ்டாக்ஸ் 0.05 சத மருந்தைத் தெளித்தும் ஆப்பிள் மரங்களைப் பாதுகாக்கலாம்.

**-வேளாண் தகவல் பணிமையம், தமிழ்நாடு ஜி. டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை.**



# ஊரக வளர்ச்சி - ஒரு கண்ணோட்டம்

**ஊ**ராட்சி ஒன்றியப் பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் செம்மையாகவும், மக்கள் பயனுறும் நோக்கத்துடனும் நிறைவேற்றப்படும் வகையில் 1989-ஆம் ஆண்டில் இந்த அரசு பல முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு செயலாற்றத் தொடங்கியது.

1960-70-ஆம் ஆண்டுகளில் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மக்களின் நன்மைகளையே கருத்தில் கொண்டு, வலுவான மக்களாட்சி முறையில் செயல்பட்டதை, மீண்டும் தமிழகத்தில் கொண்டு வருவதற் குரிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இடையில் தேர்தல் நடைபெறாமல், ஊராட்சி களும் ஊராட்சி ஒன்றியங்களும் செயல்பட்டதன் விளைவாக வேளாண்மை, கல்வி, கால்நடை, நல்வாழ்வுத்துறை போன்ற பல துறைகள் ஊராட்சி ஒன்றிய அமைப்புகளிலிருந்து விலகிவிட்டன.

1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திற்கு, பற்பல முக்கியமான திருத்தங்கள், 1989 ஆம் ஆண்டில் கொண்டுவரப் பட்டன. காலம் தாழ்த்தாது தேர்தல் நடத்துதல், பெண்களுக்கு 30 விழுக்காடு இடங்களை ஒதுக்குதல், பதவிக்காலத்தை நிர்ணயித்தல், நல்வாழ்வு, கல்வி போன்ற துறை களில் ஒன்றியங்களுக்குரிய பொறுப் புக்களைத் திரும்ப அளித்தல் போன் றவை அவற்றுள் குறிப்பிடத்தக்க வையாகும்.தவிர,தேர்தல்களை ஒத்தி வைப்பதற்கான அதிகாரத்தை நீக் கியது இவ்வரசு மேற்கொண்ட செயல்களில் மிக முக்கியமான தொன்றாகும்.

மாநில அரசு மற்றும் ஒன்றியங் களுக்கிடையே பங்கீடு செய்து கொள்வது பற்றி பரிந்துரைக்க ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நிதி வல்லுநர் குழுவை அமைத்தலும், அனைத்துத் துறைகளின் பணிகளை யும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் மேற்பார்வையிட வேண்டுமென்று சட்ட அடிப்படையில் வகை செய் ததும் குறிப்பிடத்தக்கவையாகும்.

மக்களுக்கு மிக நெருக்கமாக உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப் புகளாக ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களே அமைகின்றன. எனவே, ஊராட்சி ஒன்றியங்கள் காலாண்டுக்கு ஒரு முறை, அனைத்துத் துறைகளின் பணிகளையும் மேலாய்வு செய்து, ஒருங்கிணைப்பது சட்டரீதி யான பொறுப்பாக்கப்பட்டுள்ளது. தங்களுடைய கடமைகளையும் பொறுப் புக்களையும் தெளிவாக அறிந்து செம்மையாகச் செயல்படுத்துவதற் காக ஊராட்சித் தலைவர்களுக்குப் பயிற்சியும், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்குக் கருத்தரங்கு களும் நடைபெற்றுள்ளன.

**டாக்டர் எஸ். நாராயண், இ.ஆ.ப.,**
**அரசுச் செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை.**

கிராமப்பகுதிகளில் அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து தரப் படவேண்டுமென்பதற்காக நடப் பாண்டில் பெருந்திட்டமொன்று தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் முக்கியப் பணி களாவன:

1. 1990-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள பேருந்து செல்லும் சாலைகள் அனைத்தும் 1993-ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் தார்ச் சாலைகளாக மாற்றப்படும்.

2. 500 முதல் 1000 வரை மக்கள் தொகை கொண்ட அனைத்துப் பகுதிகளிலும் 1990-95-ஆம் ஆண் டிற்குள் கப்பிச் சாலைகள் அமைக் கப்படும்.

3. இவ்வாண்டிலேயே, பள்ளிக் கட்டடம் இல்லாத அனைத்து ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி களுக்கும் கட்டடம் கட்டி முடிக்கப் படும். தவிர ஒவ்வோராண்டும் தொடங்கப்படவிருக்கும் புதிய பள்ளிகளுக்கு ஆண்டுதோறும் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

4. பழுதடைந்துள்ள தொடக்கப் பள்ளிகள் அனைத்தும் உடனே செப்பனிடப்பட்டுச் சீராக்கப்படும்.

5. 3,500-க்கும் மேற்பட்ட சுகா தாரத் துணை நிலையங்களுக்குக் கட்டடங்கள் தேவைப்படுவதால், இப்பணி உடனே மேற்கொள்ளப் பட்டு 8-ஆம் திட்ட காலத்திற்குள் முடிக்கப்படும்.

6. ஓரளவு குடிநீர்த் தேவை நிறைவேற்றப்பட்டுள்ள பகுதிகளில் 8- ஆம் திட்ட காலத்திற்குள் போது மான குடிநீர் வழங்கப்படும்.

7. 100 ஏக்கர்கள் பாசன வசதி யுள்ள 6,000 சிறிய பாசனக் குளங்கள் மூன்றாண்டுகளில் நவீன மாக்கப்பட்டு மேம்படுத்தப்படும்.

8. அனைத்துக் கிராமங்களிலும் மூன்றாண்டுகளில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்கப்படும்.

மேற்கண்ட பெருந்திட்டத்தை நிறைவேற்றி முடிக்க ரூ.250 கோடி செலவாகுமென்று மதிப்பிடப்பட் டுள்ளது. இத்திட்டம் ஐந்தாண்டு களில் முடிவுறும். இத்திட்டத்திற் காகும் செலவில் 50 விழுக்காட்டை



மாநில அரசு ஏற்றுக் கொண்டு, எஞ்சிய பகுதியை உபரி நிதியுள்ள ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங் களும் ஏற்றுக் கொள்ளும்.

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச் சித் திட்டம் உள்ளிட்ட அனைத்துத் திட்டங்களையும் உருவாக்கி, நிதி வசதிகளை ஒதுக்கி, நிறைவேற்றும் பொறுப்பு அனைத்தும் ஊராட்சி ஒன்றியங்களிடமே ஒப்படைக்கப் பட்டுள்ளன. சிறப்பாகக் குறிப்பிட வேண்டுமென்றால், 1990-91-ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் சுமார் ரூ.325 கோடி மதிப்புள்ள திட்டங்களை உருவாக் கிச் செயல்படுத்தும் என்பது ஒரு மகிழ்ச்சியான செய்தியாகும்.

சமுதாய வளர்ச்சிப் பணிகள் அனைத்தும், ஊராட்சி ஒன்றியங்கள் வாயிலாகவே செயல்படுத்தப்பட வேண்டுமென்று முன்பிருந்த நிலை இப்போது மீண்டும் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

மனிதவள மேம்பாட்டின் மீதும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஊர்நல அலுவலர்கள், விரிவாக்க அலுவலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட எல்லா நிலையிலும் உள்ள அலுவலர் களுக்கும் ஊக்கத்தையும் ஆக்கத்தை யும் அளிக்கவும் தக்க வழிமுறைகள் காணப்பட்டுள்ளன.

பழைய முறையில் உள்ள பயிற் சித் திட்டங்களை மாற்றியமைத்து அவற்றிற்குப் புதிய வடிவம் தரப் பட்டுள்ளது.

ஊர் நல அலுவலர்களுக்காக ஒரு புதிய பயிற்சி நூலைத் தயாரித்து அதன் அடிப்படையில் இவ்வாண்டு செப்டம்பரில் தொடங்கி மூன்று மாதப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அடுத்த ஈராண்டுகளில், இத்துறை யிலுள்ள 7,000-க்கும் மேற்பட்ட எல்லா அமைச்சு மற்றும் விரிவாக் கப் பணியாளர்களுக்குப் பயிற்சி யளிக்கப்பட்டு, புதிய பொறுப்பு களுக்கு அவர்கள் தயார் செய்யப் படுவார்கள்.

ஊராட்சிகளை நிர்வகித்து ஒருங் கிணைக்கும் பணியை ஊராட்சி விரிவாக்க அலுவலர் செய்கிறார். இவருடைய பொறுப்புக்கள் பிற அலுவலர்களிடமிருந்து மாறுபட்டி ருப்பதால், இவருக்கென்றே தனி யாக ஒரு பயிற்சி நூல் தொகுக்கப் பட்டுள்ளது. 700 ஊராட்சி விரி வாக்க அலுவலர்களுக்குத் தேவை யான பயிற்சி அளிக்கப்பட்டு விட்டது. இதர வகை அலுவலர்களுக்கும்

## செங்கை-அண்ணா மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

செங்கை-அண்ணா மாவட்டத்தில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், 1,580 ஏழைப் பெண்களுக்குத் தலா ரூ.5,000 வீதம் மொத்தம் ரூ.79 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித்திட்டத்தின் கீழ் 16 ஆயிரம் தாய்மார்களுக்குத் தலா ரூ.200 வீதம் வழங்கப்பட்டுள்ளது. ஏழை ஆதரவற்ற விதவை மகளிர்களின் மகள் திருமண உதவித் திட்டத்தின்கீழ் 50 நபர்களுக்குத் தலா ரூ.2 ஆயிரம் வீதம் இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ரூ.3 கோடியே 52 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.2 கோடியே 16 இலட்சம் இதுவரை செலவு செய்யப்பட்டுள்ளது. இதனால் 8,060 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். ரூ.10 ஆயிரம் வரையிலான கடன் தள்ளுபடித்திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்தில் ரூ.32 கோடி அளவுக்குக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 5,100 தொகுப்பு வீடுகள், 39 பள்ளிக் கட்டடங்கள், 200 ஊராட்சி மன்றக் கட்டடங்கள் கட்டவும், சாலைகள் மற்றும் இதரப் பணிகளுக்காகவும் ரூ.2 கோடியே 16 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில், 35 ஆயிரம் பேர்களுக்குப் பட்டா வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டதில், 40,030 நபர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறை மூலம் சிறப்பு உணவுத் தானிய உற்பத்தித் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு இலவசக் கருவிகள் மானியத்துடன் கூடிய இடுபொருட்கள் ரூ.21 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு, ஒரு பவர் டில்லர் வீதம் மாவட்டத்தில் 27 பவர் டில்லர்கள் மானிய உதவியுடன் ரூ.2 இலட்சத்து 27 ஆயிரம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. மானிய உதவியுடன் 54 கதிர் அடிக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. சமீபத்திய மழையால் 557 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு உடனடி உதவியாக ரூ.83 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் 20 ஆயிரத்து 422 போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுப் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 60 புதிய நியாய விலைக்கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

**-ஜே. சந்திரன்,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**செங்கை-அண்ணா மாவட்டம்**

பயிற்சி நூல்கள் தயாரிக்கப்படுகின்றன.

மறைமலை நகரில் உருவாகி வரும் புதிய இடத்தில் மாநில ஊரகப் பயிற்சி நிறுவனம் விரைவில் மாற்றப்படவிருக்கிறது. தமிழ்நாட்டிலேயே ஒரு சிறந்த பயிற்சி நிலையமாக இதனை உருவாக்கத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதே போன்று பழைய ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களும் நவீனப்படுத்தப்படுகின்றன. இன்னும் ஓராண்டில் இப்பணி முடிவடையும்.

ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் பொறுப்பிலுள்ள சொத்துக்களைப் பேணிக் காப்பதில் தனிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பள்ளிக் கட்டடங்கள், நீர் ஆதாரங்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் போன்ற எல்லா சொத்துக்களையும் கணக்கிட்டுப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இவற்றினைப் பேணிப் பாதுகாக்க சிறப்பு நிதியொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஊராட்சிகள் பெருமையடையும் வண்ணம் செயல்படவேண்டிய அவசியத்தை உணர்ந்து, அவற்றிற்காக அலுவலகக் கட்டடங்கள் கட்டத் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில், நாடு விடுதலை பெற்ற இந்த 40 ஆண்டுக் காலத்தில் 6,000 ஊராட்சிகளுக்கு மட்டுமே கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. அடுத்த மூன்றாண்டிற்குள்ளாக 6,000 கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும். அதன் பின்னர், அனைத்து ஊராட்சிகளும் சொந்தக் கட்டடங்களிலேயே செயல்படும்.

மேற்கண்ட பணிகள் எல்லாம் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திடடத்திற்கு இணையாகவே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆதி திராவிடர்களுக்காக ஆண்டுதோறும் 45,000 வீடுகள், சுமார் 1,000 பள்ளிக் கட்டடங்கள் தவிர, சாலைகள், கட்டடங்கள், சிறிய நீர்ப்பாசன ஏரிகள் போன்ற பொதுப்பணிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமாகப் பயன்பெறுவோர்களை உன்னிப்பாகக் கவனித்து வருவதுடன், அவர்களுடைய சொத்துக்கள் 100 விழுக்காடு அளவிற்கு அவ்வப்போது கண்காணிக்கப்பட்டு வருகின்றன. கிராமப்புற மகளிர் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டத்தில் தயாரிக்கப்படும் பொருள்களை மாவட்டத்திலுள்ள அங்காடிகளுடன் இணைத்து விற்பனை செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது. மதிய உணவுத் திட்டத்திற்குத் தேவையானவற்றை இப்பிரிவுகள் நிறைவு செய்கின்றன. இவை பெருமளவில் பொருள்களை உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டதால், நகர்ப்புறங்களில் விற்பனை செய்வதற்காகப் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்சொன்னவாறு, கடந்த ஈராண்டுகளில் ஊரக வளர்ச்சிக்காக, பெருமளவில் சிறப்புத் திட்டங்கள் பலவற்றைத் தீட்டிச் செம்மையாக அவை செயல்படுத்தப்பட்டு வருவதை உணரமுடியும்.

1992-93 ஆம் ஆண்டு முதல் வட்டார அளவில் திட்டங்களைத் தொடங்க இயலுமென்று நம்பப்படுகிறது. அதன் மூலம் மாநில அளவிலான திட்டங்களும் வட்டாரங்கள் வாயிலாகச் சிறப்பாக நிறைவேற்றப் படும்.

## வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில்

# மானாவாரிச் சாகுபடியில் ஒரு மறுமலர்ச்சித் திட்டம்!

**வடஆர்க்காடு**-அம்பேத்கர் மாவட்டத்தின், நிகரச் சாகுபடிப் பரப்பளவான 2.1 இலட்சம் எக்டரில் மானாவாரிச் சாகுபடி 1,267 இலட்சம் எக்டர் ஆகும். இது நிகரச் சாகுபடிப் பரப்பளவில் 60 சதவிகிதம் ஆகும்.

மானாவாரியில் பருவ மழையை நம்பியே சாகுபடி செய்யப்பட்டு வருவதால், நிச்சயமற்ற மகசூலும், குறைந்த வருமானமும் கிடைத்து வருகின்றன. இதற்கு முக்கிய காரணம், நிலத்தில் போதுமான ஈரமின்மையும், தேவையான அளவு மழையின்மையும் ஆகும்.

மானாவாரி நிலங்களில் மழை பெய்தாலும் ஈரம் காக்கப்படுவதில்லை; பயிர் வளர்ச்சிக் காலங்களிலும் மழை பெய்வதில்லை. மேலும், நிச்சயமற்ற வருமானம் இருப்பதால் சிபாரிசு செய்யப்படும் நல்ல தொழில் நுட்பங்கள் முழுமையாகக் கடைப்பிடிக்கப்படுவதில்லை. இவற்றைக் கருத்தில் கொண்டுதான், ஒருங்கிணைந்த மனாவாரி வளர்ச்சித் திட்டம் (100 எக்டர் செயல் விளக்கத் தளைகள்) இம்மாவட்டத்தில் 11 இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென அரசு ஒவ்வொரு செயல்விளக்கத் தளைக்கும் ரூ.50,000 வீதம், மொத்தம் ரூ.5.5 இலட்சம் மானியமாக ஒதுக்கீடு செய்துள்ளது. உற்பத்தியில் முக்கியப் பங்கு வகிக்கும் இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

**திட்ட நோக்கங்களாவன:**

1. நவீன தொழில் நுட்பங்களைக் கடைப்பிடித்து மானாவாரி உற்பத்தியை அதிகரித்து அதன் மூலம் நிகர வருவாயை அதிகரித்தல்.

2. மானாவாரி நிலங்களில் ஒரு போகச் சாகுபடி செய்யும் வழக்கத்திலிருந்து, வடகிழக்குப் பருவ மழையைப் பயன்படுத்திக் கூடுதலாக இரண்டாம் போகம் சாகுபடிக்கு வகை செய்தல்.

3. பயிரிடப்படும் முக்கியப் பயிர் மற்றும் ஊடு பயிரில், தற்போது கிடைக்கும் உற்பத்தித் திறனை இரசாயன உரம் இட்டு அதிகமாக்குதல்.

**திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்கள்:**

1. கணியம்பாடி 2. ஒக்கனாபுரம் 3. சேனூர் 4. பிரம்மபுரம் 5. கூட நகரம் 6. டி.டி.மோட்டூர்



## நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவுச் சாதனைகள்

**நீ**லகிரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் 1.4.90 முதல் 31.10.90 வரை குறுகிய காலப் பயிர்க் கடனாக 2,827 விவசாயிகளுக்கு ரூ.104.71 இலட்சமும், மத்தியக் காலக் கடன்களாக 918 சிறு விவசாயிகளுக்கு ரூ.61.97 இலட்சமும் கடன் வழங்கப்பட்டுள்ளது.

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் மற்றும் நீலகிரி காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் இரண்டும் சேர்ந்து ரூ.442.25 இலட்சம் மதிப்புள்ள விவசாய விளைபொருள் 1.4.90 முதல் 31.10.90 வரை விற்பனை செய்துள்ளன.

**உர விற்பனை**

1.4.90 முதல் 31.10.90 வரை ரூ.189.86 இலட்சம் மதிப்பிற்கு நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், இரசாயன உரம் விற்பனை செய்துள்ளது.

1990-91-ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில், புதிதாக 250 ஏக்கரில் தேயிலைத் தோட்டம் அமைக்க ரூ.30 இலட்சம் கடன் வழங்க நீலகிரி மத்தியக் கூட்டுறவு வங்கி திட்டமிட்டுள்ளது.

**நகைக்கடன்**

நீலகிரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தொடக்கக் கூட்டுறவு வங்கிகள், மத்திய வங்கிக் கிளைகள், நகர வங்கிகள் மற்றும் நிலவள வங்கிகள் மூலம் ரூ.979.99 இலட்சம் 1.4.90 முதல் 31.10.90 வரை நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விவசாயம் மற்றும் ஊரகக்கடன் நிவாரணத் திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் சுமார் 32,000 விவசாயிகள் ரூ.11 கோடி வரை கடன் பெற உள்ளனர்.

இம்மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் கீழ், தற்போது 205 நியாய விலைக்கடைகள் சுமார் 1.27 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்கின்றன. கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலமாக 1.4.90 முதல் 31.10.90 முடிய கட்டுப்பாட்டுப் பொருட்கள் ரூ. 663 இலட்சமும், கட்டுப்பாடற்ற பொருட்கள்ரூ.720 இலட்சமும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

**மூ.நா.கிருஷ்ணசாமி,**
**உதவிமக்கள் தொடர்பு அலுவலர்**
**நீலகிரி மாவட்டம்.**

---

7. அக்ரகாரம் 8. மேல்நேத்தம்பாக்கம் 9. காட்ரம்பாக்கம் 10. கோடம் பாக்கம் 11. ஆலப்பாக்கம்

**பங்கு கொள்ளும் விவசாயிகள் எண்ணிக்கை:**

சிறு விவசாயிகள்-586; குறு விவசாயிகள்-907; இதர விவ சாயிகள்-168; ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்-221. ஆக மொத்தம் 1,882 நபர்கள் பங்கு கொண்டுள்ளனர்.

**ஒரு மறுமலர்ச்சித் திட்டம்**

பருவ மழைக்கு முன்பாகவே ஒவ்வொரு தளையிலும் 100 விவ சாயிகள் வீதம் மொத்தம் 1,100 விவசாயிகளுக்கு மானாவாரித் தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சி யளிக்கப்பட்டது. 100 எக்டர் திட்டப் பகுதிகளில் முதல் போகத்தில் டிராக்டர் மூலம் கோடை உழவு, ஊட்டமேற்றிய தொழு உரம், ஆழச் சால் அகலப்பாத்தி, விதை நேர்த்தி, நுண்ணூட்டச்சத்து ஆகிய தொழில் நுட்பங்களைப் பரிந்துரை செய்து மணிலா விதைக்கப்பட்டது. ஊடு பயிராகப் பயறு வகைகளையும், வரப்பு ஓரங்களில் தீவனப் பயிர் களையும் பயிரிடப் பரிந்துரை செய்யப் பட்டு விதைப்பு மேற்கொள்ளப் பட்டது. பருவ மழையும் காலத்தே பெய்து இத்திட்டம் சிறப்பாகச் செயல்பட உதவி புரிந்தது. மேலும், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு போன்ற நவீன தொழில் நுட்பங்கள் பரிந்துரைக்கப்பட்டதால், மானா வாரி மணிலா மகசூல் ஏக்கருக்கு 5 முதல் 7 மூட்டை அதிகரித்தது.

புன்செய் நிலங்களில் மரங்கள் நடுதலும் இத்திட்டத்தின் கீழ் செயல் படுத்தப்படுகிறது. இது மட்டுமல் லாது, தீவனப்பயிர் மற்றும் ஊடு பயிர் சாகுபடி செய்ததால் கூடுதல் வருவாயும் கிடைத்துள்ளது. ஊட்ட மேற்றிய தொழு உரம் இடுவதால் செடியில் காய்ப்பிடிப்பு அதிகமாகி உள்ளது.

இறையங்காடு பகுதியில் ஊட்ட மேற்றிய தொழு உரம் இட்டதால், ஒரு செடியின் சராசரி காய் மகசூல் 20 காய்கள் இருந்ததாகவும், இடாத செடியில் சராசரியாக 14 காய்கள் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. காட்ராம்பாக்கம் பகுதியில் ஊட்ட மேற்றிய தொழு உரம் இட்ட ஒரு செடியில் சராசரி காய் மகசூல் 24-25 இருந்ததாகவும், இடாத செடியில் சராசரியாக 16-18 காய்கள் இருந்ததாகவும் தெரிவிக்கப் பட்டது. தற்போது இரண்டாம் போக சாகுபடி பரிந்துரை செய்யப் பட்டு இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டமானது நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படுவதோடு, மேலும் இரு ஆண்டுகளுக்கும் செயல்படுத் திடத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டம் மானாவாரிச் சாகுபடியில் ஓர் மறுமலர்ச்சித் திட்டமாகும்.

**அ.தியாகராஜன்**
**வேளாண்மை இணை இயக்குநர்**
**வேலூர்**

## தென்னார்க்காடு மாவட்டத்தில்

# பால் வளம்

டாக்டர்
கு. அம்பலவாணன்
நிர்வாக இயக்குநர்
தென் ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், விழுப்புரம்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் பால்வள மேம்பாட்டுத் திட்டம், தீவிர பால் பெருக்குத் திட்டம் 1-இன் கீழ் 1.8.1975-இல் 'அமுல்' மாதிரி கிராமப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயல்பட ஆரம்பித்தது.

சின்ன சேலம் மற்றும் விழுப்புரம் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட 50 சங்கங்கள் அன்றைய காலத்தில் நாளொன்றுக்கு 2,500 லிட்டர் பாலை மட்டுமே உற்பத்தி செய்தது. தீவிர பால் பெருக்குத் திட்டம் 2-இன் கீழ் 1.8.83-இல் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் செயல்பட ஆரம்பித்தது. 200 கிராமச் சங்கங்கள் மூலம் 22,000 லிட்டர் பாலைக் கொள்முதல் செய்து, 25,000 ஏழை எளிய மக்களுக்கு இந்தத் தொழில் மூலமாக, நிரந்தர வருமானத்தை ஏற்படுத்தித் தந்தது. 1983-84-ஆம் ஆண்டில், சராசரி பால் உற்பத்தி நாளொன்றுக்கு 38,000 லிட்டர் ஆகும். அதில் 7,000 லிட்டர் உள்ளூர் நகரங்களில் விற்பனை செய்தது போக, மிகுதி மாநில பால்வள இணையத்திற்கு அனுப்பப்பட்டது.

10,985 கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இந்தப் பெரிய மாவட்டத்தில் உள்ள 2,149 கிராமங்களில், தற்போது 530-க்கும் மேற்பட்ட கிராமங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. தற்போதைய சராசரி பால் உற்பத்தி 90,000 லிட்டருக்கு மேல், அதிலும் கடந்த 16.6.90-இல் ஒரு இலட்சம் லிட்டர் பாலுக்கு மேல் உற்பத்தி செய்து மிகப் பெரிய சாதனையைச் செய்துள்ளது.

மொத்த மக்கள் தொகையான 47.39 இலட்சத்தில் 39.57 இலட்சம் மக்கள் கிராமங்களில் தான் உள்ளார்கள். அவர்களில் தற்போது 1,57,177 பேர் இந்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்கள். இவற்றில் 37,987 பெண் உறுப்பினர்களும், 46,948 ஆதிதிராவிடர்களும் மற்றும் 419 ஆதிதிராவிடப் பழங்குடியினரும் ஆவார்கள். கால்நடைச் செல்வங்களில் முக்கியமான ஆவினங்களின் எண்ணிக்கை இம்மாவட்டத்தில் 4.91 இலட்சங்களாகும். அவற்றில் 82 விழுக்காடு 3.94 இலட்சம் பசுவினங்கள், மிகுதி எருமையினங்கள். 94,432 ஆ இனங்கள் 55,000, பசுவினம் மற்றும் 40,000 எருமையினங்கள் தற்போது கூட்டுறவு அமைப்பில் உள்ளன.

> **10,895 கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள 2,149 கிராமங்களில், தற்போது 530-க்கும் மேற்பட்ட கிராமங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. தற்போதைய சராசரி பால் உற்பத்தி 90,000 லிட்டருக்கு மேல். அதிலும் கடந்த 16.6.90-இல், ஒரு இலட்சம் லிட்டருக்கு மேல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.**

1983-இல் பதிவு செய்யப்பட்ட இந்த மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், உறுப்பினர்களிடமிருந்து பாலை மட்டும் பெற்று, அதற்கான தொகையை வாராவாரம் வழங்குவதோடல்லாமல், பால் உற்பத்திக்குத் தேவையான, கால் நடைச் சிகிச்சைப் பணிக்கென விழுப்புரம், திண்டிவனம், செஞ்சி, சேத்தியாதோப்பு, சின்னசேலம் பகுதிகளில் சிறப்பு நடமாடும் கால் நடை மருந்தகங்களையும் இயக்கி வருகிறது.

செயற்கை முறை இனவிருத்திப் பணிக்கென 214 சங்கங்களில் உறைவிந்துத் திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்படுகிறது. ஆண்டொன்றிற்கு 75,000 செயற்கை முறைக் கருவூட்டல் செய்யப்பட்டு, நல்ல கலப்பினக் க்ன்றுகளைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

உற்பத்தியாகும் பாலைப் பதப் படுத்துவதற்கு 3 குளிரூட்டும் நிலையங்கள் விழுப்புரம், சேத்தியாதோப்பு, சின்னசேலம் பகுதியில் இயங்கி வருகின்றன. விழுப்புரம் பகுதியில் உள்ள 260 சங்கங்கள் மூலமாகத் தற்போது நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால், 13 பால் வழித்தடங்கள் மூலம் பெறப்பட்டுப்பதப்படுத்தப்படுகிறது. கடலூர், விழுப்புரம், திண்டிவனம் நகர நுகர்வோர்களின் தேவை போக, மிகுதிப் பால் சென்னைக்கு அனுப்பப் படுகிறது.

சின்னசேலம் பகுதியில் உள்ள 83 சங்கங்கள் 20,000 லிட்டர் பாலை 6 பால்வழித் தடங்கள் மூலம் பெறுகின்றனசேத்தியாதோப்புப் பகுதி தன்னகத்தே உள்ள 147 சங்கங்களிலிருந்து 22,000 லிட்டர் பாலை, 7 பால்வழித் தடங்கள் மூலம் பெற்று, நெய்வேலி, சிதம்பரம், விருத்தாசலம் நகர நுகர்வோர்கள் தேவையைப் பூர்த்தி செய்கிறது.

உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்கு இணையத்தால் உற்பத்தி



## கைத்திறமைக்கு - ஒரு கண்காட்சி

விளக்குகள் இல்லாத வீடும் இல்லை, கோயிலும் இல்லை. மங்கள கரமான நாட்களில் விளக்குகளுக் குப் பெரும் பங்குண்டு. தீபாவளி, கார்த்திகைப் பண்டிகைகளின்போது தீபத்துக்கு முக்கியத்துவம் தருகிறோம்.

விளக்குகளில்தான் எத்தனை வகை! குத்துவிளக்கு, காமாட்சி யம்மன் விளக்கு, மகர விளக்கு, தோரண விளக்கு, தூங்கா மணி விளக்கு - இப்படி எத்தனையோ விதமான விளக்குகளைச் சிறிய, பெரிய அளவிலே பார்க்கின்ற வாய்ப்பு அண்மையில் கிட்டியது.

36-வது அகில இந்தியக் கைத் திறன் வாரவிழாவை ஒட்டி, 8.12.90 அன்று சென்னை மெமோரியல் மண்டபத்தில் கண்காட்சி ஒன்று நடந்தது. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் கிளை நிறுவனமான 'பூம்புகார்' விற்பனை நிலையத்தின் சார்பில் நடைபெற்ற இக்காட்சியில், 25 காட்சி அரங்குகள் இடம் பெற்றிருந் தன. புதுடெல்லி, உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம், ராஜஸ்தான், ஆந்திரம் ஆகிய மாநிலங்கள் காட்சி யில் பங்கேற்றன.

பூம்புகார் விற்பனை நிலைய மேலாளர் திரு. பி.ஏ.சண்முக சுந்தரம் அவர்கள், விளக்குகளைப் பற்றிக் கூறுகையில்,

''விளக்குகள் நாச்சியார்கோவில், வாகைக்குளம், மதுரை ஆகிய இடங் களில் உருவாக்கப்படுகின்றன. சுமார் 8 அடி வரை விளக்குகள் தயாரிக்கலாம். பொதுவாக, 4½ அடி உயரமுள்ள விளக்குகள் விற் பனைக்குக் கிடைக்கும். இதன் விலை ரூ.4,350.''

''சித்திர வேலைப்பாடுகள் உள்ள விளக்குகளும் உண்டு. பொது வாக விளக்குகளுக்கு நல்ல வர வேற்பு உள்ளது. நம் நாட்டில் மட்டு மின்றி, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலான நாடுகளுக்கும் விளக்கு களை ஏற்றுமதி செய்கிறோம்'' என்றார்.

மரப்பேழையில் வைக்கப்பட்டுள்ள வெள்ளியிலான வள்ளுவர் கோட்டம், மற்றும் வள்ளுவர் கோட்டம் பொறிக் கப்பட்ட தஞ்சாவூர்த் தட்டு அனை வரையும் கவர்ந்தன.

---

செய்யப்படும் 'ஆவின்' கால்நடைத் தீவனம் லாப நோக்கின்றி விநி யோகம் செய்யப்படுகிறது. பசும்புல் வளர்ப்புத் திட்டங்கள் மூலமாக உற்பத்தியாளர்கள் பசும்புல் வளர்க்க மானியங்கள் அளிக்கப்படுகின்றன. கால்நடைகளில் காணப்படும் தொத்து நோயான வாய்கோமாரி மற்றும் கால்கோமாரி ஆகியவற்றைத் தடுக்க தடுப்பூசிப் பணி செய்யப்படுகிறது. சிறப்புக் கலப்பினக் கிடாரிக் கன்று வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இது வரை, 8,000-க்கு மேற்பட்ட கலப் பினக் கிடாரிகள் நல்ல முறையில் வளர்க்கப்பட்டு பால்தரும் பசுக் களாக வளர்ந்துள்ளன.

உறுப்பினர்களின் வசதிக்காக வும், சங்கச் செயலாளர்களுக்குப் பயிற்சியளிக்கவும் இந்த ஒன்றியம், ஒரு பயிற்சிப் பள்ளியை நடத்தி வருகிறது. இந்தப் பள்ளியில் செயற்கை முறை இனவிருத்திப் பணிப்பயிற்சி, கால்நடை மருத்துவ முதலுதவிப் பயிற்சி, சங்க நடை முறைகள் மற்றும் அவற்றின் கணக்கு களைப் பராமரிக்கப்பயிற்சி மற்றும் கன்று வளர்ப்போருக்குச் சிறப்புப் பயிற்சி ஆண்டு முழுமைக்கும் அளிக்கப்படுகின்றன.

### ஒன்றியத்தின் எதிர்காலத் திட்டங்கள்

தீவிர பால் பெருக்குத் திட்டம் 3-இன் கீழ், இம்மாவட்டத்தில் ரூ.353 இலட்சம் முதலீட்டில் பெரு மளவில் பால் கொள்முதல் செய்ய வும், அதன் மூலம் நிறைய கிராமப் புற உற்பத்தியாளர், இந்தப் பால் பண்ணைத் திட்டத்தின் மூலம் நிரந்தர வருமானம் பெறவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது. வரும் ஐந்தாண்டுகளில் 1989-90 ஆண்டு முதல் 1993-94 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்படும் திட்டங்கள் வருமாறு:

* 630 சங்கங்களைத் தோற்று வித்து 851 கிராமங்களில் பால் உற் பத்தியைப் பெருக்குதல்.

* 2,22,220 உறுப்பினர்களை இந்தக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வருதல்.

* சராசரி பால் உற்பத்தியை 1.24 இலட்சம் லிட்டர் அளவுக்கு உயர்த்துதல்.

உள்ளூர் நகர விற்பனைக் கென நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால் ஒதுக்கப்படும்.

* விழுப்புரத்தில் ரூ. 353.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் 1 இலட்சம் லிட்டர் பால் பதனிடும் தொழிற் சாலை நிறுவுதல்.

* திண்டிவனம் செஞ்சிப் பகுதி யில் ரூ.68.00 இலட்சங்கள் மதிப் பீட்டில் 30,000 லிட்டர் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்.

* 7 நடமாடும் கால்நடை மருந்த கங்களையும், 7 அவசரக்காலச் சிகிச்சை வசதியையும் தோற்று வித்தல்-(மதிப்பீடு ரூ 79 இலட்சங்கள்).

* 350 சங்கங்களில் செயற்கை முறை இனவிருத்திப் பணிக்கென ரூ 8.00 இலட்சங்கள் முதலீட்டில் உறைவிந்துத் திட்டத்தைச் செயல் படுத்துதல்.

* விரிவாக்கப் பணிக்கெனவும், பயிற்சி நிலையச் செலவுக்காகவும் ரூ 8.81 இலட்சங்கள் செலவிடப் படுதல்.

விவசாயத் தொழிலையே முதன் மையாக நம்பியுள்ள இம்மாவட்டக் கிராமப்புற மக்களுக்கு, இந்தப் பால் பண்ணைத் தொழில் மேற்சொன்ன பால் பெருக்கத் திட்டங்களால் நிச் சயம் நல்ல நிரந்தர வருமானத்தைக் கொடுத்து கிராமப் பொருளா தாரத்தை மேம்படுத்தும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில்:

# சிறுசேமிப்பில் சாதனை!

**“ கடந்த 1989-90-ஆம் நிதியாண்டில், திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் ரூ.15.01 கோடி மொத்தமாகவும், ரூ.7.61 கோடி நிகரமாகவும் வசூல் செய்யப்பட்டது. மாநில அளவில் சிறுசேமிப்பு வசூலில் அரசு நிர்ணயித்த குறியீட்டைத் தாண்டிச் சாதனை புரிந்துள்ளது. ”**

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம், சிறுசேமிப்பில் சாதனை புரிந்ததற்காக தமிழக அரசு ரூ.60 இலட்சம் வழங்கியுள்ளது.

கடந்த 1989-90-ஆம் நிதியாண்டில் திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் ரூ.15.01 கோடி மொத்தமாகவும் ரூ.7.61 கோடி நிகரமாகவும் வசூல் செய்யப்பட்டது. மாநில அளவில் சிறுசேமிப்பு வசூலில் அரசு நிர்ணயித்த குறியீட்டைத் தாண்டிச் சாதனை புரிந்ததற்கு, மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் இம் மாவட்டத்திற்குக் கேடயமும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டன. நமது மாவட்டத்தில் உள்ள 41 மாவட்ட அலுவலர்கள் மூலம் சிறுசேமிப்பு வசூல் செய்யப்பட்டது.

இம்மாவட்டத்தில் 78 நிலை முகவர்கள் மூலம் ரூ.322 இலட்சமும் 172 மகளிர் முகவர்கள் மூலம் ரூ.41 இலட்சமும் வசூல் செய்யப்பட்டது.

256 நிறுவனங்கள் மூலம் சம்பளப் பட்டியல் திட்டம் செயல்படுத்தப்பட்டு ரூ.78 இலட்சம் வசூல் செய்யப்பட்டது.

அருள்மிகு பழனியாண்டவர் திருகோயிலுள்ள உபரி நிதியிலிருந்து ரூ.125 இலட்சம் சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்யப்பட்டது. மாவட்டத்திலுள்ள அனைத்து நிறுவனங்களும் சிறுசேமிப்புத் திட்டத்தில் பங்கு கொண்டன.

திண்டுக்கல்லில் உள்ள எம்.எஸ்.பி. சோலைநாடார் நினைவு மேல் நிலைப்பள்ளி மாணவர்கள் அனைவரும் (2913 மாணவர்கள்) சஞ்சயிகா திட்டத்தில் சேர்ந்து 1989-90-ஆம் ஆண்டு ரூ.2.40 இலட்சம் சேமித்து, மாவட்டத்திலேயே முதல் இடத்தைப் பெறுகின்றனர். இதைப் பாராட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சக்தி காந்த தாஸ் இ.ஆ.ப. அவர்கள் அப்பள்ளிக்குக்கேடயம், பாராட்டுப் பத்திரம், அரசு வழங்கிய ஊக்கத் தொகை ரூ.500 ஆகியவற்றை வழங்கினார்.

**மாணவர் சேமிப்பு வங்கி சஞ்சாயிகா திட்டம்**

மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தைத் தூண்டுவதற்காக மாணவர் சேமிப்பு வங்கி சஞ்சாயிகா திட்டம் தேசிய சேமிப்பு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் 23.11.90 முடிய 123 பள்ளிகள் சஞ்சாயிகா திட்டத்தில் பங்கேற்றுள்ளன. 99,721 மாணவர்கள் இச்சேமிப்பில் ஈடு பட்டுள்ளனர்.

கடந்த 31.10.1990 முடிய சஞ்சாயிகா வங்கியின் மூலம் ரூ.9,63,297 அஞ்சலகச் சேமிப்பு வங்கிக் கணக்கிலும், காலவைப்புத் திட்டத்திலும் வசூல் செய்யப் பட்டுள்ளது.

திண்டுக்கல் தூய மரியன்னை பள்ளி, அண்ணாமலையார் மேல் நிலைப் பள்ளி, பட்டி வீரன்பட்டி என்.எஸ்.வி.வி. ஆண்கள் மற்றும் மகளிர் மேல்நிலைப் பள்ளி இத் திட்டத்தில் பங்கேற்று 75 சதவிகிதம் மாணவ, மாணவிகளைச் சேர்த்து ரூ.2,77,131 முதலீடு செய்துள்ளனர். எம்.எஸ்.பி. சோலைநாடார் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் அனைவரும் சஞ்சாயிகா திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

சஞ்சாயிகா திட்டம் செயல் படுத்தப்படாத அனைத்துப் பள்ளிகளிலும், இவ்வாண்டில் திட்டம் துவக்கப்பட மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரியின் மூலம் முனைப்பு இயக்கம் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

**—மு. அண்ணாமலை**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம்**

★ தேசமோ மக்களோ முன்னேற வேண்டுமானால் அறிவும் விஞ்ஞான தத்துவமும் ஒழுக்கமும் முன்னேற்றமடைந்தாக வேண்டும்.

—தந்தை பெரியார்




மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தந்தை பெரியார் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் உடன் உள்ளனர் (24.12.90).

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். மாண்புமிகு அமைச்சர் பெரு மக்களும் உடன் உள்ளனர் (24.12.90).



# உலகத் திரைப்பட விழா!

**மாண்புமிகு பிரதமர் திரு. சந்திரசேகர் அவர்கள்**
**தமிழ்த் திரைப்பட வரலாற்று மலரை வெளியிடுகிறார்.**

ஜனவரித் திங்கள் 10-ஆம் நாள், உலகத் திரைப்பட விழா சென்னையில் துவங்கவிருக்கிறது. மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகர் அவர்கள், தமிழ்த் திரைப்பட வரலாற்று மலரை வெளி யிடுகிறார். இந்தத் தமிழ்த் திரைப் பட வரலாற்று மலரைத் தயாரிக்கும் குழுவிற்குத் திரு. ஏ.வி.எம். சரவணன் தலைவராக இருப்பார். பல நாடு களைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற இயக்குநர்களும், நடிக-நடிகையரும், கலையுலகப் பிரமுகர்களும் இந்த விழாவில் கலந்து கொள்ளவிருக் கிறார்கள்.

மிகச் சிறந்த பல மொழிப் படங்களும் இவ்விழாவின்போது திரையிடப்படும்.

'இவ்விழாவின் போது, தமிழ்த் திரைப்பட வரலாற்று மலரை வெளி யிட வருகை தரவேண்டும்' என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விடுத்த அழைப்பை, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

இந்த விழா ஏற்பாடுகள் குறித்து ஆலோசிப்பதற்காக உலகத் திரைப் பட விழா அமைப்புக்குழுவின் இரண்டாவது கூட்டம் 17.12.90 அன்று சென்னையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. சுபோத்காந்த் சகாய் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்

22-வது உலகத் திரைப்பட விழா வின் தலைமை விருந்தினராக, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இருந்து பெருமைப் படுத்த வேண்டுமென அக்கூட்டத் தில் மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். இதனை, மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

'தமிழ்த் திரையுலகிற்குக் கலைஞர் அவர்கள் ஆற்றியுள்ள இணையற்ற சேவையைக் கருதியும், திரையுல கிற்குப் பெருந்தொண்டாற்றியவர் களின் வரிசையில் புகழ்பெற்ற வசன கர்த்தாவாக அவர் திகழு வதாலும் - கலைஞர் அவர்களைத் தலைமை விருந்தினராக இருக்கும் படி கேட்டுக் கொள்ளுவது என்று இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது' என்று மத்திய செய்தி ஒலிபரப்புத் துறையின் இணைச் செயலாளர் திரு. இலட்சுமி நாராயணன் அவர்கள் செய்தியாளர்களிடையே பேசுகை யில் தெரிவித்தார்.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர் சிறப்பு விருந்தினர்**

1986-இல், ஐதராபாத்தில் நடை பெற்ற உலகத் திரைப்பட விழாவில் பிரபல இந்தி நடிகர் ராஜ்கபூரும் - 1988-இல் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற உலகத் திரைப்பட விழாவில் பிரபல இயக்குநர் திரு. மிருணாள் சென்னும் - 1990-இல், கல்கத்தாவில் நடைபெற்ற உலகத் திரைப்பட விழாவில் பிரபல இயக்குநர் திரு. சத்யஜித்ரேயும் தலைமை விருந்தினராகச் சிறப்பிக் கப்பட்டார்கள்; அந்த வகையிலேயே, 1991-ஆம் ஆண்டின் துவக்கத்தில், சென்னையில் நடைபெறும் உலகத் திரைப்பட விழாவில் மாண்புமிகு கலைஞர் அவர்கள் தலைமை விருந் தினராகச் சிறப்பிக்கப்படவிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

17.12.90 அன்று, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த 22-வது உலகத் திரைப்பட விழா அமைப்புக் குழுவின் இரண்டாவது கூட்டத்தில், மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களும் கலந்து கொண்டார்.

மேலும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டோர் விவரம் வருமாறு:

திரு. எம்.எம். இராஜேந்திரன், இ.ஆ.ப., அரசு தலைமைச் செயலர், திரு. சுரேஷ் மாத்தூர், மத்திய செய்தி ஒலிபரப்புத் துறைச் செயலர், திருமதி ஜெயந்தி, இ.ஆ.ப., செயலர், செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, திரு. க. முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை. திருமதி தீபக் சந்து, இயக்குநர், திரைப்படங்கள்- ஆகியோரும், திரு. டி. ராமானுஜம், திரு. அப்பச்சன், திரு. ஜி. வெங்கடேசன், திரு. ஏ.வி.எம். சரவணன், திரு. கே. பாலசந்தர், திரு. கோவைச் செழியன், திரு. கமல்ஹாசன், திரு. சாவி விஸ்வநாதன், திரு. வலம்புரி சோமநாதன், திரு. பாலு மகேந்திரா, திரு. தியாகராஜன் (ஆர்ட் டைரக்டர்), திரு. ஏ. கோதண்டராம ரெட்டி, திருமதி பி. பானுமதி, திரு. ஏ.எஸ். பிரகாசம், திரு. பி. துரை, தலைவர், காவல் துறை, திரு. கே.கே. ராஜசேகரன் நாயர், சென்னை மாநகரக் காவல் துறை ஆணையர் ஆகியவர்களும் மற்றும் பல உயர் அலுவலர்களும் கலந்து கொண்டார்கள்.













# உலகச் சுற்றுலா ஆண்டு-1991

**உ**லகச் சுற்றுலா ஆண்டாக 1991-ஆம் ஆண்டு கொண்டாடப்பட விருக்கிறது. விசிட் இந்தியா91 என்ற பெயரில, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அந்த ஆண்டைக் கொண்டாடச் சுற்றுலாத் துறை திட்டமிட்டு உள்ளது.

இதற்காகத் தமிழக அரசின் சுற்றுலாத்துறை, சிறப்பான பல ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. இதையொட்டி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.கே.பி.கந்தசாமி அவர்கள் தொழில் அதிபர்கள், வர்த்தகச் சுற்றுலா ஏஜென்சிப் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் ஆகியோருடன் 20-12-90 அன்று தலைமைச் செயலகத்தில் ஆலோசனை நடத்தினார்.

சுற்றுலா வாரியத் தலைவர் திரு. வி. ரெங்கசாமி, இ.கா.ப. செய்தி-சுற்றுலாத்துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி, இ.ஆ.ப., சுற்றுலாத்துறை இயக்குநர் திருமதி. சிவகாமி, இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர் திரு. செல்வம், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. சூசன் மாத்யூ, இ.ஆ.ப., பொதுத்துறைச் செயலாளர் திரு. நரேஷ் குப்தா இ.ஆ.ப., ஆகியோரும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

செய்தி சுற்றுலாத்துறைச் செயலாளர் திருமதி. ஜெயந்தி இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசிய போது, 'விசிட் இந்தியா' திட்டம் குறித்து விளக்கினார். அவர் பேசுகையில், "ரூ.700 கோடி செலவில் 65 சுற்றுலாத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. சுற்றுலா காம்ப்ளக்ஸ், யாத்திரா நிவாஸ் போன்றவை இவற்றில் அடங்கும். தமிழ்நாட்டில் இந்த வசதிகள் "விசிட் இந்தியா" ஆண்டில் 2,400 ஆக இருக்கும். மேலும் மத்திய அரசு அனுமதித்து உள்ள 4 சுற்றுலா மாளிகைகளில் வசதிகள் அதிகரிக்கப்பட்டு உள்ளன" என்றார்.

**பொங்கல் விழா:-**

1991-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவரும் விழாக்களில் பொங்கல் விழாவும், சித்திரைத் திரு விழாவும் குறிப்பிடத்தக்கவை. மதுரை அருகே அலங்காநல்லூரில் நடக்கும் ஜல்லிக்கட்டு, மகாபலிபுரத்தில் நடக்கும் கட்டுமரம், படகுப் போட்டி ஆகியவை சிறப்பு வாய்ந்தவையாக இருக்கும். மதுரையில் சித்திரைத் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படும்.

பிப்ரவரி மாதம் 9-ஆம் தேதி முதல் 19-ஆம் தேதி வரை மாமல்லபுரத்தில் நடன விழாவும், மற்றும் அதையொட்டி நடக்கும் உணவு விழா, கைவினைப் பொருட்கள் விழாக்களும் கவர்ச்சிகரமாக நடைபெறும்.

திருச்சி மலைக்கோட்டையில் ஏறகெனவே மின்விளக்கு அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. அதுபோன்று, கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறையும் ஒளிவிளக்குகளால் எழிலுற அலங்கரிக்கப்படும்.

கன்னியாகுமரியில் 'பழைய தாமிரபரணிப் படகு' மாற்றப்பட்டு

புதிய படகுப் போக்குவரத்து விடப் படும்.

**வண்ண விளக்கு அலங்காரம்**

சென்னையில் கீழ்க்கண்ட கட்டடங் களில் வண்ண விளக்கு அலங்காரம் செய்ய, அக்கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் ஒப்புதல் தெரிவித்தனர். அவை வருமாறு:-

1. புனித ஜார்ஜ் கோட்டை 2. போர் நினைவுச் சின்னம் 3. வள்ளுவர் கோட்டம் 4. சென்னைப் பல்கலைக்கழக வளாகம் 5. புனித தாமஸ் கதீட்ரல் பசிலிகா 6. தென்னக ரெயில்வே வளாகம் 7. மியூசியம் - ஆர்ட் காலரி 8. போக்குவரத்துக் குடைகள் 9. உயர் நீதி மன்றம் 10. ரிப்பன் கட்டடம் 11. லைட் ஹவுஸ் 12. ஐஸ் ஹவுஸ் 13. மாநிலக் கல்லூரி 14. தேர்வு மண்டபம் 15. ஐ.ஜி. ஆபிஸ் 16. புனித ஆன்ட்ரூஸ் சர்ச் 17. எழும்பூர் ரெயில்வே வளாகம் 18. சென்ட்ரல் ரெயில்வே வளாகம் 19. முக்கியக் கோவில் கோபுரங்கள் 20. நினைவுச் சின்னங்கள் 21. அண்ணா சாலை யில் உள்ள முக்கிய கட்டடங்கள்.

அண்ணாசாலையில் உள்ள பூம்புகார் கட்டடத்தில் விளக்கு அலங்காரம் செய்ய அந்த நிர்வாகம் சம்மதித்து உள்ளது.

சாந்தோம் சர்ச் மற்றும் விக்டரி ஹவுஸ் கட்டடங்களை ஒளிவிளக்கு களால் அலங்கரிக்க வி.ஜி.பி குரூப் தலைவர் வி.ஜி. சந்தோசம் சம்மதித் துள்ளார்.

அண்ணாசாலையில் உள்ள 'ஹிக்கின் பாதம்ஸ்' மற்றும் தங்கள் நிறுவனக் கட்டடங்களில் விளக்கு அலங்காரம் செய்ய அமல்கமேஷன் குரூப் நிறுவனம் சம்மதித்திருக்கிறது.

டிசம்பர் 31-ஆம் தேதி ஜனவரி முதல் தேதி ஆகிய நாட்களிலும் மற்றும் உலகப் பட விழாவைத் தொடர்ந்து ஜனவரி 10-ஆம் தேதி முதல் 20-ஆம் தேதி வரையும் விளக்கு அலங்காரம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

இவை தவிர சாலை வசதி, போக்குவரத்து வசதி மற்றும் சுற்று லாத்துறையில் வர்த்தக நிறுவனங் களை ஈடுபடுத்தி ஹாங்காங் நாட்டைப் போலச் சிறப்பான ஏற் பாடுகளைச் செய்வது, பொங்கலுக் குச் சிறப்பு ரெயில் விடுவது போன் றவை குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

பூங்கா அமைத்தல், சாலை களைத் தூய்மைப்படுத்துதல், டாக்சி சர்வீசை அபிவிருத்தி செய்தல் போன்றவை குறித்தும் ஆலோசிக்கப் பட்டது.

'விசிட் இந்தியா 1991' சுற்றுலா ஆண்டை வெற்றிகரமாக்கிடவும், சென்னை நகரை அழகுபடுத்தவும் எல்லா நிறுவனங்களும் ஒத்துழைப் பு தர மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கே.பி. கந்தசாமி அவர்கள் கேட்டுக் கொண்டார்.

---

# நூல் நயம்

**மருத்துவக் கல்வி உலகில் தமிழர்கள்**

**ஆசிரியர்: பேராசிரியர் டாக்டர் ஜே.ஜி.கண்ணப்பன்**

**கிடைக்குமிடம்:**

செண்பகம் இல்லம்,
டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை,
சென்னை-600 004.

விலை:ரூ.100 பக்கம்:135

"**த**மிழர்கள் பல சிறப்பான படைப் புகளைச் சாதித்துள்ளார்கள். எனினும், அவர்களுடைய படைப்புகள் வரலாற்று வாயிலாகக் காப்பாற்றப்படவில்லை. ஆங்காங்கே கிடைக்கும்-கிடைக்கின்ற பொருள்களிலிருந்து தொன்மையினை உணர்கின்றோம். ஆகையினால், வரலாறு அழியா வண்ணம் சிறப்பாக எதிர்காலத் திலும் வரலாறு நிலைத்து நிற்பதற்கு நூல்கள் தேவைப்படுகின்றன" என்று கூறும் இந்நூலாசிரியர், அதை நிறை வேற்றுகிற வகையிலே இந்நூலைப் படைத்துள்ளார்.

தமிழ் பிறந்த காலத்திலேயே மருத் துவம் பற்றித் தமிழ் இலக்கியங்களில் கண்ட கருத்துக்களை நூலின் தொடக் கத்திலே விளக்கிக் கூறுகிறார் ஆசிரியர்.

கடந்த ஒரு நூற்றாண்டின் புதிய மருத்துவப் பணியில் தொண்டாற்றிய ஏழு மருத்துவ அறிஞர் பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகள் நூலில் இடம் பெற்றுள்ளன.

டாக்டர் எம். ஆர். குருசாமி முதலியார், டாக்டர் எம்.ரங்காச்சாரி, டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், டாக்டர் டி.வி. சிவானந்தம், டாக்டர் கே.எஸ். சஞ்சீவி, டாக்டர் இரத்தின வேலு சுப்பிரமணியம், டாக்டர் லலிதா காமேஸ்வரன் ஆகியோரின் அரிய மருத்துவத் தொண்டுகள், சிறப்பியல் புகள் எல்லாம் நூலில் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. எளிய இனிய நடை நூலுக்கு அணி சேர்க்கிறது.

எல்லாத் திறத்தாரும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய பயனுள்ள நூல்.

—பி.வி.கிரி

**என் பக்கம்**

**ஆசிரியர்: ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்,**

**வெளியிட்டோர்:**

**சுதா பதிப்பகம்,**
**4, முத்து முதலித் தெரு,**
**சென்னை-600 007.**

**விலை:ரூ.10 பக்கம்:104**

**'கவிதை உறவு' என்னும் திங்களிதழில் தொடர்ந்து எழுதி வந்த கடைசிப் பக்கக் கட்டுரைகளே இத்தொகுப்பு.**

இன்றைய சமுதாயப் பிரச்சினை களைப் பல கட்டுரைகளிலே அலசுகிறார். **மனித வாழ்க்கையில் பின்னிப் பிணைந் துள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சாடி, அவற்றைப் போக்க வழி வகையும் கூறு கிறார். சமுதாய வீதியில்** நாம் சந்திக்கும் பல மனிதர்களைப் படம் பிடித்துக் காட்டி யிருப்பது, நூலாசிரியரின் எழுத்தாற்ற லுக்குச் சான்றாகும். என்றோ, எப்போதோ எழுதிய கட்டுரைகள் என்றாலும், என்றைக்கும் பொருந்தும்படியான கருத்துக்கள் பொதிந்துள்ள கட்டுரைகளாக அவை விளங்குகின்றன. பலரும் படித்துப் பயன் பெறத்தக்க சொல் மாலைகள்.

— பி.வி.ஜி.

**புதிய உதயம்**

**ஆசிரியர்:பேராசிரியர் பழநி.**

**வெளியிட்டோர்:**

**புதுமை இல்லம்,**
**2/90 N3,**
**பாரதிதாசன் வீதி, பாகாயம்,**
**வேலூர்-632 002.**

**பக்கம்:80 விலை:ரூ.12**

**சின்னச் சின்னப் புதுக் கவிதைகள் பல, சிங்காரமாகக் கோக்கப்பட்டுள்ள** கதம்பமே இந்தப் புதிய உதயம்.

**சில அருமையான செய்திகள் இந் நூலில் மிக அழகாகச் சொல்லப்பட்டிருக் கின்றன. மாம்பழத்தைச் சுவைக்கிறபோது அதனுள்ளே பூச்சி இருப்பது தெரிந்தால் எப்படியிருக்கும்? அப்படிப்பட்ட உணர்வை நமக்கு உண்டாக்கி விடுகின்றன சில கவிதைகள். உதாரணம்: 'தெரிவது ஒன்று புரிவது ஒன்று'; 'எனது மத்தியப் பிரதேசம்'; 'இந்திரன்'**

# தமிழ்நாடு மின்சார வாரியம்
# மேட்டூர் அனல் மின் திட்டம்

1-0) கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வரிசை எண். | வேலையின் பெயர் | ஒபபந்த எண். | ஒப்பந்தப் பிரதியின் விலை |
|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. |
| 1. | மேட்டூர் தொட்டில்பட்டி அனல் மின் நிலைய குடியிருப்பு வளாகத்தில் 3 தொகுதிகள் 'Q' டைப் குடியிருப்புகள் (மின் இணைப்பு உட்பட கட்டுதல்) | SE/CII/MIPP/ 2274/90-91 | தமிழ்நாட்டிற்குள் ரூபாய் 300/-. தமிழ்நாட்டிற்கு வெளியே ரூபாய் 330/ |
| 2. | மேட்டூர், தொட்டில்பட்டி அனல்மின் நிலைய குடியிருப்பு வளாகத்தில் 6 தொகுதிகள் 'R' டைப் குடியிருப்புகள் (மின் இணைப்பு உட்பட) கட்டுதல் | SE/CII/MIPP/ 2275/90-91 | தமிழ்நாட்டிற்குள் ரூ.300/- தமிழ்நாட்டிற்கு வெளியே ரூ.330/- |
| 3. | மேட்டூர், தொட்டில்பட்டி அனல்மின் நிலைய குடியிருப்பு வளாகத்தில் 7 பகுதிகள் 'R' டைப் குடியிருப்புகள் (மின் இணைப்பு உட்பட) கட்டுதல் | SE/CII/MIPP 2276/90-91 | தமிழ்நாட்டிற்குள் ரூ.300/- தமிழ்நாட்டிற்கு வெளியே ரூ.330/- |
| 4. | மேட்டூர் அனல் மின்திட்ட வளாகத்தில் இரண்டு இயந்திரவியல் பராமரிப்பு அலுவலகங்கள் கட்டுதல் | SE/CII/MIPP 2277/90-91 | தமிழ்நாட்டிற்குள் ரூ.300/- தமிழ்நாட்டிற்கு வெளியே ரூ.330/- |
| 5. | மேட்டூர் நகரியத்தில் பிளாக் நெ.இல் 3 தொகுதிகள் 'எஸ்' டைப் குடியிருப்புகள், மேட்டூர் அனல்மின் திட்டத்திற்காகக்கட்டுதல் (மின் இணைப்பு வேலை உட்பட) | SE/CII/MIPP/ 2278/90-91 | தமிழ்நாட்டிற்குள் ரூ.300/- தமிழ்நாட்டிற்கு வெளியே ரூ.330/- |
| 6. | மேட்டூர் நகரியத்தில் பிளாக் நெ.இல் 7 தொகுதிகள் 'Q' டைப் குடியிருப்புகள், மேட்டூர் அனல் மின் திட்டத்திற்காகக் கட்டுதல் (மின் இணைப்பு வேலை உட்பட) | SE/CII/MIPP/ 2279/90-91 | தமிழ்நாட்டிற்குள் ரூ.300/- தமிழ்நாட்டிற்கு வெளியே ரூ.330/- |

(2.0) ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் மேலே குறிப்பிட்ட தொகையினை பதிவு அஞ்சல் மூலமாகவோ அல்லது பணமாகவோ ஒப்பந்த எண்ணைக்குறிப்பிட்டு கணக்கு அதிகாரி (Accounts Officer) மேட்டூர் அனல் மின் திட்டம், மேட்டூர் மின் அமைப்பு வளாகம், மேட்டூர் அணை-1 அவர்களுக்குச் செலுத்தி பெறப்பட்ட வாரிய இரசீதை இணைத்து கீழே குறிப்பிட்டுள்ளவர்களின் அலுவலகத்திற்கு விண்ணப்பித்துக்கொள்வதன்மூலம் பெற்றுக் கொள்ளலாம். தாமதமாகப்பெறப்படும் ஒப்பந்தங்களும், வைப்புத்தொகை இன்றிப்பெறப்படும் ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் நுண்கலை உதவியாளர் (Exe.Assistant to SE/Civil II/MIPP) அவர்களால் பெறப் படும். ஒப்பந்தங்கள் Russian Erectors Quarters-ல் திறக்கப்படும்.

(3.0) மேலே குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளி வரிசை எண் 2,3,5 மற்றும் 6 ஆகியவை இரண்டு பகுதிகளடங்கிய ஒப்பந்த முறையில் சமர்ப்பிக்க வேண்டும். இதைப்பற்றியமேலும் விபரங்கள்ஒப்பந்தப்படிவத்தில் கொடுக்கப்பட்டு உள்ளது.

(4.0) அஞ்சல் மூலம் அனுப்பும் ஒப்பந்தப்பிரதிகள் காணாமல் போனாலோ அல்லது காலதாமதமானாலோ அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

(5.0) ஒப்பந்தப் பிரதிகள் மாற்றத்தக்கதல்ல.

# மேட்டூர் அணை

| வைப்புத்தொகை 5 | ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கு கடைசி தேதியும் நேரமும் 6. | ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதியும், நேரமும் 7. | ஒப்பந்தத்தின் உத்தேச மதிப்புத் தொகை 8. | குறிப்பு 9. |
|---|---|---|---|---|
| ரூபாய் 18,600/- | 11.1.91 (வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி) | 11.1.91 (வெள்ளிக்கிழமை) மாலை 3.30 மணி அளவில்) | ரூ.18,54,400/- | ஒரு பகுதி ஒப்பந்தப் புள்ளி |
| ரூ.39,000/- | 23.1.91 நண்பகல் புதன்கிழமை 12.00 மணி | 23.1.91 புதன்கிழமை மாலை 3.30 மணி அளவில் | ரூ.38,88,210/- | இரண்டு பகுதிகளடங்கிய ஒப்பந்தப் புள்ளிமுறை |
| ரூ.45,400/- | 23.1.91 நண்பகல் புதன்கிழமை 12.00 மணி | 23.1.91 புதன்கிழமை மாலை 3.30 மணி அளவில் | ரூ.45,36,245/- | இரண்டு பகுதிகளடங்கிய ஒப்பந்தப் புள்ளிமுறை |
| ரூ15,500/- | 25.1.91 நண்பகல் வெள்ளிக்கிழமை 12.00 மணி | 25.1.91 வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணி அளவில் | ரூ.15,50,000 | ஒரு பகுதி ஒப்பந்தப் புள்ளி |
| ரூ.27,000/- | 30.1.91 நண்பகல் புதன்கிழமை 12.00 மணி | 30.1.91 புதன்கிழமை மாலை 3.30 மணி அளவில் | ரூ.27,00,000/- | இரண்டு பகுதிகளடங்கிய ஒப்பந்தப் புள்ளிமுறை |
| ரூ.40,000/- | 1.2.91 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி | 1.2.91 வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணி அளவில் | ரூ.39,76,000/- | இரண்டு பகுதிகளடங்கிய ஒப்பந்தப் புள்ளிமுறை |

(6.0) ஒப்பந்தப் பிரதிகளை அஞ்சல் மூலம் பெற விரும்புவோர் ஒவ்வோர் பிரதிக்கும் ரூபாய் ஐம்பது சேர்த்து அனுப்ப வேண்டும்.

(7.0) குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்கு மின் வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காமல் எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்க இவ்வலுவலகத்திற்கு முழு உரிமை உண்டு. விற்பனைக்குள்ளாகும் ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையும் தேவை என கருதுகின்றபோது தளர்த்தவும் கைவிடவும் உள்ள உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே உரியது.

(8.0) ஒப்பந்தப் புள்ளிகள் விற்பனை, ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளப்படும் நாளின் முதல் நாள் மாலை 5.00 மணிக்கு நிறுத்தப்படும்.

முதன்மைப்பொறியாளர்
மேட்டூர் அனல் மின் திட்டம்/மேட்டூர் அணை

DIPR/354/SLM/90.



# வேடந்தாங்கல்

'பறவைகள் பலவிதம்... ஒவ்வொன்றும் ஒருவிதம்!' என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். எல்லாவற்றையும் பார்த்திருக்கிறோமா? அப்படிப் பார்க்க விரும்புகிறவர்கள்-வேடந்தாங்கலுக்கு வரலாம்!

சென்னை மாநகருக்குத் தெற்கே 85-வது கிலோ மீட்டர் தொலைவில்-செங்கை அண்ணா மாவட்டத்தில், இயற்கை கொலுவிருக்கும் ஏரிப் பகுதிக் கிராமம்தான் வேடந்தாங்கல்.

மீனும், இறாலும், நண்டும்,நத்தையும் மட்டுமல்ல; வேடந்தாங்கல் நீர்ப் பரப்பில் கடப்பை மரங்கள், கருவேல மரங்கள், ஓங்கி நிற்கும் மூங்கில் புதர், வேலிகாத்தான்-நாணலெல்லாம்கூட இஷ்டத்துக்கு அங்கிங்கெனாதபடி எங்கும் வளர்ந்துள்ளன. வேடந்தாங்கல் ஏரியின் பரப்பளவு-73.06 ஏக்கர் ஆகும். இவற்றால் மட்டும் வேடந்தாங்கலுக்குப் பெருமையா என்றால் அதுதான் இல்லை.

ஒவ்வோராண்டும் அக்டோபர் முதல் இங்கு ஒரு புதிய சீசன் தொடங்குகிறது எனலாம்; ஆம்; அப்போதுதான் ரஷ்யா, சைபீரியா போன்ற பல தொலைதூர நாடுகளிலிருந்தெல்லாம்கூட இங்கே பலவிதப் பறவைகள் பயணம் வருகின்றன. இங்கு வரும் பறவைகளில் பெரும்பாலானவை ஐரோப்பியக் கண்டத்தைச் சேர்ந்தவை என்கிறார்கள் பறவையியல் நிபுணர்கள்.

நத்தைக் கொத்தி, நீர்க்காகம், துடுப்பு நாரை, அரிவாள் மூக்கன், மூக்குளிப்பான், குள்ளத்தாரா, சிறு சிறகி, கூழைக்கடா, ஜம்புக்கோழி, உப்புக்குருவி, கானாங்கோழி, கொக்கு-வாத்து வகையறாக்கள் போன்ற நம் நாட்டுப் பறவைகளும்-அந்த அயல்நாட்டுப் பறவைகளோடுகூடி, எழுப்பும் மகிழ்ச்சி ஆரவாரம் கண்கொள்ளாக் காட்சியாகும்!

ஆண்டுதோறும் நடக்கும் இந்தப் பறவைகள் கண்காட்சியைக் காண, மக்கள் சாரிசாரியாக வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். வருகிற மக்கள் ஏரிக்கரையிலேயே சுற்றிக் கொண்டிருந்துவிட முடியுமா? சிறிது நேரமாவது தங்கி இளைப்பாறிச் செல்லுவதற்காக வேடந்தாங்கலில் ஒரு ஓய்வில்லமும் வனத்துறை மூலம் அமைக்கப்பட்டுள்ளது. மிகக் குறைந்த வாடகைதான்!

ஏரிக்கரையோரத்தில், நெடுங்கோபுரம் ஒன்றும் நிமிர்ந்து நிற்கிறது. அங்கு வரும் பார்வையாளர்கள், அதன் மீதேறி 'பைனாகுலர்' மூலம் முழு ஏரிப் பரப்பையும், மாநாடுபோல் கூடும் பலவிதப் பறவைகளின் கூட்டத்தையும் கண்டுகளிக்க முடியும்.

இசை விழா நடக்கும் இந்நாளில்-அங்கே பல நாட்டுப் பறவையினங்களும் ஒன்றுகூடி நடத்தும் ஒருமைப்பாட்டு இசையரங்கம் காண்போர்தம் உள்ளம் கவர்வதாகும்!

**நான்காவது அட்டை:**
**புகைப்படம் உதவி:**

**சுற்றுலாத்துறை**

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

அதி நவீன பாலியெஸ்டர் வகைகள்




உங்கள் மனதைக் கவர்ந்தவை மலர்கள்.
அவைகளின் அற்புத வண்ண ஜாலங்களை
உங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது,
மிக நவீனமாக அழகு மிளிரும்
பாலியெஸ்டர் புடவை வகைகளில்!

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

Licence No. TN/MS(C)/PP-23

